
நன்றி - நூலகத்திட்டம்

# சரிநிகர்

இதழ் 177 ஒகஸ்ட்05 - ஒகஸ்ட்18 1999 விலை ரூபா 10/=



## பாலசிங்கமோ திலகரோ அல்ல பிரபாகரன் சொல்ல வேண்டும்!

நேர்காணல்: அமைச்சர் அஷ்ரஃப்



## தொடரும் அரசியற் படுகொலைகள்!

நன்றி - நூலகத்திட்டம்



## பாதைதிறப்பு: அரசின் இராஜதந்திரம்

வன்னிப் பகுதிக்கான பாதை ஒன்றைத் திறக்கும் விடயம், இப்போது சர்வதேச விவகாரமாக மாறி விட்டுள்ளது. ஒகஸ்ட் 2ம்திகதி திங்களன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு தெளிவாக எடுத்துக் காட்டியது. வன்னிப் பகுதிகளின் இன்றைய நிலைமைகள் தொடர்பாக வெளிநாட்டுத் துதுவர்கள், இராஜதந்திரிகளுக்கு வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், வன்னிப் பிராந்திய தளபதியும், இராணுவ பிரதம அதிகாரியுமாகிய மேஜர் ஜெனரல் பலகல்லவும் முதலில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

அதன் பின்னர் வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில், வன்னிப் பகுதிக்கான பாதை ஒன்றைத் திறப்பதற்காக, 5 மார்க்கங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் ஊடாக நிபந்தனைகள் எதுவுமற்ற நிலையில் பாதையைத் திறக்கலாம் என்று இராணுவத்தினரால் விடுதலைப் புலிகளுக்கு அன்று காலை தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அனுப்பப்பட்டுள்ள இந்தத் தகவலில்,

1. வவுனியா-பூவரசங்குளம்-மூன்றுமுறிப்பு ஊடாக துணுக்காய்க்கு
2. வவுனியா-மாங்குளம் ஊடாக துணுக் காய்க்கு.
3. வவுனியா-மாங்குளம் பிரதான வீதி ஊடாக கிளிநொச்சிக்கு
4. வவுனியா-மாங்குளம்-ஒட்டுசுட்டான் ஊடாக புதுக்குடியிருப்புக்கு.
5. வவுனியா-மாங்குளம்-ஒட்டுசுட்டான் ஊடாக முல்லைத்தீவிற்கு.

வன்னிப் பகுதிக்குரிய பாதையைத் திறக்கலாம் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதை திறப்பில், புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 5 கிலோ மீற்றர் நீளமும், ஒரு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட பிரதேசம் குடிமக்கள் பாதுகாப்புப் பிரதேசமாக இருக்கும். இதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அந்தப் பகுதியைப் பாதுகாப்புப் பிரதேசமாக இராணுவம் பேணி நடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய், கிளிநொச்சி, புதுககுடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய விடுதலைப் புலிகளின் கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களைக் கருத்திற்கொண்டே, பாதை திறப்பது தொடர்பான புதிய ஆலோசனைகளை இராணுவம் தெரிவித்துள்ளது தெளிவாகத் தெரிகிறது. உண்மையில், பொதுமக்கள் வசதியாகப் பிரயாணம் செய்ய வேண்டும், அவர்களுக்குரிய உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இலகுவில் போய்ச்சேர வேண்டும் என்ற எண்ணம் (இந்த மார்க்கங்களை நோக்கும் போது) இராணுவத்திற்கு இருப்பதாகத் தெரியவில்லை. இந்த வன்னிக்கான பாதைத் திறப்பு என்பது வன்னிப்பகுதி மக்களின் நன்மைகளை முழுமையான அடிப்படை நோக்கமாகக் கொண்டதாகத் தெரியவில்லை. வன்னிப் பகுதியைப் பொறுத்தமட்டில், பொதுமக்களுக்கான போக்குவரத்திற்காகவும், வன்னிப்பகுதிக்குரிய அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்களை அனுப்பி வைப்பதற்குரிய விநியோக நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்த பாதை ஊடாகவே, இராணுவம் தனது முன்னேற்ற நடவடிக்கைகளைமேற்கொண்டு வந்துள்ளது. வன்னிப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின்



கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகளை இராணுவம் கைப்பற்றுவதற்கு வன்னிப்பகுதிக்கான போக்குவரத்துப் பாதை ஊடான இராணுவ நகர்வுகள் படைகளுக்கு சாதகமானதாக அமைந்திருக்கின்றன. கடந்த கால இராணுவ முன்னேற்ற நிகழ்வுகளை மீண்டும் பார்ப்பவர்களுக்கு இது நன்கு புலப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இந்திய அமைதிப்படையினர், இலங்கையை விட்டு வெளியேறியதன் பின்னர், பிரேமதாசா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இருந்த உறவு முறிந்தவுடன் ஆரம்பமாகிய யுத்த நிலைமைகளின் போது, வன்னிப்பிரதேசம் உட்பட் வடபகுதிக்கான பொதுமக்களுக்குரிய பாதை அமைந்திருந்த தாண்டிக்குளம் தொடக்கம், இப்போது கடைசியாக பாவனையில் இருந்த மன்னார் மாவட்டத்தில் உள்ள பாப்பாமோட்டை ஊடான பாதைகளிலேயே இராணுவம் தனது முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

தாண்டிக்குளத்தின் ஊடாக இருந்த போக்குவரத்துப் பாதையின் ஊடாக முன்னேறிச் சென்றதன் மூலம் தான் நொச்சிமோட்டைப் பகுதி கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர், நொச்சிமோட்டை ஊடாக வன்னிக்கான பாதை திறக்கப்பட்டு செயற்பட்டு வந்த வேளையில், மிகவும் பிரசித்தமான ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் முக்கியமான இராணுவ நகர்வு இந்தப் பகுதியில் இருந்தே 1997 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின்னர், மன்னார் மாவட்டத்தின் உயிலங்குளம் ஊடாகப் பொதுமக்களுக்குரிய போக்குவரத்துப் பாதையும், மடுக் கோவிலுக்குச் செல்கின்ற வீதிவழியாக உணவு விநியோகத்திற்கான பாதையும் திறக்கப்பட்டிருந்தன. இந்தப் பாதைகள் இரண்டுமே, வன்னிப்பகுதிகளின் முக்கிய இடங்களாகிய கிளிநொச்சிக்கும், முல்லைத்தீவு ஆகியவற்றிற்குத் தூரம் மிகுந்ததாக இருந்தன. இதனால், ஜயசிக்குறு படை நடவடிக்கை இடம்பெற்ற வவுனியா- மாங்குளம் பிரதான வீதிக்குச் சமாந்தரமாக பூவரசங்குளத்தில் இருந்து துணுக்காய் பகுதிக்கு அமைந்துள்ள கிராமிய வீதியைப் போக்குவரத்திற்காகத் திறக்க வேண்டும் என்று நிவாரணப் பணியாளர்கள் தெரிவித்த யோசனையை இராணுவ அதிகாரிகள், தீர்க்கதரிசனமான இராணுவ நலன்களை உணர்ந்து ஏற்றுக் கொண்டார்கள். பல மில்லியன்கள் ரூபாவை பொதுமக்களின் நன்மைக்காகவும், யுத்தப்பிரதேசத்தில் சிக்கியுள்ளவர்களின் கஷ்டங்களைப் போக்கும் நல்நோக்கத்துடனும், இந்த வீதியைத் திருத்திச் செப்பனிடுவதற்காகச் செலவிடுவதற்கு யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனம் முன்வந்தது.

வீதித் திருத்தி அமைக்கப்பட்டு, கடந்த வருடத்தின் பிற்பகுதியில், இந்த மார்க்கத்தின் ஊடாக தொண்டர் நிறுவனங்களின் வாகனங்களும், அம்புலன்ஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இந்த வேளையில்தான் ரணகோஷ தொடர் இராணுவ நடவடிக்கை முதலில் பூவரசங்குளத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மடு வீதிவழியாக தொண்டர் நிறுவன வாகனங்களும், அம்புலன்ஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

பூவரசங்குளம் வழியாக முன்னேறிச் சென்ற இராணுவம், துணுக்காய் பகுதிக்குக் கிட்டவாக உள்ள மூன்றுமுறிப்பு வரையில் முன்னேறிச் சென்றது. அத்துடன் ரணகோஷ இராணுவ நடவடிக்கையின் முதலாம் கட்டம் முடிவடைந்தது. அதன் இரண்டாம் கட்ட முன்னேற்ற நடவடிக்கை மடு வீதிவழியாக மடுவை நோக்கி மேற்கொள்ளப்பட்டு, பூவரசங்குளம் - மூன்றுமுறிப்பு பாதை ஊடாகச்சென்று கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் இலகுவாக இணைக்கப்பட்டன.

இதனால் வன்னிப பிரதேசத்திற்கென, உணவு விநியோகத்திற்கும், தொண்டர் நிறுவனங்களின் பாவனைக்குமாக வெவ்வேறாக அமைந்திருந்த இரண்டு பாதைகளுமே மூடப்பட்டன. இதற்குக் காரணம் இராணுவத்தின் முன்னேற்ற நடவடிக்கையே அல்லாமல், விடுதலைப் புலிகளின் எந்தச் செயற்பாடுமல்ல. எஞ்சியிருந்த பொதுமக்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்த உயிலங்குளம் பாதைக்கு அருகிலேயே உணவு லொறிகளுக்கும், தொண்டர் நிறுவன வாகனங்களுக்குமான பாதை திறக்கப்பட்டது.

இந்தப் பாதையும் ரணகோஷ 4 இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் மூடப்பட்டு, உடனடியாகவே, புதிதாகக் கைப்பற்றப்பட்ட பாப்பாமோட்டை பகுதியூடாகப் புதிய பாதை திறக்கப்பட்டது. அது ஒரு வாரகாலம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி இப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இன்னுமொரு இராணுவ நடவடிக்கையின் மூலம் அது தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பல் முனை இராணுவ முன்னேற்றத்திற்குரிய வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு ஏதுவாகவே, திங்கட்கிழமை சர்வதேச ரீதியில் பாதை திறப்பு விடயம் பற்றிய அறிவித்தலை வன்னிப் பகுதிக்குரிய முக்கிய இராணுவ அதிகாரி ஒருவர், வெளிநாட்டு அமைச்சருடன் இணைந்து நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டுள்ளார்.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் மூலம் புஜ வலிமையைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுடன் மோதிய இலங்கையின் அரச படைகள் இப்போது, கைதேர்ந்த சாணக்கியத்துடன் இராஜதந்திரமான வியூகங்களை அமைத்து, அரசியல் ரீதியான ஒரு சதுரங்கப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தப் போராட்டத்தில், வன்னிப்பகுதிக்குரிய பாதை, அப்பகுதிகளைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்களுக்கான உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், அவசர நோயாளிகளுக்கான அம்புலன்ஸ் வண்டிச் சேவை, வன்னிப்பகுதி மாணவர்களின் கல்வி, வன்னிப்பகுதிகளில் இருந்து வவுனியா, மன்னார் நகரப் பகுதிகளுக்கு வந்து, தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் குடும்பங்களைப் பிரிந்தும், செலவுக்குப் பணமில்லாமல் கையேந்தி உணவு உண்கின்ற கஷ்ட நிலைமைகள் என்பன பகடைக்காய்களாக்கப்பட்டுள்ளன. கடந்த ஜுலை 28ம் திகதியன்று பொதுமக்களை வண்டிகளில் ஏற்றி அனுப்பி வைத்த மனிதாபிமான நடவடிக்கைக்கு புலிகள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்என்று பத்திரிகைகட்கு கொட்டை எழுதுதுச்செய்தி தந்தது அரசாங்கம். ஆனால்இந்தவிடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமோ புலிகளுடன் புலிகளுடன் பேச்சுவார்த்தை எதையும் தாம் செய்யவில்லை என்று அறிவித்ததுடன் அரசாங்கததின் பிரச்சாரம் பிசுபிசுத்தது.இப்போது புதிய பாதை அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. பாதை திறப்பின் நோக்கங்களைப் புரியாதிருக்கப் புலிகள் ஒன்றும் முட்டாள்கள் அல்லவே.

**ரீ.நாவுக்கரசன்**

## திருமலை தொடரும் குடியேற்றம்: தடுத்து நிறுத்துவார் யாருமில்லை?

முந்தைய சில மாதங்களைக் காட்டிலும் திருகோணமலை நகரில் பாதுகாப்பு கெடுபிடிகள் சற்று அதிகரிக்கப்பட்டுள்ளன. நகரத்தின் நுழைவாயிற் சோதனைச் சாவடிகளில் தீவிரமான சோதனைகள் நடத்தப்படுகின்றன. சந்திகளில் திடீர் திடீரெனத் தோன்றும் பொலிசார் வயது, பால் வேறுபாடுகளின்றி சகலரையும் மறித்து வரிசையாக நிற்கச் செய்து சோதனையிடுகிறார்கள்.

பாதுகாப்புத் தரப்பாரின் சோதனைகளுக்கு எந்நேரமும் உட்படத் தயார் என்று கனவான் ஒபப்ந்தம் செய்து கொண் மக்கள் எவ்வித சலனமும் இல்லாமல் மறித்த மறிப்புக்கும், இழுத்த இழுப்புக்கும் உடன்பட்டுப் போகக் கற்றுக் கொண்டுவிட்டதால் திருகோணமலை மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இவை எந்தவிதத்திலும் குந்தகமாக இருக்கவில்லை என்று தான் கூற வேண்டும். எனினும், இந்தச் சோதனைகளின் மூலம் எவராவது "பயங்கரவாதி" சிக்கினாரோ என்றால் இல்லையென்பது தான் பதில்.

நகர நிலைமை இவ்வாறிருக்க வடபுறத்தே ஆறு மைல் தொலைவில் உள்ள கடற்கரை கிராமமான சல்லியில் விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் ஜூலை 20 இரவு 8.30மணியளவில் மோதிக் கொண்டனர். தற்செயலாக எதிர் எதிராகச் சந்தித்துக் கொள்ள நேர்ந்ததால் இந்த மோதல் ஏற்பட்டதாக ஊர் மக்கள் கருதுகிறார்கள்.

சுமார் முப்பது நிமிடங்கள்வரை நீடித்த அம் மோதலில் எவருக்கும் பாரிய காயங்கள் ஏற்பட்டதாகக் கூடத் தெரியவில்லை. என்றாலும், அடுத்த நாட் காலை சந்திரன் என்றழைக்கப்படும் இளங்குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். பார்க்கப் போனால் மோதலில் உண்மையில் பாதிக்கப்பட்டவர் இவர் என்று தான் கூற வேண்டும்.

சல்லியில் இராணுவமும் பொலிஸாரும் இருந்த போதிலும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் தாராளமாகவே இருந்து வருகிறது. இது பாதுகாப்புத் தரப்பாரும் அறிந்த விடயமாகும். யானையும் யானையும் மோதினால் தகரைப்பற்றை நசுங்குவது போல் சந்திரன் பாதிக்கப்பட்டார் என்கின்றனர் ஊர் மக்கள்.

ஜூலை 23 பிற்பகல் மூதூர் நகர மத்தியில் சைக்கிளில் பொருத்தப்பட்ட குண்டொன்று வெடித்ததால் சமந்த என்பவர் காயமடைந்தார்.

### தவறும் திருத்தமும்

கடந்த இதழில் பக்கம் 7இல் கௌரி சுந்தரலிங்கம் அவர்களின் நேர்காணலில் அந்நிய இராணுவம் என இருப்பதை சிறீலங்கா இராணுவம் என்று திருத்தி வாசிக்கவும்.

இத்தவறினால் வாசகர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகிறோம்.

ஆ-ர்

நன்றி - நூலகத்திட்டம்



பாதை திறப்பு:


# அரசின் நோக்கமும் புலிகளின் மறுப்பும்

## சில பின்னணி தகவல்கள்

1992இன் ஆரம்பத்தில் பலாலி இராணுவ முகாமையும் அதனைச் சூழ உள்ள பகுதிகளையும் சுற்றிப் புலிகள் அமைத்திருந்த பாதுகாப்பு அரண்களினூடாக யாழ்.நகரை நோக்கி அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டிருந்தது. அப்போது யாழ்.குடாநாட்டின் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. காங்கேசன்துறைக்கு அண்மையாக உள்ள சேந்தாங்குளத்தினூடாக இப்பாதையைத் திறப்பதற்கான பேச்சுவார்த்தைக்குப் பொறுப்பாக இருந்தவர் மாத்தையா. அப்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பாதுகாப்பளிக்கப்பட்ட கப்பல்களில் அத்தியாவசியப் பொருட்கள், கொழும்பிலிருந்து காங்கேசன்துறைத் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டுக் கொண்டிருந்தன. காங்கேசன்துறைத் துறைமுகம் அதைச் சூழவுள்ள பிரதேசங்கள் பலாலி என்பன அப்போது இராணுவத்தினர் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இந்தப் பகுதிகளைச் சுற்றி புலிகள் மிகவும் பலமான பாதுகாப்பு அரண்களை உருவாக்கியிருந்தார்கள். காங்கேசன்துறைத் துறைமுகத்திலிருந்து யாழ்நகருக்கு அத்தியாவசியப் பொருட்களைச் செஞ்சிலுவைச் சங்கம் எடுத்துச் செல்வதென்றதால் புலிகள் ஒரு பாதுகாப்பான பாதையைத் திறக்க வேண்டும் என்று இராணுவம் கூறியது. இதனாலேயே புலிகளுடனும் இராணுவத்துடனும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் பேச்சுவார்த்தை நடாத்தத் தொடங்கியது. இராணுவத்துடன் கலந்துரையாடி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் உருவாக்கிய ஆலோசனைக்கு தனக்கு அன்றைக்கிருந்த விசேட அதிகாரத்தினைப் பயன்படுத்தி ஒப்புதல் அளித்தார் மாத்தையா. சில மாதங்களுக்குப் பின் இராணுவம் பலாலியிலிருந்து ஒரு படை நகர்வை மேற்கொண்டு தாக்குதலைத் தொடங்கி புலிகளை தெல்லிப்பளை நோக்கிப் பின்வாங்க வைத்ததுடன் வலிகாமம் வடக்கின் பெரும்பகுதியையும் கைப்பற்றிக் கொண்டது. இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் போது இராணுவம் சேந்தான்குளத்தினூடாக உருவாக்கப்பட்ட பாதுகாப்புப் பாதையினூடாகவே பலாலியிலிருந்தும் காங்கேசன்துறையிலிருந்தும் முன்னேறியது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒப்புக் கொண்டு இப்பாதையைத் திறக்க அனுமதி அளித்தமைக்காக புலிகளின் தலைமைப்பீடம் மாத்தையாவை வன்மையாகக் கண்டித்தது. அடுத்த வருடம் குடாநாட்டிற்கான ஒரு பாதுகாப்புப் பாதையை ஆனையிறவினூடாகத் திறக்கத் தயார் என அரசாங்கம் அறிவித்தது. ஐ.நா.மேற்பார்வையின் கீழ் பூநகரி இறங்குதுறையை மீளத்திறக்கும்படி எழுந்த நெருக்குவாரத்தைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த அறிவிப்பை விடுத்தது. இதுவும்கூட யாழ்ப்பாணத்திற்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதில் உள்ள சிரமங்கள் காரணமாகவே ஏற்பட்டது. 1993இன் ஆரம்பத்திலேயே இராணுவம் யாழ். குடாநாட்டுக்குப் போகும் எல்லாப் பாதைகளையும் மூடிவிட்டிருந்தது. ஆபத்தானதும் நிச்சயமற்றதுமான கிளாலிப்பாதை தான் எஞ்சிய ஒரே ஒரு பாதையாக இருந்தது. ஆனால் ஆனையிறவினூடான பாதைத் திறப்பைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களது உத்தியோகபூர்வப் பத்திரிகையில் இதற்கான காரணங்களைப் புலிகள் விளக்கியிருந்தார்கள். புலிகளின் நோக்கில் இராணுவம் இந்தப் பாதையைத் திறக்க விரும்பியதற்கு மூன்று காரணங்கள் இருந்தன.

1. புதியதொரு தாக்குதல் நகர்வை மேற்கொள்ள வசதியாக அந்தப் பாதையிலுள்ள கண்ணிவெடிகள் பொறிக்கிடங்குகள் மற்றும் அரண்கள் அகற்றப்படும்.
2. அப்பாதையால் உணவு லொறிகளிலிருந்து தமக்குத் தேவையானவற்றை இறக்கிக் கொள்வது. (ஆனையிறவு முகாமுக்கு வேண்டிய வழங்கல்களைப் பெற்றுக் கொள்வது அப்போது மிகவும் சிரமமாக இருந்தது.)
3. அப்பாதையால் செல்லும் பொதுமக்களிடமிருந்து புலிகளது நிலைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது.

திரும்பவும் 1994இல் பொ.ஐ.முன்னணி அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது ஒரு யுத்தநிறுத்தத்தைச் சாத்தியமாக்குவது தொடர்பான விடயங்களை விவாதிக்கையில் இந்த விடயம் ஒரு பிரச்சினையாக அமைந்தது. அதாவது இராணுவம் பலப்படுத்தியுள்ள நிலைகளைக் கடந்து செல்லும் பாதைகளும் சந்திகளும் அன்றைய பேச்சுவார்த்தையில் முக்கிய விவாதப் பொருட்களாக இருந்தன. ஒருபோர் முனையினூடாக மக்கள் போக்குவரத்துக்கான பாதுகாப்புப் பாதையைத்திறப்பதானால் சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் தமது முன்னரங்க நிலைகளிலுள்ள கண்ணி வெடி வயல்கள், பொறிகள், அரண்கள், வேலிகள் ஆகியவற்றை குறிப்பிடப்பட்ட பாதையிலிருந்து அகற்றப்பட வேண்டும். இது இலகுவான காரியம் அன்று. சிக்கல் நிறைந்தது. பொ.ஐ.முன்னணி அரசிற்கு 1994இல் இது பற்றி எந்தவித அறிவோ, தெளிவோ இருக்கவில்லை. கடந்த வருடம் வவுனியா மன்னார் பாதையில் உள்ள பூவரசங்குளத்தினூடாக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வேலை செய்யும் அரசசார்பற்ற நிறுவனங்களது வாகனங்கள் அம்புலன்ஸ் வண்டிகள் போன்றவை போய் வருவதற்கான ஒரு பாதுகாப்பான பாதைதிறக்கப்பட்டது. இந்தப் பாதை வவுனியா அரசாங்க அதிபரால் பெரும் பொருட்செலவில் திருத்தப்பட்டது. உயிலங்குளம், மடு ஊடாக புலிகளின்கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு சுற்றி வளைத்துச் செல்வதில் உள்ள சிரமங்களை குறைக்கும் நோக்குடனேயே இந்தப்பாதை அவரால் செப்பனிடப்பட்டது. பூவரசங்குளத்திலிருந்து இரணைஇலுப்பைக்குளம் ஊடாக மல்லாவிக்குச் செல்லும் இந்தப்பாதை திறக்கப்பட்டதை ஒரு சாதனை என்று வன்னிப் பகுதியில் வேலை செய்யும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பாராட்டின. பின்னர், இராணுவம் றணகோஷ நடவடிக்கையின் முதற்கட்டத்தை ஆரம்பித்த போது அதற்கு இப்பாதை மிகவும் வசதியாக அமைந்தது என்று புலிகள் தெரிவித்தனர். இப்பாதை செப்பனிடப்பட்டதே இரணை இலுப்பைக்குளத்தைக் கைப்பற்றி தனது நிலைகளைப் பலப்படுத்திக் கொள்ள இராணுவத்தினருக்கு இலகுவாக அமைந்தது என்று புலிகள் தெரிவிக்கிறார்கள். அடிப்படையில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களும் போக ஒரு பாதுகாப்பான பாதையை திறப்பது என்பது யுத்தப் பிரதேசத்தில் உள்ள நிலக்கண்ணி வெடிகள் பொறிக்கிடங்குகள், குகைகள், பதுங்கு குழிகள், பலப்படுத்தப்பட்ட அரண்கள் என்பவற்றை அகற்றுவதுடன் சம்பந்தப்பட்ட ஒரு சிக்கலான விடயமாகும். இவ்வாறு ஒரு பாதை திறக்கப்பட்டால் பின்னாளில் அது எதிரியின் படை நகர்வுக்கு பிரதான பாதையாகப் பயன்படுத்தப்படலாம் என்று ஒரு தரப்பு நம்புமாக இருந்தால், அது ஒரு பாதை திறப்புக்கான உடன்பாட்டுக்கு வரத் தயங்கவே செய்யும். இராணுவத்திற்கு வன்னியில் தன் இலக்கை அடைவதற்கு இப்போது இரண்டு விடயங்கள் அவசியப்படுகின்றன என்று புலிகள் கருதுவதாகத் தோன்றுகிறது. ஒன்று, புலிகளின் படைப்பலம் செறிந்துள்ள தளமான வன்னியின் மையப்பகுதியினுள் உடைத்துக் கொண்டு புகக் கூடிய ஒரு பலவீனமான இடம். இரண்டாவது ஆயுதங்களைக் கொண்ட கனரக வாகனங்கள், வாகன ஊர்திகள் சண்டை நடக்கும் இடத்திற்கு வேகமாகப் போவதற்குப் பலமான ஒரு வீதி. (அத்துடன் பாதுகாப்புப் பாதை எவ்வளவுக்கு நீளமாக இருக்கிறதோ அவ்வளவுக்குப் புலிகளின் தடைகளும் பலவீனமாக இருக்கும்.) இராணுவம் ஒரு பாதுகாப்பான பாதையை மாங்குளத்திற்கூடாக (A 9)வோ அல்லது மாங்குளம் துணுக்காய் பாதையினூடாகவோ திறப்பதில் ஆர்வம் காட்டுவதற்குக் காரணம் அது நேரடியாகத் தமது தளப்பிரதேசத்திற்கு இட்டுச் செல்வதாகவும் அது இப்போது நன்றாகச் செப்பனிடப்பட்டுள்ள வவுனியா மாங்குளம் பாதையுடன் நேரடியாக இணைக்கப்படக் கூடியதாகவும் இருப்பதே என்று புலிகள் கருதுகிறார்கள். புலிகளின் பிரதான மையப்குதியை நோக்கி இத்தகைய நிலைகளிலிருந்து இராணுவத்தின் தாக்குதல் தொடங்கப்படுமானால் இப்போது ஓமந்தை வரை புதுப்பிக்கப்பட்டுள்ள ரெயில் பாதையூடாக அப்படை நகர்வுக்கு



தொடர்ச்சியான வழங்கல்களைத் தந்து கொண்டிருக்கவும் முடியும். யு9 பாதையில் மாங்குளத்திற்கும் வவுனியாவிற்கும் இடைப்பட்ட பகுதி தொடர்ச்சியாக பலப்படுத்தப்பட்டு கனரக வாகனங்கள் செல்லக்கூடிய விதத்தில் செப்பனிடப்பட்டு வருவதைப் புலிகள் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். இராணுவ வழங்கல்களுக்கான நிலைகள் நிர்மாணிக்கப்பட்டு, அவசர அவசரமாக ரயில் பாதைகளும் போடப்பட்டுள்ளன. A9 பாதையின் இப்பகுதி தான் புலிகளின் மையப்பகுதி மீதான தாக்குதலைத் தொடர்ந்து நடாத்த வசதியான ஒரு பாதையாகும். இப்படியான ஒரு வீதி மேற் சொன்ன பலவீனமான இடத்தை அண்மித்ததாக அல்லது நேரடித் தொடுப்புள்ளதாக இருக்குமானால் புலிகளின் தளப்பிரதேசத்தினுள் உடைத்துச் செல்லும் படைநகர்வு இலகுவாக அமைந்து விடும். மேலும் முன்னேறும் போது கடும் சண்டை மூளுமானால் படைகளுக்கு வேண்டிய பொருட்களை தங்கு தடையின்றி வழங்குவது இலகுவானதாகும். ஒருகால் இராணுவம் பொதுமக்களுக்கான பாதுகாப்புப் பாதையூடாக ஊடுருவி வெற்றி பெற்று விட்டது என்றால், அதற்குப் பிறகு நம்பிக்கைக்குத் துரோகம் செய்தார்கள் என்று ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதில் பயனில்லை. அவை கவனிப்பாரற்றுக் கிடப்புக்குள் போடப்பட்டு விடும். ஆகவே, புலிகள் தாங்கள் எந்தவொரு பாதகம் தரக்கூடிய வாய்ப்பையும் தரப்போவதில்லை என்றும் பாதுகாப்புப் பாதை வேண்டுமானால் அதை மன்னாருக்கு அருகாக தென்மேற்குப் பக்கமாகத் திறக்கலாம் என்றும் கூறுகிறார்கள். தமது தளப்பிரதேசத்திற்கு நேரடித் தொடர்புள்ள பொது மக்கள் பாதுகாப்புப் பாதை அமைப்பதை இதனால் தான் புலிகள் எதிர்க்கிறார்கள். அத்துடன் இதன் பின்னாலுள்ள நோக்கம் வன்னியிலுள்ள நாதியற்ற மக்களுக்கு உணவளிப்பது அல்ல என்பதும் மறந்து விடக்கூடிய ஒன்றல்ல.




நன்றி - நூலகத்திட்டம்



# பாலசிங்கமோ திலகரோ அல்ல பிரபாகரன் சொல்ல வேண்டும்

அமைச்சர் அஷ்ரஃப்



.....அரசாங்கம் வைத்திருப்பது முஸ்லிம்களின் நிலைப்பாடு அல்ல. முஸ்லிம் கொங்கிரஸ் கேட்டதில் ஒரு கால்வாசி கூட அரசாங்கத்தின் அந்தத் தீர்வுப்பொதியில் இல்லை........

**பொ.ஐ.மு ஆட்சிக்கு வந்து நான்கு வருடங்கள் ஆகி விட்டன. இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வினைக் காண்பதாகக் கூறி ஆட்சியமைத்த அரசாங்கத்தின் அதற்கான நடவடிக்கைகள் குறித்து தமிழ்த் தரப்புகள் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றன. பொ.ஐ.மு அரசாங்கத்தின் ஒரு அமைச்சர் என்ற ரீதியில் இது குறித்து நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

அந்த அபிப்பிராயம் முற்றாகப் பிழை என்று சொல்லி விட முடியாது. பொ.ஐ.மு.ஆட்சிக்கு வரும் போது தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தீர்வைத் தரும் என்ற நம்பிக்கை இருந்து வந்ததை யாரும் மறுக்க முடியாது.

குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் இலங்கையின் அண்மைக் கால வரலாற்றில் தோன்றிய ஒரே ஒரு இனவாதமற்ற தலைவி என்ற வகையில் அவருடைய தலைமையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்னமும் அதிருப்திக்கு மத்தியிலும் தமிழ் மக்களுக்கு இருந்து வருகிறது. துரதிஸ்டவசமாக இங்கு ஏற்பட்டிருந்த பெரிய பிரச்சினை இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாமல் அமுல்படுத்த முடியாது. ஒரு தீர்வுப் பொதி பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன் வைக்கப்பட்டு ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாகி விட்டன. ஆயினும் கூட அத்தீர்வுப் பொதி சட்ட உருவம் பெறாதிருப்பதற்கான காரணம் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் தான். ஒரு வெறும் கண்துடைப்பாகச் செய்வதாக இருந்தால் எப்போதோ இந்தத் தீர்வைச் சட்டமூலமாக்கி அரசியலமைப்பில் ஒரு திருத்தமாகக் கொண்டு வந்து வாக்கெடுப்பிற்கு விட்டிருக்கலாம். அவ்வாறு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டிருந்தால் இந்தத் தீர்வு முற்றாகப் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட ஒரு தீர்வாக மாறியிருக்கும். இது தான் இங்கிருக்கும் ஒரே ஒரு சிக்கலாகும். ஆகவே இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு பொ.ஐ.முன்னணியை மாத்திரம் தமிழ் பேசும் மக்கள் குறை கூறுவதாக இருந்தால் அது ஒரு யதார்த்தமான நியாயமான விடயம் என்று நான் நினைக்கவில்லை. உண்மையிலேயே 1977லிருந்து 1988 வரை இருந்த 12 ஆண்டு காலமும் இருந்த பாராளுமன்றத்தில் தான் எதிர்க்கட்சியின் தயவு இல்லாமல் ஆளும் கட்சி இப்பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டு வரக் கூடிய சூழ்நிலை இருந்தது. விகிதாசாரத் தேர்தல் முறையானது நடைமுறைக்கு வந்ததன் பின்பு எந்தக் கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கு இருக்க முடியாது. ஆகவே இது ஒரு சிக்கலான நிலைமை என்றே கூறலாம். ஆனால் நான் கூற வருவதெல்லாம் சந்திரிகா பண்டாரநாயக்கா அம்மையாரும் பொது ஜன ஐக்கிய முன்னணியும் இதைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கவில்லை என்று சொல்வது யதார்த்தங்களைக் கருத்தில் எடுக்காத ஒரு வெற்றுக் கூற்றாகும்.

**நீங்கள் சொல்கிறபடி பொ.ஐ.முன்னணி ஒரு தீர்வுப்பொதியை முன் வைத்தது. ஆனால் அப் பொதியில் சிறுபான்மை மக்களுக்கும் அரச அதிகாரத்தில் பங்கினை வழங்கக் கூடியதாக இருந்த பல்வேறு அம்சங்கள் காலத்துக்குக் காலம் அகற்றப்பட்டு விட்டன என்றும் இப்போதிருப்பது பெரும்பான்மையினரின் அதிகாரங்களை மீள வலியுறுத்துகிற அம்சங்களே என்றும் கூறப்படுகிறது. உதாரணமாக ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதியில் இலங்கை ஒரு மதச் சார்பற்ற நாடு எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், ஆனால் தற்போது பௌத்தமதம் மதம் அரச மதமாக ஆக்கப் பட்டுள்ளதையும் சொல்வார்கள். ஆக பொ.ஐ.மு தான் கொண்டு வந்த தீர்வுப் பொதியை அமுலுக்குக் கொண்டு வருவதில் உறுதியாக இருந்திருக்கிறது என்பதை எப்படி நம்புவது?**

இக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முதல் தமிழ் மக்களுக்காகப் பேசுகின்ற கட்சிகளின் நிலைப்பாட்டை எடுத்துப் பார்ப்போம். தமிழ் பேசும் மக்களினுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறுகின்ற கட்சிகளுக்கு மத்தியிலேயே ஒருமித்த கருத்தொருமைப்பாடு இல்லை. இன்று தீர்வுப் பொதி முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு பாராளுமன்றத்தில் இருக்கிறது என்று ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும் கூட பாராளுமன்றத்திற்குள் இருக்கும் தமிழ்க் கட்சிகள் நிச்சயமாக ஆதரவைத் தருவார்களா என்று உறுதியாகத் தெரியவில்லை. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகளிடம் கூட இத்தீர்வுப் பொதி பற்றிய கேள்விகள் நிறைய இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இப்படியான விசயங்களில் இரண்டு சக இரண்டு நான்கு என்று எளிதான ஒரு பதிலைச் சொல்ல முடியாது. நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் வருகிறேன். இது ஒரு பௌத்த நாடா அல்லது ஒரு மதச்சார்பற்ற நாடா என்பது வேறு ஒரு பிரச்சினை. அதற்கும் இனப்பிரச்சினைக்கும் எந்த விதமான தொடர்புமில்லை. நாங்கள் ஒன்றை ஒன்று குழப்பிக் கொள்ளக் கூடாது. உதாரணமாக இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகப் பேசப்பட்ட போது நான் நினைக்கிறேன் புளொட் தலைவர் சித்தார்த்தன் தேசியக் கொடியைக் கூட மாற்ற வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொல்லி இருந்தார். தேசியக் கொடியை மாற்ற வேண்டும் என்பது என்னுடைய கருத்தும் தான். இன்று தேசியக்கொடியை அதிகமாக விமர்சித்துக் கொண்டிருக்கும் ஒரு அரசியல்வாதி என்றால் அது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தான். இலங்கை ஒரு காலத்தில் மதச்சார்பற்ற ஒரு நாடாக வர வேண்டும் என்பது என்னுடைய விருப்பமும் தான். அதற்காக இது ஒரு பௌத்த நாடாக இருக்கின்ற போதே இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண முடியாது என்ற கருத்துக்கு நாம் வர முடியாது. நாம் படிப்படியாகத் தான் இவற்றைச் செய்யவேண்டி வரும் ஒரு காலத்தில் பண்டா - செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்ட போது அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட அதிகாரங்கள் இன்றிருக்கும் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தில் உள்ளதில் ஆயிரத்தில் ஒன்று கூட அதிலிருக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கு அன்று மறுத்தார்கள். இன்று சிங்கள மக்களுடைய மன நிலையில் நிறைய மாற்றங்கள் வந்திருக்கின்றன. தமிழ் பேசும் மக்களுடைய சார்பில் இது வரையும் அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாக தேசியக் கொடியை மாற்ற வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக தேசிய கீதத்தை மாற்ற வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த நாட்டை மதச்சார்பற்ற நாடாக மாற்ற வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை.

அந்த அடித்தளத்தில் இருந்து கொண்டே அவைகளை அப்படியே வைத்துக் கொண்டே தீர்வைக் காணலாம் என்று தான் இவ்வளவு காலமும் நாம் பேசிக்கொண்டு வருகிறோம். ஆகவே ஜனாதிபதியைப் பொறுத்தவரை இந்த இனப்பிரச்சினைத் தீர்வோடு இது பௌத்த நாடு அல்ல என்ற உன்னதமான கோட்பாட்டையும் அரசியலமைப்புக்குள் கொண்டுவர விரும்புவார். அதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஜனாதிபதிக்கு மதத்தில் நம்பிக்கை இல்லை. ஆகவே அவர் அதற்கு மறுப்புத் தெரிவிக்க மாட்டார். ஆனால் இவ்வாறான தீர்வுகளை நடைமுறைப்படுத்த முனையும் போது வரும் பிரச்சினைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று ஒரு பாராளுமன்றத்திற்குள்ளே இருப்பவர்கள மாத்திரம் இத்தீர்வில் சம்பந்தப்படுவதில்லை. பாராளுமன்றத்திற்கு வெளியே இருக்கும் பௌத்த பிக்குகள் சக்தி வாய்ந்த ஒரு அமைப்பினராக இருக்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. சிங்கள மக்கள் பௌத்த மதத்திலும் பௌத்த பிக்குமாரிலும் நல்ல மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அரசியல்வாதிகள் பௌத்த சங்கத்திற்கு தலைவணங்குகின்ற நிலையில் இருக்கின்ற ஒரு காலகட்டத்தில் பௌத்த பிக்குமாரை கல்வியூட்டாமல் இது தொடர்பான சில விடயங்களைச் செய்ய முடியாது. உதாரணமாக நான் பன்சலைகளுக்குள் போய் பௌத்த பிக்குமாருக்கு முன்னிலையில் புத்த பெருமானாருக்குச் சிங்களம் தெரியாது என்ற விடயத்தைச் சொல்லி வருகிறேன். இது அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியாக உள்ளது. புத்த பெருமானாருக்குச் சிங்களம் தெரியாது. சிங்கள மொழிக்கும் பௌத்தத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற விடயம் துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் கொங்கிரஸ் தலைவரால் தான் முதற்தடவையாக இந்த நாட்டில் சொல்லப்பட்டு வருகிறது. இது உண்மை என்ற போதிலும் கூட அதை ஏற்றுக் கொள்வது அவர்களுக்குப் பெரிய கஷ்டமாக இருக்கிறது. ஆனால் காலப் போக்கில் இந்த உண்மைகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது எங்கள் நம்பிக்கை.

**ஆக, நீங்கள் இது வரை கூறியதிலிருந்து ஜனாதிபதி நினைத்தால் கூட இவற்றை நடைமுறைப்படுத்த முடியாதபடி உள்ளும் வெளியிலும் இனவாத சக்திகள் பலமாக இருக்கின்றன என்று கொள்ளலாமா ?**

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று பொ.ஐ.முவுக்குள் இருக்கும் இனவாத சக்திகள். மற்றையது பொ.ஐ.முன்னணிக்கு வெளியில் இருக்கும் இனவாத சக்திகள். முன்னணிக்குள் இருக்கும் இனவாத சக்திகள் குறித்து நாம் அதிகம் அக்கறை கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் ஜனாதிபதியின் ஆளுமை ஜனாதிபதியின் அதிகாரம் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி அந்த இனவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு அப்பால் இந்த விடயங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு வல்லமை அவருக்கிருந்தது. ஆனால் இந்த நேர்காணலை நீங்கள் செய்கின்ற நேரத்தில் அவருக்கு இந்த வல்லமை இருக்கின்றதா என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது. குறிப்பாக கடந்த மூன்று நான்கு மாதங்களாக அரசாங்கத்திற்கு ஒரு சரிவு நிலை தோன்றிக் கொண்டிருக்கின்றது. ஆகவே ஒரு சரிவுநிலை ஏற்படும் போது அவ்வல்லமை குறைந்து கொண்டு போகலாம்.

உங்களுடைய கேள்வியின் ஆரம்பத்திற்கு நான் வருகிறேன். ஆரம்பத்தில் அரசாங்கம் இந்தத் தீர்வுப்பொதியை முன்வைத்த நேரம் அரசாங்கத்திற்குள்ளும் அமைச்சரவைக்குள்ளும் இனவாத சக்திகளின் வெளிப்பாடு அவற்றிற்கெதிராக இருந்த போதிலும் கூடஅவர் அவற்றைத் தாண்டி வந்து தீர்வுப் பொதியை முன்வைத்தார். இன்று கூட பாராளுமன்றத்துக்குள் இது தொடர்பாக ஒரு விவாதம் இடம் பெறுமானால் பாராளுமன்றத்துக்குள் இருக்கின்ற பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களும் ஒரு விதிவிலக்குக் கூட இன்றி அவர்கள் எவ்வளவு தான் விரும்பாவிட்டாலும் அவர்கள் பொதிக்கு ஆதரவாகக் கையுயர்த்தித் தான் தீர்வார்கள். ஏனென்றால் அவர்களுடைய பாராளுமன்ற ஆசனங்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கிறது. இது யதார்த்தம். இது தான் இலங்கை அரசியலின் யதார்த்த நிலை. நாளை ஐ.தே.க. வந்தாலும் இதே நிலை தான் ஏற்படும்.

**அவ்வாறானால் முன்வைக்கப்பட்ட இந்தத் தீர்வுப்பொதியை முன்னெடுத்துச் செல்ல என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன் ?**

இருந்த ஒரே ஒரு வழி, ஐ.தே.க.வை இந்தத் தீர்வுப் பொதியின் பக்கம் சாய்ப்பது. ஆனால் ஐ.தே.க.வை தீர்வுப் பொதியின் பக்கம் சாய்ப்பதில் அரசாங்கம் தவறிழைத்தது என்றும் சொல்லலாம். உரிய அணுகுமுறைகளைக் கொள்ளவில்லை என்றும் சொல்லலாம். ஐ.தே.க.வை அநாவசியமாக தூரப்படுத்தியது என்றும் சொல்லலாம். உதாரணமாக இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் தான் பட்டலந்த பற்றிய விடயங்கள் வெளிவந்தன. சில நாட்களின் பின்னர் அந்தப் பட்டலந்தவுக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. யாரும் அதைப் பற்றிப் பேசுவதில்லை. ஐ.தே.க தலைவருக்கெதிராக அடிக்கடி வெளியிடப்படும் கூற்றுக்கள் அவர்களைப் புண்படுத்தியிருக்கலாம். இது பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறு செய்தது. ஆகவே நீங்கள் கேட்ட இந்தக் கேள்விக்கு அரசாங்கத்தை முற்றாகப் பாதுகாத்துப் பதில் சொல்லக் கூடிய நிலையில் நான் இல்லை.

**ஆக அரசாங்கம் தானே முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தானே இயங்குகிறது என்று சொல்லலாமா ?**

அரசாங்கம் தீர்வுப் பொதி சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தானே சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. தீர்வுப்பொதியை நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதற்காகத் தான் அந்த நடவடிக்கைகளை அது எடுத்ததா என்றால் அதற்குப் பதிலில்லை. அது ஒரு Style of Government அரசாங்கமோ ஜனாதிபதியோ வேண்டுமென்றே இவ்வாறான கூற்றுக்களைத் தெரிவிப்பதில்லை. உதாரணமாக தொலைக்காட்சியில் பேசிக்கொண்டிருக்கும் போதே யாராவது ஓராள் ஒரு கேள்வியைக கேட்டவுடன் எதேச்சையாக ஒரு பதிலைச் சொல்லி விடுவது. பின்னர் அது தான் பிரச்சினைக்குரிய விடயமாகி விடுகிறது.

அரசாங்கம் இந்தத் தீர்வுப்பொதியை முன்வைத்த போது ஐ.தே.கட்சி விரும்பியிருந்தால் எப்போதோ இப்பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். அவர்கள் இழுத்துக்கொண்டே போனார்கள். எவ்வாறு இழுத்தார்கள் என்றால் தீர்வுப் பொதியிலுள்ள விடயங்கள் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு வந்துவிட்டு இறுதியாக ஐ.தே.கட்சியினர் தீர்வுக்காகத் தனியான ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அக்கமிட்டியினர் முற்றிலும் மாறான ஒரு யோசனையைக் கொண்டு வந்தார்கள். ஒரு செனட் சபை அமைப்பது பற்றி எல்லாம் கொண்டு வந்தார்கள். இப்பொழுது யார் செனட் சபை பற்றிப் பேசியது. தமிழ் மக்கள் செனட் சபை பற்றி எல்லாம் பேசினார்களா? இவ்வாறு முழு விடயத்தையும் திசை திருப்பும் வழியில் தான் அவர்கள் செயற்பட்டார்கள். . இலங்கையின அரசியல் வரலாற்றைப் படித்துப் பார்த்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய சக்தி இருந்தும் தீர்வைக் காணாத தீர்வு காண விரும்பாத ஒரே ஒரு அரசியல் கட்சி ஐ.தே.கட்சி தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அது மட்டுமல்ல இன்றைக்கு இனப்பிரச்சினை என்று நாம் பேசிக் கொண்டிருக்கும் இவ்விடயம் இவ்வளவு பூதாகரமாக வருவதற்குக் காரணம் 1983 ஜுலைச் சம்பவங்கள். அச்சம்பவங்கள் இல்லாமல் இது இவ்வாறு பெரிதாக வளர்ந்திருக்க முடியாது. 1983க்கு முன்னர் அது தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளாக மட்டுமே இருந்தது. அதற்குப் பிறகு தான் இனப்பிரச்சினை தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புப் பிரச்சினையாக மாறியது. ஐ.தே.கட்சி காலத்தில் தான் 1983 கலவரத்தின் போது பெற்றோல் ஊற்றி கொளுத்தினார்கள். அதன் போது மூன்று நாட்களாக ஊரடங்குச் சட்டம் போடாமல் இருந்தது ஐ.தே.கட்சி. அதன் பிறகு மூன்று நாட்களுக்குப் பிறகு வந்து தொலைக்காட்சியில் சிங்கள மக்களின் அபிலாஷைகளுக்கு அவர்கள் இடம் கொடுத்தது அக்காலகட்டத் தலைமை தான். இது தான் வரலாறு. ஆகவே இந்த வரலாற்றுக்

நன்றி - நூலகத்திட்டம்



கறைகளிலிருந்து ஐ.தே.கட்சி ஒரு போதும் தனது கறைகளைக் கழுவிக் கொள்ள முடியாது.
உதாரணமாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விடயத்தில் சந்திரிகா சொன்னார் தான் ஒழிப்பதாக. அவர் அதனைச் செய்யவில்லை.
ஆனால் இன்று ஒழிக்கச் சொல்லும் ஐ.தே.கவினர் எப்போதாவது தமது மாநாடுகளில் தாம் இதனை ஒழிப்பதற்குத் தீர்மானம் எடுத்தார்களா? அவர்கள் உருவாக்கிய ஒன்று அது. அவர்கள் அதனை இன்று ஒழிக்கக் கோருவது அது கூடாது என்பதற்காகவல்ல. எப்படியாவது ஜனாதிபதி சந்தரிகாவை ஒழிப்பதென்பதற்காகவே அதனை ஒழிக்கச் சொல்கிறார்கள்.

**நீங்கள் திரும்பத் திரும்ப ஜனாதிபதி இனப் பிரச்சினைத் தீர்வுக்கு முயற்சித்தார் என்று வலியுறுத்துகிறீர்கள். ஆனால் நடைமுறை உதாரணங்கள் அவற்றை உறுதிப்படுத்துவனவாக இல்லை. உதாரணமாக காணி அதிகாரம் பற்றி அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட பிரசுரங்களில் சிங்களப் பிரசுரத்தில் காணி அதிகாரம் மத்திய அரசிடமே இருக்கும் என்ற போக்கிலும், தமிழ்மொழி மூலமான பிரசுரத்தில் அது பிராந்திய அரசுகளிடமே இருக்கும் என்ற வகையிலும் எழுதப்பட்டிருந்தது. இந்த இரட்டை நிலை நீங்கள் சொல்கிற நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்குகிறதல்லவா?**

ஓம். தமிழ் பிரசுரத்திற்கும் சிங்கள மொழியிலான பிரசுரத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை நான் பெரிதாக எடுக்கவில்லை. சுதந்திரம் பெற்று ஐம்பது வருடமாகியும் ஒரு பெயர்ப் பலகையை தமிழில் ஒழுங்காக எழுத முடியாத நாடு தான் இந்த நாடு. தமிழில் அவர்களுக்கும் எழுதத் தெரியாது. அல்லது தமிழ் தெரிந்த ஒருவரை எழுதவும் விட மாட்டார்கள். இதுதான் நிலைமை. பாராளுமன்றத்தையே பாராளமன்றம் என்று தான் எழுதி வைத்திருக்கிறார்கள். தமிழைப் படிக்காமல் தாங்கள் தான் எழுதுவோம் என்று சொல்கிறார்கள். இது தற்செயலாக ஏற்பட்டதாக இருக்கலாம். அல்லது வேண்டுமென்றே செய்ததாக இருக்கலாம். இதனை விட நல்ல உதாரணம் இருக்கிறது. கிராம சேவகர் நியமனம். அது மாகாண சபைக்குரியது. அதனை அவர்கள் மத்திய அரசுக்கு மாற்றி இருக்கிறார்கள். இந்த இரட்டை நிலைப்பாடுகள் அரசாங்கத்துக்குள் இருக்கின்றது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த இரட்டை நிலைப்பாடுகள் ஜனாதிபதியின் மன ஒப்புதலோடு தான் நடக்கின்றது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது. பிரபாகரன் மாதிரி இரத்தம் சிந்தி ஆயுதப் போராட்டம் மூலமாக எமது உரிமைகளைப் பெறுவது என்பது வேறு. ஜனநாயக அரசியலுக்கு வந்து விட்டால் யாராவது ஒரு சிங்களத் தலைமைத்துவத்தை நம்ப வேண்டும் என்பது தான் யதார்த்தம். கட்சியில் நம்பியிருக்க முடியாது. கட்சி என்பது பொய். ஆக, இன்று எமக்கு முன்னால் இருக்கும் தலைமைகள் சந்திரிகாவும் ரணிலும் தான். இடதுசாரித் தலைமைகள் இருக்கிறார்கள். இந்த இடதுசாரித் தலைமைகளால் பாராளுமன்றத்துள் ஐந்து வாக்குகளைப் பெற முடியாது. தமிழ் முஸ்லிம் மக்களுக்கு மூன்றே மூன்று வழிகள் தான் இருக்கின்றன. ஒன்று சந்திரிகா, மற்றது ரணில், அதற்கப்பால் ஜே.வி.பியின் டில்வின் டி சில்வா. அவர் எப்போ ஜனாதிபதியாக வருவது. அதற்குப் பிறகு எப்போ நாங்கள் அவருடன் பேசுவது. இருக்கும் யதார்த்தம் இருவர் தான். இவர்களில் ஒருவரைத் தான் நாம் நம்ப முடியும். இன்னொரு விடயம் தமிழ்க் கட்சிகளுள் ஒரு ஒற்றுமை இருந்தால் சில விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம். எங்களுக்குள் ஒற்றுமையில்லை. முஸ்லிம் காங்கிரஸை விட்டு விட்டுத் தமிழ்க் கட்சிகளை எடுத்துப் பாருங்கள். அவர்களுக்குள் ஏதாவது ஒரு பொதுவான ஒற்றுமை இருக்கிறதா? தீர்வுப்பொதி குறித்து ஏதாவது பொதுவான அபிப்பிராயங்களை வைத்திருக்கிறார்களா? அப்படி இருக்கும் போது பொ.ஐ.முவுக்குள் பிரச்சினைகள் இருப்பது ஒன்றும் அதிசயமானதில்லையே.


**உங்களுடைய நம்பிக்கையின் அடிப்படையில் பொ.ஐ.முவின் ஆட்சிக் காலம் முடிவதற்கிடையில் தீர்வு தொடர்பாக ஏதாவது சாதகமான அம்சங்கள் நடைபெறும் என்று கருதுகிறீர்களா ?**

அண்மையில் வர்த்தகர்கள் ஒரு முயற்சியைச் செய்தார்கள். அரசாங்கத்தின் சார்பில் நால்வரும் ஐ.தே.க. நால்வரும் அதற்காக நியமிக்கப்பட்டார்கள். அக் கூட்டம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்றது. அதில் துாரத்துப் பச்சையாக ஒன்று தெரிந்தது. அதேவேளை தான் ஐ.தே.கட்சிக்கு அடி விழுந்தது. அதற்குப் பின்னர் என்ன நடக்குமென்று எனக்குத் தெரியாது. ஐ.தே.கட்சி ஒத்துக் கொண்டு வந்தால் தான் இப்பிரச்சினைக்குத் தீர்வு இருக்குமே தவிர அது இல்லாமல் இல்லை. இது இன்றைய யதார்த்தம்.
உண்மையில் ஜனாதிபதி பதவிக்கு வந்து இரண்டு வருட காலத்துள் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்து விட்டு ஐ.தே.கட்சியைக் கணக்கெடுக்காமல் நாட்டு மக்களுக்குள் போய் கருத்துக்கணிப்பெடுப்பு நடாத்தி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றாவது பார்த்திருக்கலாம். அதனைச் செய்திருக்கலாம். ஆனால் செய்யாததைத் தவறு என்று சொல்ல முடியாது. நாங்களே அதனைச் செய்யுமாறு அன்று கேட்கவில்லை. அவ்வாறிருக்கும் போது செய்யவில்லை என்று எப்படிக் குற்றம் சாட்ட முடியும்?

**அன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்னால் இந்தத் தீர்வுப்பொதி முன் வைக்கப்பட்ட போது முஸ்லிம் மக்களுடைய அதிகார அலகு தொடர்பாக முஸ்லிம் கொங்கிரஸ் எத்தகைய விடயங்களை முன் வைத்தது? அதனை நடைமுறைப்படுத்த முஸ்லிம் கொங்கிரஸ் இதுவரை என்ன நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது? அது வெற்றியளித்திருக்கிறதா?**

பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு நாங்கள் ஒன்றையே சொல்லி வந்திருக்கிறோம். அதாவது தற்போது தென்கிழக்கு என்று சொல்லப்படுகின்ற அம்பாறை மாட்டத்தின் கரையோரப் பிரதேசம் என்பதனை அடித்தளமாகக் கொண்டு மட்டக்களப்பு, மன்னார், திருமலை, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய வடகிழக்கின் சகல மாவட்டங்களிலும் எங்கெல்லாம் முஸ்லிம்கள் இருக்கிறார்களோ முஸ்லிம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றை நிலத் தொடர்பற்ற வகையில் இணைக்கும் ஒரு அமைப்புத் தான் வேண்டும் என்பது முஸ்லிம் கொங்கிரஸின் நிலைப்பாடு.
அது எம்முடைய நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் மாறவில்லை. அரசாங்கம் வைத்திருப்பது முஸ்லிம்களின் நிலைப்பாடு அல்ல. முஸ்லிம் கொங்கிரஸ் கேட்டதில் ஒரு கால்வாசி கூட அரசாங்கத்தின் அந்தத் தீர்வுப்பொதியில் இல்லை. அரசாங்கத்தின் தீர்வுப்பொதி வருவதற்கு முதல் நாங்களும் தமிழ்க்கட்சிகளும் பேசத் தொடங்கி தமிழர் விடுதலைக் கூட்டணி தான் அந்தப் பேச்சுவார்த்தையில் இறுதி வரை இருந்தது. புளொட்டின் நிலைப்பாடு என்னவென்றால் முஸ்லிம்களுக்காக எதையும் கொடுப்பதற்கு ஆயத்தமான நிலையில் தான் அது இருக்கின்றது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஈ.பி.டி.பி தலைவர் முஸ்லிம்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் கூறுவதில்லை. கொடுக்கக் கூடாது என்றும் சொல்வதில்லை. அரசாங்கம் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறது. எமக்கு ஒரு நிலைப்பாடு இருக்கிறது. தமிழ்க்கட்சிகளுடைய பொதுவான நிலைப்பாடு ஒன்றிருக்கிறது. வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு அலகு என்பது அவர்களது பொதுவான நிலைப்பாடு. வடகிழக்கை உடைச்சுத் தனிநாடாக எடுப்பது என்கிற பிரபாகரனின் நிலைப்பாடு என்று ஒன்றிருக்கிறது. நான்காவது நிலைப்பாடு சிங்களப் பேரினவாதிகளுடையது. வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு. தீர்வு என்று வரும்போது இந்த நான்கும் வர முடியாது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க முடியாது. ஆனால் கேட்டதில் கொஞ்சம் கொஞ்சம் எல்லோருக்கும் கிடைக்கும். அதைத் தான் தீர்வு என்று சொல்வது.
அவ்வகையில் முஸ்லிம் கொங்கிரஸ் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களுடன் சந்தோசமாக வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு தனது நிலைப்பாட்டை விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளது. அவ்வடிப்படையில் தான் நாங்கள் அரசாங்கத்திற்கும் சொல்லி இருக்கிறோம். ஒரு தீர்வுப் பொதியைக் கொண்டு வாருங்கள். நாங்கள் பேசுவோம் என்று. இது தான் எமது நிலைப்பாடு. எமது ஆரம்ப நிலைப்பாடாக முஸ்லிம் மாகாணக் கோரிக்கை ஒன்றை நாங்கள் முன்வைத்தோம். அந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் மாறவில்லை. ஆனால் ஒன்றை நாம் சொல்ல வேண்டும். முஸ்லிம் மாகாணம் என்ற ஒன்றை நாம் முன்வைத்த காலகட்டத்தை சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். தமிழர்களும் முஸ்லிம்களும் பேச முடியாத ஒரு காலகட்டத்தில் ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்கள் அந்த ஆயுதங்களை முஸ்லிம்களுக்கெதிராகப் பாவித்த ஒரு காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் உறவுகள் சீரழிந்திருந்த ஒரு காலகட்டத்தில் அதனைச் சொன்னோம். இன்று முஸ்லிம் கொங்கிரஸ் அந்த விடயங்களைப் பற்றிப் பேசுவதில்லை.நாங்கள் அந்த விடயங்களை நினைவூட்டக் கூட விரும்புவதில்லை. அது பழைய கதைகளாகவே போய் விடட்டும். ஆனால் யார் யார் எல்லாம் முஸ்லிம்களுக்கெதிராக அநியாயம் செய்தார்களோ அவர்கள் எல்லாம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதில் நாம்

தமிழ் பேசும் மக்களுடைய சார்பில் இது வரையும் அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாக தேசியக் கொடியை மாற்ற வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக தேசிய கீதத்தை மாற்ற வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த நாட்டை மதச்சார்பற்ற நாடாக மாற்ற வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை.



உறுதியாக இருக்கிறோமே தவிர, அதற்கப்பால் நாம் எதனையும் கோரவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் கடந்த நான்கு வருடமாகச் செய்த வேலையின் பயனாக இன்றுள்ள நிலையில் வடக்குக் கிழக்கில் காசு கொடுத்தாலும் ஒரு முஸ்லிம் தமிழனுக்கு அடிக்க மாட்டான். தமிழன் முஸ்லிமுக்கு அடிக்க மாட்டான். அது ஒன்று தான் ஒரு முஸ்லிம தலைவர் என்ற வகையில் எனக்கிருக்கிற பெருமை. தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் இவ்வளவு காலமும் இல்லாத 83க்கு முன் கூட இல்லாத ஒரு புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

எதிரிகள் என்று கருதி அடிபட்ட பின் நண்பர்களாகும் போது உறவுகளில் வரும் பலம் இறுக்கமானது. அதனை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். ஆகவே, எமது நிலைப்பாடு முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பெறும் அதேவேளை நியாயமற்ற வகையில் தமிழர்களுடைய போராட்டம் பலவீனப்படுத்தப்படக் கூடாது. அதே நேரம் தமிழர்கள் தமது போராட்டத்தின் மூலமாகத் தமது அபிலாஷைகளை வென்றெடுக்கப் போகும் நேரம் முஸ்லிம் சமுதாயத்தின் அரசியல் அதிகாரம் இல்லாமற் செய்யப்படக் கூடாது. இவை இரண்டிற்கும் இடையில் ஒரு சமநிலைமை வேண்டும். இதனை நாம் முஸ்லிம்கள் மத்தியில் போய் விதந்துரைக்கத் தயாராக இருக்கிறோம்.

**நீங்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்வைத்த தனி மாகாண யோசனை நடைமுறையாவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள்?**

முதலில் நாங்கள் தென்கிழக்கு மாகாணக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. இதனை நாங்கள் பகிரங்கமாகக் கூறியும் பலருக்கு இவ்விடயம் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இக்கதை இருக்கிறது. நாங்கள் தெரிவுக்குழுவுக்கு முன்வைத்த முஸ்லிம் மாகாணக் கோரிக்கையையும் ஏனைய விடயங்களையும் எமது கட்சியின் வெளியீடுகள் மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளோம்.

யதார்த்தத்தில் முஸ்லிம் மக்கள் கேட்பதை மட்டும் செய்து தருவதற்கு அரசாங்கம் இருந்தால் தமிழ் மக்களைத் துாக்கிக் கடலில்தான வீச வேண்டும். நான் முஸ்லிம் மக்களுடைய தலைவராக இருந்து கொண்டு இரண்டு வேலைகளைச் செய்கிறேன். ஒன்று முஸ்லிம் சமுதாயம் பாதிக்கப்படாதிருக்கும் நடவடிக்கைகளை நான் மேற்கொள்கிறேன். அதேவேளை வரலாறு ஒரு காலத்தில் எழுதும் தமிழ்த் தலைவர்கள் செய்யாத ஒரு பணியை நான் செய்திருக்கிறேன்என்று. தமிழ் மக்களுடைய போராட்டம் கொச்சைப்படுத்தப்படாமல் இருக்கிற முதலாவது பாதுகாப்பு முஸ்லிம் கொங்கிரஸ். அதனை நாம் செய்து வருகிறோம். முஸ்லிம் மக்கள் கேட்பதைப் போல் முஸ்லிம் மாகாணத்தைப் பிரித்துத்தா என்றால் அதனைத் தமிழ் மக்கள் யாராவது ஏற்றுக் கொள்ள வேண்டுமே. தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று தெரிந்தும் கூட அதனைப் பிரித்துத்தா என்று கேட்பதைப் போலப் பைத்தியக்காரத்தனம் ஒன்றுமில்லை. ஆனால் மறு பக்கத்தில் சில தமிழ்க் கட்சிகள் சொல்வதைப் போல் முஸ்லிம்களுக்கு ஒன்றுமில்லை. என்று எதையும் தர மறுத்து விட்டால் முஸ்லிம்களுடைய அடையாளம் இல்லாது போய்விடும். இன்னுமொரு விடயம் தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயம் தான். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தற்போது இருக்கும் வடகிழக்கு இணைப்பு ஒரு தற்காலிகமான இணைப்பு. ஒரு சர்வசன வாக்கெடுப்பு மூலமாக இதனைப் பிரிக்கலாம். முஸ்லிம் கொங்கிரஸ் நினைத்திருந்தால் இதனைப் பிரித்திருக்கலாம். ஜனாதிபதியாகவிருந்த விஜயதுங்க எம்மைக் கூப்பிட்டுக் கேட்டிருக்கிறார். சர்வசன வாக்கெடுப்பை நடாத்துவோமா என அமிர்தலிங்கம் இருந்த காலத்தில். அதனை நடாத்தக் கூடாது என்று நிலைப்பாடு எடுத்த முதலாவது ஆள் நான். எனக்குப் பிறகு தான்அமிர்தலிங்கமும் அந்நிலைப்பாட்டை எடுத்தார். உங்களுக்குத் தெரியும். ஐ.தே.கவைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா சு.கட்சியைச் சேர்ந்த முஸ்லிம்கள் எல்லோரும் கிழக்கிலிருந்து வடக்கைப் பிரி என்று தான் இன்றும் சொல்கிறார்கள். வடக்கும் கிழக்கும் நிபந்தனை இல்லாமல் இணைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அதேநேரம் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படக் கூடாது என்று எதிர்க்கிற ஒரே ஒரு முஸ்லிம் சக்தி முஸ்லிம் கொங்கிரஸ் தான். இதனைத் தமிழ் மக்களில் சிலர் இன்னமும் புரியாமலிருக்கிறார்கள். நாளை முஸ்லிம் காங்கிரஸ் மாறி நின்று வடக்கையும் கிழக்கையும் பிரி என்று ஒரு நிலைப்பாட்டை எடுத்தால் என்ன நடக்கப் போகிறது. ஒன்றும் செய்ய முடியாது. நாம் அதனைச் செய்யாமலிருக்கிறோம். இனப்பிரச்சினைத் தீர்வு என்று வரும்போது நீதிமன்றத்தில் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்வது போல் செய்ய முடியாது. கேள்வி கேட்கும் பத்திரிகைக்கு இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை உள்ளதா என்பது தான் முக்கியம். ஆக, ஜனாதிபதியிடம் முஸ்லிம் கொங்கிரஸ் கேட்பதை மட்டும் தாருங்கள். தமிழ் மக்கள் எக்கேடு கெட்டு போனாலும் பரவாயில்லை என்று சொன்னால் அதை விடத் தமிழ் மக்களுக்குச் செய்யும் ஒரு பெரிய துரோகம் வேறொன்றும் இருக்க முடியாது. தமிழ் மக்களுடைய போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் ஒரு மலின அரசியலைப் பேச முஸ்லிம் கொங்கிரஸ் விரும்பவில்லை.

**முஸ்லிம் மக்கள் கேட்பதைச் செய்து தருவதற்கு அரசாங்கம் தயாராக இருந்தால் தமிழ் மக்களைத் தூக்கிக் கடலில் தான் வீச வேண்டும் என்று கூறினீர்கள். முஸ்லிம் மக்கள் வலியுறுத்துவது தென்கிழக்கு மாகாணம். அது எப்படித் தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கப் போகிறது ?**

தென்கிழக்கு மாகாண சபையை நாம் வலியுறுத்தவில்லை. தென்கிழக்கு மாகாண சபை தான் நாம் கேட்ட அகன்ற முஸ்லிம் மாகாணசபைக்குப் பதிலாக முன்வைக்கப்பட்டிருக்கிற தறிக்கப்பட்ட ஒரு அலகு. இந்த நாட்டில் இன்னுமொரு இனப்பிரச்சினை வரக் கூடாது என்று நாம் பார்க்கிறோம். நாளைக்கு மாறி நின்று ஒருவர் கேட்கக் கூடும். தமிழர்கள் இவ்வளவு காலமும் போராட்டத்தைச் செய்து விட்டார்கள். ஆகவே நிபந்தனையற்ற வகையில் இணைக்கப்படும் வடகிழக்கினுள் இருந்து பாருங்கள் என்று யாரும் சொல்லலாம். அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால் நாம் இருந்திருக்கிறோம்.
வரதராஜப்பெருமாளுடைய ஆட்சிக் காலத்தில் நாம் இருந்திருக்கிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லிம் - தமிழ் உறவுகள்

## (வரலாற்று, சமகால அரசியல் பின்புலங்களை விவாதத்துக்குட்படுத்துதல்)

வி.ரி. தமிழ்மாறன்

### அறிமுகம் (Introduction)

அடையாளம் பற்றிய அறிமுகத்தோடு ஆரம்பமாவது பொருத்தமாக இருக்கும். அது என்ன அடையாளம்? நான் யார்? நாங்கள் யார்? அவர்கள் யார்? நாங்கள் ஏன் அவர்களிலிருந்து வேறானவர்கள்? ஏன் வேறானவர்களாக இருக்க வேண்டும்? அப்படி இருக்கத்தான் வேண்டுமா? அப்படி வேறிடங்களில், சந்தர்ப்பங்களில் இருக்கின்றார்களா?, இவற்றுக்கான விடைகளை முதலில் ஆராய முற்படலாம். பின்னர் இந்தப் பகைப்புலத்தில் இலங்கையில் முஸ்லிம்கள் என்ற பதம் முதலில் வரைவிலக்கணத்துக்குட்பட வேண்டும். மதத்தாலும் மொழியாலும் மட்டும் இவர்களை அடையாளங்காண்பதா? அல்லது மதத்தினை மட்டும் வைத்து அடையாளப்படுத்துவதா? இலங்கையில் முஸ்லிம்கள் தமிழையும், சிங்களத்தையும் பேசுகிறார்கள். இவர்களது மொழிப்புலமை இவர்களின் அடையாளத்தின் மீது ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா?

கடந்த அரசாங்க காலத்தின் ஒரு கட்டத்தில் - முஸ்லிம்களின் தாய்மொழி தமிழல்ல என்ற ஒரு கோஷத்துக்கு வலுவூட்டப்பட்டது. ஆனால், பின்பு இது முஸ்லிம்களின் அரசியல் தலைமைகளை அடையாளங் காண்பதற்கான போட்டி என்று உணரப்பட்டதும் விடயம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஆக, பேசும்மொழி கூட முஸ்லிம்களைப் பொறுத்தளவில் கொள்ளவும், தள்ளவும் தக்கதொரு ஒட்டுறு விடயமாகவே காணப்பட்டு வருகின்றது. இது சேர் ராசீக் பரீட் காலத்திலிருந்து அண்மைக்காலம் வரை தொடர்கின்ற பிரச்சினை. ஆக, இலங்கை முஸ்லிம்கள் என்ற அடையாளத்தில் தமிழ் மொழியின் நிலைமை என்ன?



வி. ரி. தமிழ் மாறன்



1999 மார்ச் 27,28ம் திகதிகளில் 'இலங்கை முஸ்லிம்களின் தேசி[illegible] அடையாளமும் அரசியல் தலையீடும்' என்ற தலைப்பி[illegible] 'மோர்ஜ்' கருத்தரங்கில் கலந்து கொண்[illegible]

அடுத்து, இந்தப் பேசும்மொழி பற்றிய பிரச்சினை எழுவதற்கு முக்கிய காரணமாக அமைவது இலங்கை முழுவதிலும் பரவி நிற்கும் முஸ்லிம்களின் வசிப்பிடத் தகுதி அல்லது தன்மையாகும். பிரதேசம் முஸ்லிம்களின் அடையாளத்தைப் பொறுத்தளவில் எத்தனை பங்காக வகிக்கின்றது? மதம், மொழி, பிரதேசம் என்பவற்றை விட - தனியான கலாசாரம் ஒன்றும் இங்கு சார்த்தப்பட (attributable) முடியுமா?

இவற்றின் பின்னணியில் இலங்கையில் முஸ்லிம்களைத் தனித் தேசிய இனம் என்ற வரைபுக்குள் வருகின்றார்களா என்பதையும் பார்க்க வேண்டும்.

### சிறுபான்மை (இனத்தின்) பிரச்சினைகள் (The Problems of Minorities):

உலகிலுள்ள எந்த நாடுமே சிறுபான்மையினரைக் கொண்டிராத நாடாக இன்றில்லை. இன்னொரு விதத்தில், எந்த ஒரு நபரையும் அவர் ஒரு சிறுபான்மைப் பிரிவு /வகுப்பு ஒன்றைச் சேர்ந்தவர் என அடையாளங்காட்ட முடியும் என்று கூறப்படுவதுண்டு. இங்ஙனம் கூறப்படுவதன் தாற்பரியம் யாதெனில், உலகில் ஏதோவொரு விதத்தில் சிறுபான்மை எனக் கூறுகையில் - ஒருவர் தன்னை எங்ஙனம் கருதிக் கொள்கின்றார் என்பதும் மற்றொருவர் அவரை எப்படி கருதுகின்றார் என்பதையும் வைத்தே இந்த சிறுபான்மை என்பது தீர்மானிக்கப்படுகின்றது எனலாம் இந்த விவாதத்தின்படி பார்ப்பின், 'சிறுபான்மை' என்ற பதம் 'கற்பனை'யானதென்றும் ஒருவரால் அவரது விருப்பம், நோக்கம் என்பவற்றுக்கமைய பாவிக்கப்படலாம் என்பதும் பெறப்படும்.

ஏதோவொரு காரணத்துக்காக 'அடையாளத்தை'ப் பற்றி நிற்க வேண்டிய அவசியம் சிலருக்கு ஏன் ஏற்படுகின்றது. இதற்குப் பின்னணியாக அமையும் சமூக, அரசியல் காரணிகள் யாவை என்பவற்றை விளங்கிக் கொள்ளுதல் அந்தந்தப் பிரிவுகளின் கோரிக்கைகளின் நியாயத்தை விளங்கிக் கொள்ள உதவும். இனம், மதம், மொழி, கலாசாரம், வசிப்பிடம் யாவுமே இந்த சமூக, அரசியல் பின்னணிகளின் உந்துசக்தியினால் ஒருவர் மீது தேவைக்கேற்பப் போர்த்திக் கொள்ளப்படக் கூடியதே என்பதையும் இன்று ஆய்வாளர்கள் நிறுவியுள்ளார்கள்.

ஆக, சிறுபான்மையினர் பிரச்சினைகள் என்பது உண்மையில் அடையாளப் பிரச்சினை தான் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்த அடையாளத்துக்கு நெருக்கடி ஏற்படும்போது தான் பிரச்சினையே ஆரம்பமாகின்றது. அடையாளத்துக்கான அச்சுறுத்தல் நிஜமானதா அல்லது கற்பனையானதா என்பதையிட்டுத் தான் அரசியல்வாதிகளும், புத்திஜீவிகளும் விவாதிக்கலாம். அதில் சரி, பிழைகள் இருக்கலாம். இங்ஙனம் அடையாளமானது எங்ஙனம் தேசியமாகின்றது என்பதையும் பார்ப்போம்.

### சிறுபான்மை எப்போது தேசியமாகின்றது?

வெறுமனே அரசியல், சட்ட வரைவிலக்கணங்களுக்கான வரட்சியான வகுப்பாக்கமாக இதைப் பார்க்காமல் ஒரு சிறுபான்மை தனது இருப்பைத் தக்க வைப்பதற்காக நடத்தும் ஜீவமரணப் போராட்டமாகவே இத்தேசியப் பரிமாணம் அமைகின்றது. இது உண்மையில் ஓர் உளவியற் பரிணாமம் என்று தான் கூற வேண்டும். ஐரோப்பிய குடியேற்றவாதத்துக்கு எதிராக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் நடாத்திய போராட்டங்களும் பின்னர் சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்களும் இதையே தான் சுட்டிக் காட்டின.

தேசியத்தின் தோற்றம் அப்படியொன்றும் வீணான அல்லது விநோதமான ஆசையின் விளைவுமல்ல. இது சராசரி மனிதனுடைய உணர்வுகளின் ஒட்டுமொத்தப் பிரதிபலிப்பேயாகும். இந்த உணர்வை இன்று அபிலாஷைகள் என்று (aspirations) வடிவங்கொடுத்துப் பார்க்கிறார்கள். இந்த அபிலாஷைகள் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளினால் உந்தப் பெறுகின்றன.

ஒவ்வொரு நபரும் தான் தனியாளாகச் செயற்படுவதை விடுத்துக் கூட்டாகச் செயற்படுவதன் அவசியத்தை உணர்கின்றார். இந்த அவசியம் ஏதாவதொரு இலாப நோக்கை அடிப்படையாகக் கொண்டதாகும். இலாப நோக்கு என்னும் போது வெறுமனே பணப்பெறுமதியை மட்டும் நாம் கருதுகிறோம் என்பதில்லை. அரசியல், சமூக, பொருளாதார மட்டங்களிலான இலாப நோக்கென இது விரியும்.

இந்த நோக்கு அரசியல் மட்டத்தில் விரிவடையும் போதே தேசியம் மலர்கின்றது. சிறுபான்மை தன்னை 'மக்கள்' என்ற சர்வதேசச் சட்ட வரைவிலக்கணத்துக்குள் கொண்டு வருகின்றது. சர்வதேசச் சட்டத்தின்படிக்கு 'மக்கள்' தம்மைத் தாமே ஆளுவதற்கு உரித்துடையவர்கள். எனவே தாங்கள் யார் என்பதை முதலில் அவர்கள் வரைவிலக்கணப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும். இங்ஙனமாக நாங்கள் சேபியர், நாங்கள் அல்பேனியர், நாங்கள் பொஸ்னியர், நாங்கள் ரூட்டு இனத்தவர்கள், நாங்கள் சுளு இனத்தவர் என விருப்பம் போல வகைப்படுத்திக் கொள்ளலாம். கூடுதலாக இனம், மதம், மொழி என்ற அடிப்படையில் தான் இந்த வகுப்பாக்கம் அமைந்து வந்திருக்கின்றது. இவற்றுள்ளும் அண்மைக்கால அனுபவத்தின்படி பார்ப்பின் இனத்துவமே மேலோங்குகின்றது. இந்த வகுப்பாக்கம் செயலுருப் பெறும் போது தேசியவாதம் செயற்படத் தொடங்குகின்றது.

இவ்விதத்தில் தேசியவாதமானது ஒன்றுபடுத்துஞ் சக்தியாகவும் வேறுசில சந்தர்ப்பங்களில் அதுவே மக்களைப் பிளவுபடுத்தி மோதவிடுஞ் சக்தியாகவும் இருந்து வந்துள்ளமைக்குப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. எனவே, தேசியவாதத்தை விளங்கிக் கொள்வதானால் அதனடிப்படைக் கூறுகளான கலாசாரம், தனித்துவம், அடையாளம், உளவியல் உறுத்தங்கள் என்பவற்றை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வகையில் அடையாளம் என்பதே முதன்மை பெறுகின்றது. தேசியவாதத்தை முன்னெடுப்போர் அடையாளம் பற்றியதோர் அச்சத்தை மனதில் கொண்டே செயற்படத் தொடங்குவர். இந்த அச்சத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நியாயமற்றது என ஒரேயடியாக ஒதுக்கி விடவும் முடியாது. இங்கே தான் அது மனித உரிமைகளோடு ஒத்துப் போவதற்கான சூழ்நிலையை நெருங்கி வருகின்றதெனவும் கூறலாம்.

உதாரணமாக, பிஸ்மார்க் ஜேர்மனி என்றொரு நாட்டைக் கட்டியெழுப்பும் போது அவன் முன்வைத்த அடையாளமும், மாஜினி இத்தாலி என்றொரு நாட்டை உருவாக்கும் போது முன்வைத்த அடையாளமும் ஒரே வகையின. அவை மனித உரிமைகளை மறுதலிப்பவையாகக் கொள்ளப்பட முடியா. உண்மையில் மக்களை ஒன்றிணைப்பதற்கான அடையாளமொன்றையே அவர்கள் கையாண்டனர். இன்னொரு, விதத்தில் அவர்களது கொள்கைகள் - உள்ளடக்கு சக்தியாகவே (inclusive) செயற்பட்டன. மறுபுறத்தில் ஜேர்மனியின் ஹிட்லரும், இத்தாலியின் முசோலினியும் பின்னாளில் கையாண்ட அடையாளம் என்பது விலக்குகின்ற சக்தியாகவே (exclusive) பயன்படுத்தப்பட்டன. இங்கே இவை மனித உரிமைகளை முற்றாகவே மறுதலிப்பவையாக உள்ளன. ஆயினும், விலக்குகின்ற சக்தியாகச் செயற்படும் அடையாளப் பிரக்ஞை என்பது எப்போதும் மனித உரிமைகளுக்கு எதிரானதாகவே இருக்கும் என்றும் கொள்ளப்பட முடியாது.

எனவே, அடையாளம் என்பது இல்லாமல் தேசியவாதம் என்பது இல்லையென்றாகும். இந்த அடையாளங்களுள் இனத்துவம் (ethnicity) முக்கியத்துவம் பெறும் போது இனத்துவத் தேசியவாதம் பிறக்கின்றது. இப்போது எங்களுடைய அடையாளம் என்ன என்பது பற்றி நாங்களே கேட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். எச்சந்தர்ப்பத்தில் இனத்துவம் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதையும் பார்ப்போம். மனித உரிமைகளை மறுப்பதாக இந்த அடையாளம் எப்போது மாறுகிறது? ஏன் மாறுகிறது என்பதையும் நாம் இப்போது விளங்கிக் கொள்ள முடியும்.

இந்தப் பகைப்புலத்தில் இலங்கையில் தமிழ் - முஸ்லிம் உறவினை ஆராய வேண்டியதே இங்கு அவசியமாகின்றது. இந்த நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிவரை தமிழ் - முஸ்லிம் என்ற வேறுபாடு பெரிதாக அடையாளங் காணப்படவில்லை. பேசும் மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்பதற்கு மேலாக அவர்கள் ஒரு தனியான இனத்தவர்கள் என்ற அழுத்தம் எவ்விடத்திலும் வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. ஆக, 1915இல் ஏற்பட்ட க[illegible]யானது வரலாற்றாசிரியர்களது கருத்தில், கரையோர முஸ்லிம்களது வியாபார பரிணமிப்புக்கு எதிரான சிங்களத் தேசியவாதத்தின் பதில் நடவடிக்கை என்றே கூறப்பட்டுள்ளது. இது ஓரளவுக்கு உண்மையென்றே கூறப்பட வேண்டும். ஏனெனில், அக்காலப் பகுதியில் முஸ்லிம் சமூகம் தனது இருப்பை வலியுறுத்துவதான எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபட்டதற்கான சான்றுகளுமில்லை. அதேபோல அதற்கான ஓர் அச்சுறுத்தலை அது எதிர்கொண்டிருக்கவுமில்லை. அத்தகைய அச்சுறுத்தல் தமிழ்ச் சமூகத்திடமிருந்து வரக்கூடும் என்பது அன்றைய நிலையில் கற்பனைக்கும் எட்டாததாகும்.

தமிழ் - முஸ்லிம் நல்லுறவானது மிக அண்மைக்காலம் வரை மிகச் சிறப்பாக இருந்ததாகவே பலரும் சிலாகித்துப் பேசுகிறார்கள். இந்த அந்நியோன்ய உறவின் பின்னணியில் இருந்தது - இரண்டுமே சிறுபான்மை என்ற புரிந்துணர்வாக இருக்கலாம். அல்லது தங்களுக்கிடையில் பரஸ்பர போட்டி அரசியல், சமூக, பொருளாதார மட்டங்களில் ஏற்பட வாய்ப்பில்லை என்று அவை கருதியமையினால் ஏற்பட்ட ஒற்றுமையாக இது இருந்திருக்கலாம். தமிழர்கள் தலைவர்களாக இருந்த கட்சிகளிலும் பெரும்பான்மையின மக்கள் தலைமை வகித்த கட்சிகளிலும் முஸ்லிம்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தார்கள். செல்வாக்குடனும் மிளிர்ந்தார்கள். ஆனால், அவர்கள் முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் அங்கு செல்வாக்குப் பெற்றிடவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். பொதுவான அரசியல் இலக்கோடு செயற்படும்போது தொகுதியின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார்களே தவிர, இன, மத, மொழிவாரிப் பிரிவுகளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டதில்லை.

இது அரசியல் நோக்கான ஒன்றாகவோ அல்லது பொதுவானதாகவோ இருக்கும்வரை எவ்வித பிரச்சினையுமின்றித் தொடர்ந்தது. ஆனால், அரசியல் போக்குகள் வேறுபட ஆரம்பித்த போது தான் உறவில் விரிசலும் ஆரம்பித்தது எனலாம். தவறான அணுகுமுறைகள், சித்தாந்த விளக்கங்கள், மூளைச் சலவை என்பவற்றால் இந்த விரிசல் ஏற்பட்டது என நல்ல பிள்ளைத்தனமாக வாதிடுவதில் எனக்கு நம்பிக்கையில்லை.

### முஸ்லிம் தேசியவாதத்தின் முகிழ்ப்பு

முஸ்லிம் தேசியவாதம் என்பது தமிழ்த் தேசியவாதம் முனைப்புப் பெறும்வரை முடங்கித்தான் கிடந்தது. தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியின் பயனாக தமிழ் மக்களிடையில் அதிகாரம் வந்து சேரும் என்ற ஓர் நிலை ஏற்பட்டமை தான் முஸ்லிம் தேசியவாதத்தின் பிறப்புக்கு உண்மையான காரணமாகும். இந்த ஜனனம் எவ்விதத்திலேனும் தவறானதா என்று விவாதிப்பதில் பிரயோசனமில்லை. ஆனால், தமிழ்த் தேசியவாதத்தின் அடக்குமுறை அல்லது தவறான போக்குத்தான் முஸ்லிம் தேசியவாதத்-

⇨ 19

நன்றி - நூலகத்திட்டம்



பொதி வருகிறது: தீர்வுப் பொதி வருகிறது...

# பொதியால் வரப் போகும் இலாபம் என்ன?

-அருண்

கடைசியாக ஒருவாறு அரசாங்கம் அறிவித்து விட்டது. எதிர்வரும் ஓகஸ்ட் 19ம் திகதியளவில் ஜனாதிபதி முறையை ஒழித்தல் உள்ளிட்ட அதிகாரப்பகிர்வு யோசனைகள் அடங்கிய தீர்வுப் பொதியை சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக அறிவித்து விட்டது.

ஜனாதிபதி முறையை நீக்குவதாக தெரிவித்த வாக்குறுதியை இன்னமும் நிறைவேற்றவில்லை என்ற காரணத்தினை முன்வைத்து அண்மையில் ஐ.தே.க. நடாத்திய ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் நடாத்தியும் அவசர கால சட்ட விதிகளின் கீழ், அதே ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அதிவிசேட பாதுகாப்பு பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதித்தும், பத்திரிகையாளர்களை தாக்கியும் அடாவடித்தனம் செய்த அரசாங்கம் திடீரென இப்படி அறிவித்திருப்பது பலருக்கும் வியப்பை ஊட்டக்கூடிய ஒன்றுதான்.

ஆனாலும், அது அறிவித்திருக்கிறது. ஆகக் குறைந்தது ஐ.தே.கவினதும் பிறரதும் நெருக்கடிகளையும் எதிர்ப்பையும் ஒரு மாதத்திற்காகவது தள்ளிப் போடுவதில் அது ஓரளவுக்கு இதன் மூலம் வெற்றி பெற்றிருக்கின்றது என்றே சொல்லவேண்டும்.


இதற்கிடையில், இவ்வளவு அவசரப்படுகிறீர்களே, நீங்கள் இந்த ஜனாதிபதி ஒழிப்பு முறைக்கு உடன்பட தயாரா என்றும் பாராளுமன்றத்தில் அந்தச் சட்டமூலம் வந்தால் அதை ஆதரிப்பீர்களா என்றும், ஐ.தே.கவிடம் நேரடியாகவே கேட்பதற்கான முயற்சிகளும் அரச தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுபான்மையின கட்சிகளின் அபிப்பிராயங்களைக் கேட்டுவிட்டுத்தான் நான் முடிவு செய்வேன் என்று ஜனாதிபதி அறிவித்தாலும் கூட தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது உறுதியென்று கூறப்பட்டு வருகிறது.

இந்த அரசாங்கத்தின் கடந்த கால வாக்குறுதிகளையும், காலக்கெடுக்களையும் கேட்டுக் கேட்டு அவை திரும்பத் திரும்ப மீறப்பட்டதால், சலித்துப் போனவர்கள் இதுவும் இன்னொருவகை ஏமாற்று அறிவிப்புத் தானோ என்னவோ என்று சந்தேகப்படத்தான் செய்கிறார்கள். ஐ.தே.கவுடன் பேசுவது, சிறுபான்மை கட்சிகளுடன் பேசுவது என்று இன்றும் சிலகாலம் நிலைமையை இப்படியே சமாளித்துக் கொண்டு சென்று விடலாம் என்று யோசித்தும் அரசாங்கம் இப்படி அறிவித்திருக்கலாம் என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனால், இத்தகைய ஒரு அறிவிப்பு ஐ.தே.கவின் எதிர்ப்புகளையோ, அல்லது அதைப் படமெடுக்கச் சென்று அடிவாங்கிய பத்திரிகையாளர்களது ஆத்திரத்தையோ, தற்காலிகமாக ஆறப்போட முடியும் என்றாலும் இன்னொரு விதமான எதிர்ப்பையும் உருவாக்கி விட்டுள்ளது.

தீர்வுப்பொதி நாட்டைப் பிளவு படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு சதி என்று கருதும் தேசிய ஒருங்கமைப்புக் கமிட்டி, சிங்கள வீரவிதான, பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம் போன்ற அமைப்புக்கள் தாம் அரசாங்கத்தின் இந்த தீர்வுப்பொதியை சட்டமூலமாக சமர்ப்பிக்கும் செயலை எதிர்த்து பரவலான ஆர்ப்பாட்டங்களை நடாத்தப்போவதாக அறிவித்துள்ளன. ஏற்கெனவே இனவாத ரீதியில் செயற்படும் இந்த அமைப்புக்களின் பல ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தப்பட்டிருக்கின்றன. யுத்தத்தை ஆதரிக்கிற, சிங்கள இனவாத அடிப்படையில் செயற்படுகிற இந்த அமைப்புக்கள், தாம் அதிகாரப் பரவலாக்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்றாலும் நாட்டைப் பிளவுபடுத்தும் தன்மை வாய்ந்த அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை எதிர்க்கவே செய்வோம் என்றும், அதிகாரப் பரவலாக்கம் சிங்களக் கமிசன் அறிக்கையின் சிபாரிசின்படி மாவட்டங்களை அதிகாரப் பரவலாக்கத்திற்கான அலகாகக் கொள்வதையே நாம் ஏற்கிறோம் என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அகற்றுவது தான் அதன் நோக்கம் என்றால் அதை செய்து விட்டுப் போகட்டும். அதற்காக தீர்வுப் பொதியில்லாமல் அதை அகற்ற வேறு வழியில்லை என்று கூறுவது எந்த விதத்திலும் நியாயமில்லை என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதேவேளை இந்தச் சட்டமூலத்தை நீதிமன்றில் கேள்விக்குள்ளாக்கி, அதை பாராளுமன்றத்திற்கு வரவிடாது தடுக்கும் சட்ட நடவடிக்கைகளிலும் சிலர் இறங்கியிருப்பதாகவும் தடயங்கள் தெரிவிக்கின்றன.

எது எப்படியோ, அரசாங்கம் அறிவித்தது போல இந்தச் சட்டமூலம் தாக்கல் செய்யப்படுமானால், ஐ.தே.கவை தாக்கியதுபோல இந்த எதிர்ப்பாளர்களை தாக்கும் ஒரு நிலையை அரசாங்கம் எடுக்க வேண்டி வரலாம் என்பதுவும், ஆனால், அதற்குரிய துணிச்சல் இல்லையென்பதுவும் சாதாரண மக்களிடையே அவதானிப்பு அனுமானங்களாக நிலவி வருகிறது.





இங்கே எழுப்புகின்ற பிரதான கேள்வி என்னவென்றால், அரசாங்கம் அறிவித்தபடி செய்யுமா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, இனவாதிகள் அஞ்சவும், ஐ.தே.க தயங்கவுமான விடயங்கள் என்ன தான் அதில் இருக்கின்றன என்பது தான். 1997 ஒக்டோபர் மாதத்தில் நீண்ட இழுத்தடிப்புகட்குப் பின் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதியில் இப்போது எஞ்சியிருப்பது என்ன? இந்தத் தீர்வுக்கு மாற்றாக தமிழ்க் கட்சிகள் (குறிப்பாக ஈ.பி.டி.பி) முன்வைத்த கருத்துக்கள கணக்கில் எடுக்கப்பட்டனவா? முஸ்லிம்கள் சார்பாக முஸ்லிம் காங்கிரசினால் முன் வைக்கப்பட்ட மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்தில் வாழும் மக்கள் வடக்குடன் இணைந்து வாழ விரும்புகிறார்களா என்று அறிய கருத்துக் கணிப்பு நடாத்தப்படவேண்டும். தென்கிழக்கு மாகாண சபை பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் கணக்கில் எடுக்கப்பட்டனவா? அல்லது வடகிழக்கு சபை, தென்கிழக்கு சபையை உருவாக்குவதற்கு கருத்துக்கணிப்பு தேவையில்லையென்ற த.வி.கூவின் அபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டுள்ளதா? பாராளுமன்ற செயற்குழுவில் அங்கம் வகித்த பிற பா.உக்கள் தெரிவித்த எதிர்க்கருத்துக்களை கணக்கில் எடுத்து இது தயாரிக்கப்பட்டதா? போன்ற கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. கிட்டத்தட்ட எல்லா தமிழ்க்கட்சிகளாலும் விமர்சிக்கப்பட்ட, போதாது என்று சுட்டிக் காட்டப்பட்ட இந்தத் தீர்வுப் பொதியில் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வைக் காண்பதற்கு தொடர்ந்தும் தடையாக இருக்கக் கூடிய விடயங்கள் என்று அண்மையில் (மார்ச் 1999) முன்னாள் வடகிழக்கு மாகாணசபை உறுப்பினர் வரதராஜப் பெருமாள் அறிவித்த யோசனைகளாவது கணக்கில் எடுக்கப்பட்டனவா என்று தெரியவில்லை.

வரதராஜப் பெருமாள் தனது 'கருத்துரைகளும், திருத்தங்களும்' என்ற தலைப்பில் இலங்கைக்கு வந்திருந்த போது ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த நீண்ட அறிக்கையில் பல்வேறு முக்கியமான விடயங்களை சுட்டிக் காட்டியிருந்தார். இலங்கை ஒரு சமஷ்டிக் குடியரசு என அழைக்கப்பட வேண்டும் என்பது முதல் அதன் தேசியக் கொடி குறித்து சிறுபான்மை மக்களது உணர்வலைகள் கணக்கெடுக்கப்பட வேண்டும், அது இலங்கை ஒரு பல்லின பல் கலாசார நாடு என்பதை பிரதிபலிக்க வேண்டும், ஒரு இரண்டாவது பிரதிநிதிகள் சபை நிறுவப்பட வேண்டும் என்றெல்லாம் தெரிவித்திருந்தார். 1972ம் ஆண்டு அரசியலமைப்பு இலங்கையை ஒரு பௌத்த நாடாக அறிவித்ததிலிருந்து அது இன்றுவரை தொடர்கிறது. அரசாங்கத்தில் ஆலோசனைகளிலும் அது இருக்கிறது. இது இருப்பதால் நாட்டில் தொடர்ச்சியாக அவநம்பிக்கையும், அழிவும் மட்டுமே வளர்ந்ததல்லாமல் வேறெந்த லாபமும் ஏற்படவில்லை. மாபெரும் மகானான பௌத்த பகவானின் பெயரால், குறுகிய அரசியல் லாபங்களுக்காக, அவரது போதனைகளுக்கு எதிராக, பிற இனங்களுக்கு மதங்களுக்கு பாரபட்சம் காட்டும் விதத்தில் அரசியலமைப்பு எழுதப்பட்டிருப்பது தெளிவு. நாட்டு மக்களிடையே யுத்தத்தை உருவாக்க, அசோகச் சக்கரவர்த்தியையே யுத்தத்திலிருந்து சமாதானத்தை நோக்கி செல்ல வைத்த பௌத்த பகவானது போதனைகள் பயன் படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு மதமும் அரசியலுடன் சம்பந்தமற்றதாக அரசியலமைப்பு சட்டத்தில் வழிசெய்யப்பட வேண்டும் என்றும் வரதராஜப் பெருமாள் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமல்லாமல் அவர் கவர்னர், முதலமைச்சர் ஆகியோருக்குரிய அதிகாரங்கள் பற்றியும் தெரிவித்திருந்தார். ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தா தமது கட்சியின் சார்பில் தெரிவித்த நீண்ட முக்கியமான அவதானிப்புக்களிலும் இதே விடயங்களை வலியுறுத்தியிருந்தார். தமிழ் தேசிய கீதம் அங்கீகரிக்கப்படுவது முதல், வடக்கு - கிழக்கு இணைப்பை இல்லாததாக்குவது வரை பல அம்சங்கள் அவரது அவதானிப்புகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. இலங்கை ஒரு பல்லின, பல் கலாசார, பல் மொழி பேசும் ஒரு பன்மைச் சமூகத்தைக் கொண்ட ஒரு நாடு என்பது இந்த தீவில் அங்கீகரிக்கப்படவில்லையென்பது தெளிவாக பலராலும் - குறிப்பாக அனைத்துத் தமிழ்க் கட்சிகளாலும் - சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

ஆனால், இவையெல்லாம் எந்தளவுக்கு கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றன? என்ற மாற்றங்களை அது உள்வாங்கியிருக்கிறது என்றால், அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதே விடையாகக் கிடைக்கிறது.

ஆக, இது பாராளுமன்றத்திற்கு வருவதால் என்ன லாபம் கிடைக்கப் போகிறது?

தாம் முன்வைத்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக தமிழ்க்கட்சிகள் இதுவரை அரசுக்கு என்ன நிர்ப்பந்தத்தை கொடுத்தார்கள் என்பதுவும் ஒரு முக்கியமான கேள்வி தான். ஆன்ால் அரசாங்கமும் அவற்றைக் கவனிக்கவில்லை.

பாராளுமன்றத்தில் வெற்றி பெறுவதற்காக ஒரு பயனற்ற 'பொதியை' முன்வைப்பதை விடவும், தோல்வியுற்றாலும் தீர்வைத் தரக் கூடிய ஒரு பொதியை முன்வைக்க அரசாங்கம் முன்வைத்திருக்கலாம். ஆனால், அதை அது செய்யப் போவதில்லை.

ஆக, இந்தப் பொதியால் நடக்கப் போவது தான் என்ன?

ஒருவேளை, ஜனாதிபதி முற்றமை ஒழிக்கப்பட்டு விடும். அந்த நன்மையாவது கிட்டும் என்பது தான் இதனால் கிடைக்கப் போகிற லாபமா?

இதிலே துயரம் என்னவென்றால், ஜனாதிபதி முறைமை மிகவும் மோசமான ஜனநாயக விரோத அதிகார முறை என்றாலும் கூட, பொதுத்தேர்தல் முறையால் தெரிவு செய்யப்படும் ஒரு பதவியாக இருப்பதால், அதில் வெற்றி பெறுபவருக்கு சிறுபான்மை மக்களது வாக்குகளும் அவசியம் என்பதால், முன்மொழியப்பட்ட 'பொதி'யும் பாராளுமன்ற ஆட்சி முறையும் வழங்காத பாதுகாப்பை அவர்களுக்கு இப்பதவி வழங்கலாம் என்பது தான்!

சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத ஒரு தீர்வை விடவும் ஜனாதிபதி முறைமையின் கீழ் அவர்களுக்கு பாதுகாப்பு அதிகம் தான்.

இதுதான் இன்று தமிழ் முஸ்லிம் மக்கள் முன் உள்ள ஒரு முக்கியமான சிக்கல்.


அரசாங்கம் புருடா விடுகிறதோ இல்லையோ, தீர்வுப் பொதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்பது வெறும் பம்மாத்தோ இல்லையோ, இப்பிரச்சினை தமிழ் முஸ்லிம் மக்கள் பாரதூரமாக எதிர்கொண்டு ஆக வேண்டிய ஒரு சிக்கல் இது என்பது மட்டும் உண்மை!

நன்றி - நூலகத்திட்டம்




நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கக் கோரி அண்மையில் அதனை அறிமுகப் படுத்திய ஐ.தே.- கட்சி யிலிருந்து மக்கள் விடுதலை முன்னணி வரை பல கட்சிகள் அமைப்புகள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியிருந்தன. அந்த நிறைவேற்று அதிகார முறைமை இலங்கையின் ஏனைய சிறுபான்மை இனக் குழுமங்களைப் பொறுத்தவரை சாதகமான ஒரு அம்சம் என்று வாதிக்கிறார் இக் கட்டுரையாளர். அவரது அபிப்பிராயங்களை அப்படியே தருகிறோம் ஒரு வாதத்திற்காக.

ஆ-ர்







**நிறைவேற்று ஜனாதிபதி முறை:**

# ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சாதகமானதா?

- பரந்தாமன் -



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குதல் வேண்டும் என்ற கோரிக்கைகள் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன. பாரம்பரியமாக இதனை எதிர்க்கும் மரபுரீதியான இடதுசாரி அமைப்புக்களுக்கு அப்பால் ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இது தொடர்பாகப் போர்க் கொடியை உயர்த்தியுள்ளன. அரசாங்கக் கட்சியினரைத் தவிர பொதுவாக அனைத்து சிங்களப் பத்திரிகைகள், தொடர்பு சாதனங்கள், பொது அமைப்புகள் என்பனவும் இதனை நீக்க வேண்டும் என வற்புறுத்துகின்றன. இம்முறையை நீக்கி முன்னரைப் போல பாராளுமன்ற அரசாங்க முறையை நடைமுறைப் படுத்தின் ஜனநாயகச் செயற்பாடுகள் எல்லாம் ஓகோ எனத் தளைத்துவிடும் என்ற வகையில் இவை ஆர்ப்பரிக்கின்றன. போதாக்குறைக்கு தினக்குரல் உட்பட தமிழ்ப் பத்திரிகைகளும் கூட இம்முறையை நீக்க வேண்டும் என வற்புறுத்துகின்றன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நேர்மையாக வற்புறுத்தும் ஒரேயொரு சிங்களத் தலைவர் என வர்ணிக்கப்படுகின்ற விக்ரமபாகு கருணாரத்ன இம்முறையை நீக்க வேண்டும் எனக் கூறி ஜே.வி.பி யுடன் இணைந்து மறியல் போராட்டம் நடாத்துகின்றார்.

இந்நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நிலையில் நின்று பார்க்கும் போது இதன் உண்மை நிலை என்ன? இம்முறை ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு ஏதாவது சாதகமான நிலையைத் தருகின்றதா? ஊரோடு சேர்ந்து இதனை நீக்க வேண்டும் எனத் தாமும் ஆர்ப்பரிப்பதற்கு ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு அவசியம் இருக்கின்றதா? பாராளுமன்ற முறையை மீளவும் கொண்டுவரின் ஜனாதிபதி முறையை விட மேன்மைப்பட்ட பாதுகாப்புக்கள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு உள்ளதா? இது விடயத்தில் 1947-1978 காலப் பகுதியில் நடைமுறையில் இருந்த பாராளுமன்ற அரசாங்க முறை என்ன அனுபவத்தைத் தருகின்றது? போன்ற வினாக்களையெல்லாம் எழுப்பிப் பரிசீலிக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை அரச மறுசீராக்கல் விடயங்களை ஆராயும் போது இரண்டு விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

1) இலங்கையில் ஒரு பேரினவாத அரசுருவாக்கம் நடைமுறையில் உள்ளது. இதனைப் பேரினவாதச் சமூக உருவாக்கம் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது.
2) இலங்கைத் தமிழர் என்ற தேசிய இனத்திற்கு அப்பால் முஸ்லீம்கள், மலையக மக்கள் என்கின்ற தேசிய இனங்களும் இலங்கையில் வாழ்கின்றன.

முதலாவது விடயத்தைப் பொறுத்தவரை இலங்கையின் பேரினவாத அரசுருவாக்கமும், அது கட்டமைத்த பேரினவாத அரச கட்டமைப்புமே நடைமுறையில் உள்ளது என்பது யாவரும் அறிந்த நிதர்சன உண்மை. இக்கட்டமைப்புக்குள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் அரசியல் அபிலாஷைகள் எல்லாம் தூக்கி வீசப்பட்டுள்ளன. இந்நிலையில் அரச கட்டமைப்பு தவிர்க்க முடியாமல் உருவாக்கிய அதன் ஓட்டைகளைப் பயன்படுத்தி அரச கட்டமைப்பை அசைத்து, பேரம் பேசியே தமது அடிப்படையான சிறிய அபிலாஷைகளைக் கூடப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் உள்ளன.

இந்த வகையில் ஜனாதிபதி அரசாங்க முறையிலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் சில ஓட்டைகளை அரச கட்டமைப்பு விட்டுள்ளது ஆகும். அவ் ஓட்டைகளைத் தவிர்க்க முடியாமல் மத்திய அரசு உருவாக்கத்தின் பங்காளிகளாக ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் இணைத்துள்ளன.

ஜனாதிபதி முறையைப் பொறுத்தவரை இரண்டு விடயங்கள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சார்பாக உள்ளன. ஒன்று, ஜனாதிபதியானவர் முன்னைய பிரதமரைப் போல பெரும்பான்மை சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படாமல் முழு மக்களினாலும் தெரிவு செய்யப்படும் நிலை ஆகும்.

இரண்டாவது, ஐம்பது வீதமான வாக்குகளுக்கு மேல் எடுத்தவர்களே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் நிலை ஆகும்.

இதில் முதலாவது விடயம் அரசின் தலைவரைத் தெரிவு செய்வதில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் பங்களிப்பினை வழங்க, இரண்டாவது விடயம் அப்பங்களிப்பின் பேரம் பேசும் ஆற்றலை வலிமையுறச் செய்துள்ளது. இவ் இரண்டையும் பயன்படுத்தி பேரம் பேசி ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சிறிய அபிலாஷைகளையாவது பெற்றுக் கொள்ள முடியும். அதுவும் வரப் போகின்ற ஜனாதிபதி தேர்தல் போல இரண்டு தேசியக் கட்சிகளுக்கும் கடும் போட்டி நிலவுகின்ற போது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பேரம் பேசும் ஆற்றல் மிகவும் வலிமையுடையதாக இருக்கும்.

முதலாளித்துவ ஜனநாயக கட்டமைப்பில் ஒடுக்கப்படும் சக்திகள் பேரம் பேசும் அரசியலுக் கூடாகவே தமது அபிலாஷைகளை சிறிதளவாவது பூர்த்தி செய்ய முடியும் என்பது தவிர்க்க முடியாத போக்காகும். நிர்ப்பந்தங்கள் எதுவும் இல்லாமல் அதிகாரத்தை தங்கள் கைகளில் வைத்திருக்கும் ஆதிக்க சக்திகள் அதனை கீழுள்ள சக்திகளுக்கு சுவறவிடப் போவதில்லை. இந்தியாவில் ஒடுக்கப்பட்ட சாதியினர் இதனைப் பயன்படுத்தியே சற்று மேல் நிலையாக்கம் பெற்றுள்ளார்கள். ஆசிரியர்களுக்கான இடர் காலக் கொடுப்பனவில் கூட முதலில் சிங்களவர்களுக்கு மீதி இருந்தால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எனக் கூறுமளவிற்கு, நாகரீகம் இல்லாது பச்சை இனவாதம் பேசுகின்ற நாட்டில் தான் நாம் வாழ்கின்றோம் என்பதை மறக்கக் கூடாது.

இது தொடர்பாக ஒரு இடக்குக் கேள்வி எழலாம். ஜனாதிபதி முறை நிலவிய 21 வருடங்களில் எமது தலைவர்கள் இதனைப் பயன்படுத்தி எதனை வெட்டிக் கிழித்துள்ளார்கள்? இது நியாயமான கேள்வி. இதற்கு சூடு சொறனையில்லாத, முதுகெலும்பில்லாத எமது தலைவர்களின் தவறே காரணம் ஒழிய யாப்பின் தவறு அல்ல. கிடைத்த சந்தர்ப்பங்களைக் கூட முறையாகப் பயன்படுத்தத் தெரியாத தலைவர்களைத் தான் நாம் பெற்றுள்ளோம் என்பது துரதிர்ஷ்டமான விடயம் தான்.

இவ்வளவு பலவீனங்களுக்கு மத்தியிலும் கூட 1988 ஜனாதிபதி தேர்தல் தான் நாடற்றவர் பிரச்சினையைத் தீர்த்தது என்பதையோ, இப்பேரம் பேசும் அரசியலின் மூலம் தான் முஸ்லீம் மக்கள் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தையோ, ஒலுவில் துறைமுக நிர்மாண வேலைகளையோ பெற்றார்கள் என்பதையோ மறுக்க முடியாது.

வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை இம்முறை தீர்க்குமா? என்று இன்னோர் கேள்வி எழலாம், வடக்கு-கிழக்கு பிரச்சினை என்பது ஜனநாயக முறைகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையாக இன்று சென்றுவிட்டது. அது இன்று அறுவைச் சிகிச்சையை எதிர்நோக்கி நிற்கின்றது. சமூகமளவில் மக்கள் இன்று இரு தேசங்களாகப் பிரிந்து விட்டனர். இப்பிரிவினையை அரசியலளவில் நிலை நிறுத்தும் பணியே எஞ்சியுள்ளது. இங்கு ஜனாதிபதி முறையோ, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையோ எதுவும் பயன்படப் போவதில்லை. நாட்டு எல்லையைக் கடந்து சர்வதேச மத்தியஸ்தத்துக்காக அது காத்து நிற்கின்றது. மைய நீரோட்டத்தின் எந்தப் பூசி மெழுகல்ளுக்கும் அப்பாற்பட்டதாக அது சென்று விட்டது.

எனவே இவ் யாப்பு மறுசீராக்கப் பிரச்சினைக்குள் வடக்கு-கிழக்கு மக்களை நாம் இழுக்கக் கூடாது. ஏனைய இரு தேசிய இனங்களான முஸ்லீம்களினதும் மலையக மக்களினதும் நிலைகளையே நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இங்கே தான் யாப்பு மறுசீராக்க விடயங்களைப் பார்க்கும் போது நான் ஏற்கனவே குறிப்பிட்ட இரண்டாவது விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது. பொதுவாகவே தமிழ் மக்கள் மத்தியில் இலங்கையில் ஒடுக்கப்படும் இனமாக வடக்கு-கிழக்குத் தமிழர்களை மட்டும் பார்க்கும் நிலை காணப்படுகின்றது. ஏனைய தேசிய இனங்களான முஸ்லீம்களையும், மலையக மக்களையும் தனித்தன்மை வாய்ந்த தேசிய இனங்களாகக் கருதுவதில்லை. "இலங்கைத் தமிழ் பேசும் மக்கள்" என்பதற்குள் அவர்களெல்லாம் அடங்கி விடுவார்கள் என்ற கருத்தே மேலோங்கியுள்ளது. இதன் படி வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்குச் சாதகமாக இல்லாத விடயங்கள் எல்லாம் தேவையற்றது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. மரபுத் தமிழ்த் தலைமையான தமிழர் கூட்டணி தொடக்கம்( தினக்குரல் இது தொடர்பாக ஆசிரிய தலையங்கம் ஒன்றையும் தீட்டி இருந்தது.) தமிழ்த் தொடர்பு சாதனங்கள் வரை இப்போக்கு காணப்படுகின்றது.

இது முழுக்க முழுக்க வடக்கு-கிழக்கு மேலாதிக்கப் போக்காகும். இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் சுத்த யாழ் மேலாதிக்கப் போக்காகும். இவ்வாறு "தமிழ் பேசும் மக்கள்" என்ற தேசியத்தைப் பேசுவோர் ஒரு போதும் முஸ்லீம்களையும், மலையக மக்களையும் சமமாக மதிக்கவில்லை என்பதே வரலாறு.

மேற்கூறியவற்றை வைத்துப் பார்க்கும் போது ஜனாதிபத முறை முஸ்லீம் மக்களுக்கும், மலையக மக்களுக்கும் பேரம் பேசும் அரசியலை நடாத்துவதற்கான வழிவகைகளைச் சிறியளவிலாவது திறந்து விட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

பாராளுமன்ற அரசாங்க முறைமைக்குள் பேரம் பேசும் அரசியலை நடாத்துவதற்குரிய வழிவகைகள் இல்லையா? என இன்னோர் கேள்வி எழுகிறது. 1947 தொடக்கம் 1978-வரை 31 வருடங்களாக பாராளுமன்ற முறை ஆட்சியை நாம் அனுபவ ரீதியாகவே பார்த்துள்ளோம். அங்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் ஆதரவில்லாமல் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய பலம் ஆளும் கட்சிக்கு இருந்தது. 1960 மார்ச் தேர்தலின் பின்னர் பேரம் பேசக் கூடிய பலம் தமிழரசுக் கட்சிக்கு இருந்த போதும் பேரினவாதிகள் அதற்கான வாய்ப்புக்களை வழங்க வில்லை. 1965 தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சியும் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைத்த போதும் அரசாங்கம் பேரத்தின் படி நடக்காததினால் 1968இல் அது அரசாங்கத்தை விட்டு வெளியேறியது. வெளியேறிய பின்னரும் கூட பெரும்பான்மை இனத்தின் பலத்தினைக் கொண்டு 1970 வரை ஐ.தே.க கூட்டணி ஆட்சியில் இருந்தது.

1970க்கு பின்னர் பேரத்திற்கான ஆற்றல் அறவே இல்லாமல் போய் விட்டது. 1970 தேர்தலில் ஆளும் கட்சிகளின் கூட்டணி 2/3 பெரும்பான்மையை தனித்து சிங்கள மக்களின் வாக்குகளைக் கொண்டே பெற்றது. 1977 தேர்தலில் பேரத்திற்கான சாயலே இடம் தெரியாமல் மறைந்தது. அத்தேர்தலில் ஐ.தே.கட்சி தனித்து 5/6 பெரும்பான்மையைப் பெற்றது.

மறுபக்கத்தில் இந்த 31 வருட ஆட்சிக் காலத்திலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒடுக்கு முறைகளை, ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் கண்டன. 1948ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச்சட்டம், 1949ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டம், இதே ஆண்டு வாக்குரிமைச்சட்டம், 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம், 1964ஆம் ஆண்டு சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம், 1967ஆம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டம், 1970ஆம் ஆண்டு உயர் கல்வியில் மொழிவாரித் தரப்படுத்தல் முறை, 1972ஆம் ஆண்டு பெயரளவில் காப்பீடுகளாக இருந்தவற்றையே இல்லாமல் செய்த முதலாவது குடியரசு அரசியல் யாப்பு என இவ் ஒடுக்குமுறைக்கு நீண்ட பட்டியலே உண்டு.

தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் அமையும் பாராளுமன்ற அரசாங்க முறைக்குள் பேரம் பேசும் வழிகள் இல்லையா? ஓரளவு இருக்கின்றது என்றே கூறலாம். தற்போதுள்ள அரசாங்கமே மலையகக் கட்சிகளினதும், முஸ்லிம் கட்சிகளினதும் ஆதரவுடன் தான் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. காலப்போக்கில் இந்நிலை மாறலாம். மக்கள் விடுதலை முன்னணியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் ஒரு சக்தியாக வளர்ச்சியடையும்

⇨ 19

நன்றி - நூலகத்திட்டம்



# தேங்கிப் போய் நிற்கிற நாம்..!

நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தி வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த போது, நான் இந்தப் பத்தியில் தீர்வுப் பொதி பாராளு-மன்றத்தில் தாக்கல் செய்யப்படப் போவதாக அறிவிக்கப்பட்ட விடயம் பற்றி எழுதுவதற்காக யோசித்துக் கொண்டிருந்தேன் என்பது ஒரு ஆபூர்வமான ஒரு வகையில் ஆச்சரியமான பொருத்தப்பாடு தான்.

தீர்வுப் பொதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படப் போகிறதென்ற அறிவிப்பு வந்தது முதல், அப்பொதி-யின் சாதக பாதக அம்சங்கள் பற்றி மீண்டும் ஒரு முறை தட்டிப் பார்த்து விட வேண்டும் என்று தோன்றியது. ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளாக எந்தவிதமான அசுமாத்தமும் இன்றி கிடந்த இந்தத் தீர்வுப் பொதி இப்போது திடீரென தூசி தட்டப்-பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்-பிக்கப்படப் போவதாக அறிவிக்கப்-பட்டது ஏன் என்ற கேள்வி என்னுள் எழுந்து கொண்டிருந்தது.

தீர்வுப் பொதி தொடர்பாக தமிழ் கட்சிகள், புத்திஜீவிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள், சிங்களத் தீவிரவாதிகள், இனவாதிகள் போன்றோரால் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் ஒவ்வொன்றாக என் மனதில் ஓடிக் கொண்டிருந்தன.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட இந்தத் தீர்வுப் பொதி, இன சமத்துவம், பரஸ்பர அங்கீகாரம், அதிகாரப் பரவல் போன்ற விடயங்களில் காட்டிய அக்கறையின் போதாமை அல்லது பொறுப்பற்ற தன்மை பற்றியெல்லாம் எனது சிந்தனை ஓடியது. தேசிய கீதம், சிங்கக் கொடி, அரச மதம் போன்ற மிகச் சாதாரண விடயங்-களிலேயே ஏன் சமஷ்டி என்ற சொல்லைப் பாவிப்பதிலேயே அரசாங்கத்தின் தீர்வுப் பொதி எவ்வளவுக்கு ஒரு 'சிங்களச் சார்ப்பு' நிலையில் நின்று செயற்-பட்டிருக்கிறது, இனப்பிரச்சினை தொடர்பான ஒரு சிங்களக் கண்ணோட்டத்துடன் செய்ற்-பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்-கையில் அதை எழுதியவர்களுள் ஒருவர் என்று சிலாகிக்கப்படுகிற நீலன் திருச்செல்வம் தொடர்பாகவும் எனது சிந்தனை ஓடுவதைத் தவிர்க்க முடியவில்லை. அவர் இந்தப் பொதியின் சக ஆசிரியர்களுள் ஒருவர் (மற்றவர் நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ்) என்று யோசிக்கையில், இது எவ்வளவு மோசமான கண்டிக்-கப்பட வேண்டிய அறிவுத்துறை மோசடி என்ற எண்ணம் எழுந்தது.

கிட்டத்தட்ட அப்போது தான் இந்தச் செய்தி வானொலியில் ஒலி பரப்பாகியது. நம்பமுடியாத, புனைகதைகளில் வருவது போன்ற ஒரு பொருத்தப்பாடு. ஆயினும், அந்தச் செய்தி வெளியான போது அவரது பங்களிப்பு தொடர்பான தீவிர விமர்சனங்கள் என்மனதில் ஓடிக் கொண்டிருந்த போதும், இந்தச் செய்தி என்னைத் திடுக்கிடச் செய்து விட்டது. 'அட அறியாயமே' என்ற சொல் என்னையறியாமல் வாயிலி-ருந்து வந்தது.

பேராசிரியர் வில்சன் பற்றியும், அவரது அரசியல் சாசன நிபுணத்-துவம் பற்றியும் வாசகர்கட்குச் சொல்லத் தேவையில்லை. எஸ்.ஜே.வி.யின் மருகரான பேராசிரியர் அவர்களுக்கு முன்நாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன-வுடன் இருந்த நெருங்கிய தொடர்பு பற்றியும் முழு உலகமும் அறியும்.

பேராசியர் வில்சன் அவர்களது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் ஜே.ஆரின் 1978ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனத்திற்கு இருந்தது என்று பொதுவாகக் கூறப்படுவதுண்டு.

தனிப்பட்ட முறையில் தனக்கும் ஜே.ஆருக்கும் இடையில் இருந்த உறவு காரணமாக, அவரது ஆட்சிக்-காலத்தில் தமிழ் மக்களின் உரிமை-களை, அவரது நியாயமான அபிலாசைகளை வென்றெடுக்க



முடியும் என்று தீவிரமாக் நம்பினார் அவர். அன்றைய த.வி.கூ.விற்கு கூட அவருக்கு இருந்தளவு நம்பிக்கை அரசாங்கத்திலோ ஜே.ஆரிலோ இருக்கவில்லை. அவ்வளவுக்கு நம்பிக்கையுடன் இருந்தார் அவர்.

ஆனால் வரலாறு அவருக்கு கற்றுத்தந்தது. ஜே.ஆர் என்ற தனிமனிதருக்கும் அரசுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டையும், தனிமனிதர்கள் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் தலைவிதியை மாற்றுவதில்லை என்பதையும், அவர் காலத்தில் உருவாகி வளர்ந்த சிங்கள பௌத்தம் என்ற அரசியல் போக்கு, அரசியல் ரீதியாக அன்றி தனிநபர் செல்வாக்-கால் வெல்லப்பட முடியாது என்பதையும் வரலாறு அவருக்கு கற்றுத் தந்தது.

தனது மதிப்பீடுகள் நம்பிக்கை-களின் தவறுகளை பின்னாளில் அவர் தெளிவாகவே தெரிந்து கொண்டார். அவரது 'இலங்கையின் உடைவு' (Break up of srilanka) என்ற நூல் இதைத் தெளிவு படுத்துகிறது.

நீலன் திருச்செல்வம் அவர்களின் கதையும் இது தான். சந்திரிகா பண்டாரநாயக்கா மீதான நம்பிக்-கையும் இலங்கை அரசின் போக்குகளும் அந்த ஒரு நபருக்கூ-டாகவே தலைகீழாகப் புரட்டிவிட முடியும் என்ற எண்ணமும் தான் அவரை வழி நடாத்தின. கடந்த கால வரலறும், சிங்கள அரசியல் கட்சிகளதும் அரசினதும் போக்குகள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் நிறுவன ரீதியாக வளர்ந்து வந்த விதமும் கூட இந்த விடயத்தில் அவரது கண்களைத் திறக்கவில்லை. அரசியல் தீர்வுப் பொதி, அம்மையார் மற்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸூட-னான தனது உறவு என்பவற்றால் நிறையச் சாதித்துவிட முடியும் என்று அவர் நம்பினார்.

இந்த நம்பிக்கை அவரது கல்வி ஆழத்தையும், அறிவுத்துறை மேதமையையும் கூட மீறி அவரது கண்களை மறைத்தது. தனது வாழ்நாளில் அவர் எழுதிய மிக மோசமான படைப்பாக ஜி.எல்.பீரிஸூடன் அவர் சேர்ந்து எழுதிய தீர்வுப் பொதி அமைந்தது.

சட்ட விதிகளுக்குள் சூட்சுமங்க-ளைப் போட்டு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும் என்ற அப்பாவித் தனமான நம்பிக்கை அவரிடமும் இருந்திருக்கும் என்று நம்ப முடியவில்லை. ஆனால் தனிப்பட்ட நம்பிக்கைகளால் அதைச் சாதிக்கலாம் என அவர் நிச்சியம் நம்பினார்.

இந்த நம்பிக்கையின் தவறை அவர் புரிந்து கொள்ள நீண்ட காலம் எடுத்திருக்காது. ஆனால் அதற்கு புலிகள் அவரை விட்டுவைக்க-வில்லை.

தற்கொலைக் குண்டுப் போராளி ஒருவரது தாக்குதலால் அவர் கொல்லப்பட்டு விட்டார்.

மாற்றுக் கருத்துக்கள், மாற்று வழிமுறைகள் என்பவற்றைக் கொண்டிருக்கவும், அதற்காக உழைக்கவும், போராடவும் ஒருவருக்கு உள்ள உரிமையான அடிப்படை மனித உரிமையை புலிகள் அவருக்கும் வழங்க மறுத்து விட்டனர்.

ஒரு மனித உரிமையாளர் என்ற முறையில், தன்னுடைய மனித உரிமைக்காக தனது உயிரைப் பலிகொடுத்து விட்டார் அவர். ஒரு மனித உரிமையாளரால் அதற்கான போராட்டத்திற்காகத் தரக்கூடிய உயர்ந்தபட்ச பங்களிப்பு அது.

ஆம், அவரது கொலை, அவரது - அவர் தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்த - மனித உரிமைக்கான குரலுக்கு நடந்த கொலை.

அரசியல் படுகொலைகள் ஒரு போதும் அரசியல் போக்குகளை மாற்றுவதில்லை. தனிநபர்களது மரணங்கள் அரசியல் போக்குகளை இல்லாமல் செய்து விடுவதில்லை. அரசியல் போக்குகள் செயற்பாடுகள் சம்பந்தமான மாற்றுக் கருத்துக்களை எதிர்க்க படுகொலைகள் தான் வழி என்றால், ஒரு துரையப்பாவுக்குப் பிறகு எந்தக் கொலையுமே நடந்திருக்காது.

புலிகள் எத்தனையோ போராளி-கள் இராணுவத்துடனான யுத்தத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் புலிகள் இயக்கம் இல்லாமல் போகவில்லை. ஒரு காலத்தில் மிகவும் சக்தி வாய்ந்த புலித்தலைவர்களாக இருந்த பலர் கிட்டு, மாத்தையா, உட்பட - இன்று இல்லை. ஆனால் புலிகள் இயக்கம் அழிந்து விடவில்லை.

ஆம். தலைவர்களோ தொண்டர் களோ கொல்லப்படுவதால் ஒரு அரசியல் போக்கு மாறுவதில்லை.

அது இடையறா அரசியல் போராட்டங்களாலும விவாதங்-களாலும் தான் மாற்றமுறுகிறது.

நீலன் அவர்கள் சந்திரிகா என்ற தனிநபரால் தலைவிதியை மாற்ற முடியும் என்று நம்பினார். நீலனையும் பிற தலைவர்களையும் அழிப்பதால் த.வி.கூ.வின் அரசியல் போக்கை, அல்லது பிரச்சினையின் தீர்வுக்கான மிதவாத அணுகு-முறையை இல்லாதொழித்து விடலாம் ஏ்ன்று புலிகள் கருது-கிறார்கள்

இவை எதுவும் சாத்தியமில்லை.

இதை வரலாறு தெளிவாகவே காட்டி வந்திருக்கிறது.



நீலனின் அரசியல் செயற்-பாட்டினால் எந்த லாபமும் இல்லை என்பதை ஏற்பதில் புலிகளுடன் உடன்படுபவர்கள் கூட அவரது கொலையால் எந்த லாபமும் இல்லை என்பது மட்டுமல்ல, இது தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போருக்கு எதிர்ப்போக்கான விளைவையே தரும் என்பதைக் கூறத் தயங்க மாட்டார்கள்.

இந்தப் பத்தியில் இப்போக்குக் குறித்துப் பலதடவை எழுதியாற்று.

எழுதியதை திரும்பத் திரும்ப எழுதவைக்கும் அரசியல் சூழலில் நாம் வாழ்கிறோம். துரதிர்ஷ்ட வசமான இந்த நிலை எமக்கு தெரிவிக்கிற உண்மை இதுதான்.

நாம் தேங்கிப்போய் நின்ற இடத்திலேயே நிற்கிறோம் - அரசியல் ரீதியில்!

நன்றி - நூலகத்திட்டம்



## காத்தான்குடி: பள்ளிவாயல் படுகொலைகள்! இரத்த வரலாற்றின் ஒன்பது ஆண்டுகள்!!


# புலிகள் புரிந்து கொள்ள வேண்டியதும், செய்ய வேண்டியதும்

"எல்லாம் முடிந்தாயிற்று.... ஒரு யுக சூனியத்தின் முடிவை, விதியின் கைகள் எழுதியாயிற்று!"

என்ற எனது நண்பனின் கவிதை வரிகள் எவ்வளவு உள்ளர்த்தம் கொண்டவை என்பதை எண்ணிக் கொண்டே.... அன்று 1990 ஒகஸ்ட் 03 ம் திகதியின் கொடிய நினைவுகளுக்குள் நுழைந்து கொள்கிறேன்...!

ஒரு புறம் ஆறு. மறுபுறம் கடல். மற்றைய இரு பக்கங்களும் தமிழ்க் கிராமங்கள். எந்த நேரத்திலும் அவர்கள் காத்தான்குடிக்குள் புகுந்து விடக் கூடும். கடத்தினார்கள், கொன்றார்கள், கொள்ளையடித்தார்கள்... ஊருக்குள் புகுந்து விட்டால்? இல்லை எமக்கு பாதுகாப்பே இல்லை... ஆகவே விழிப்புக் குழுக்களை உருவாக்குவோம். ஊரின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும், நாம் காவல் புரிய வேண்டும்... எவரையாவது வித்தியாசமாய்க் கண்டால் பள்ளிவாயில் ஒலிபெருக்கிகளிலே பாங்கு சொல்லி மற்றவர்களுக்கு அறிவிக்கலாம். மின்சாரம் வேறு இல்லை. ஆகவே எல்லாப் பள்ளிகளும் பற்றரிகளை வாங்கி ஆயத்தமாக இருக்க வேண்டும். வீதிகளிலே வெளிச்சமில்லை... ஆகவே அனைவரும் உங்கள் வீடுகளுக்கு முன்னால் விளக்குகளை வைத்துவிடுங்கள்... வீதிகளிலே விழித்துக் கொண்டிருப்பவர்களுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுங்கள். எல்லோருமே இந்த விடயங்களில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

ஆயுதங்கள் இல்லை... ஆர்ப்பாட்டமில்லை... எங்களுக்குள் நாங்களே பயந்து கொண்டிருந்த காலமது... இந்தச் சூழலில் தான் அந்தக் கோரம் நிகழ்ந்தது! எதிர்பார்க்காத நேரத்தில்: அந்த இரவின் இறுதியில் விழித்திருக்க நினைத்திருந்த கண்கள்... இறைதுதியில் இஷாத் தொழுகையில் ஈடுபட்டிருந்த போது தான் முதுகுக்கு பின்னே வந்து... அவர்களது துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும் முழக்கித் தள்ளினார்கள்... அந்த விடுதலைப் புலிகள்!



நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம்களை இவ்வாறு சுட்டுத் தள்ளுமளவுக்கு எங்கள் சமூகம் இவர்களுக்கு எந்தத் தவறும் செய்திருக்கவில்லை!

அவர்களுக்குள்ளேயே இருக்கிற பிற அமைப்புக்கள் செய்த "காட்டிக் கொடுப்புகளை"க் கூட நாம் செய்யவில்லை...!

இவர்களது போராட்டத்திற்கு நாம் ஆதரவளித்திருக்கிறோம்! அது தான் நாம் செய்த பாவமாக இருக்க வேண்டும்.

எங்களது முதலாளிமார் பணத்தையும், வாகனங்களையும் அள்ளிக் கொடுத்ததும் எமது இளைஞர்கள் அவர்களோடு தோளோடு தோளாகப் புறப்பட்டதும்... அவைதாம் நாம் செய்த துரோகமாக இருக்க வேண்டும்!

நூற்றுக்கு மேற்பட்ட மரணங்கள்: அந்த மரணங்களின் பின்னே அநாதைகளாகப் போன நூற்றுக்கணக்கான குழந்தைகள்: கண்ணீரும் கம்பலையுமாக சிறுவயதிலேயே வாழ்விழந்து போன நூற்றுக்கணக்கான சகோதரிகள்...!

கிழக்கு முஸ்லிம்களின் வரலாற்றில் இப்படியொரு சோகக்கதை.... எழுதப்பட்டிருக்கவே கூடாது!

நான் இன்னமும் யோசிக்கிறேன்.. எனது பக்கத்து வீட்டு வயது போன உபாத்தியாயரையும் அவருடைய மகனையும், மகனுடைய சின்ன சின்னக் கூட்டாளிகளையும் ஏன் இவர்களை கொலை செய்தார்கள்?

அந்தச் சின்னவர்கள் இவர்களுடைய எந்த உரிமையைப் பெறுவதிலே தடையாயிருந்தார்கள்...?

ஏன்! எனது மாமாவும், கூட்டாளியும் கூடத்தான் இறந்து போனார்களே! அவர்கள் தாம் இவர்களுக்கு என்ன செய்தார்கள்?

கொல்லப்பட்டவர்களெல்லாம் ஏதும் அறியாமலேயே இறந்து போனார்கள்! அந்தக் கொடிய நிமிடங்களில் கூட நான் வாழ்கின்ற முஸ்லிம் சமூகம் இந்தக் கொலைகளுக்காகப் பழிவாங்க வேண்டும் என்று முரட்டுத்தனம் செய்யவில்லை!

நடந்தவற்றிற்கு தீர்ப்புச் சொல்லக் கூடியவன் "எல்லாம் வல்ல இறைவனே" என்று அவன் பக்கம் பாரத்தைப் போட்டு நின்றது எனது சமூகம்!

இங்கே தான் எனது நெஞ்சு பெருமையால் உயர்கிறது.. நான் ஒரு மனிதாபிமானமுள்ள சமூகத்தில் பிறந்திருக்கிறேன்!

இந்த நினைவுப் படிமங்களின் பின்னணியில் சரித்திரம் மிக விசாலமாய் நீண்டு கிடக்கிறது...

மரணங்கள் மறக்கப்படக் கூடியவை... மறக்கப்பட வேண்டியவை. ஆனால், தியாகங்கள் அப்படியல்ல...! மண்ணில் விழுகின்ற விதைகள் யாவும் முளைத்தே ஆகும் என்பது நியதி அல்ல! ஆனால், விதைக்கப்பட்ட விதைகள் யாவும் இன்னும் ஒரு நூறு விருட்சங்களை உருவாக்குகின்றன...

அதுபோல தான் அன்று சாய்ந்து விட்ட நூற்றுக்கணக்கான வீர மரணங்கள் எமது மண்ணின் இருப்புக்கான காணிக்கையாக இன்னும் விரிகின்றன...! இலங்கை ராணுவமும் விடுதலைப் புலிகளும் யுத்தத்தில் ஈடுபடுகின்றார்கள் என்றால், இங்கே ஒரு சமூகமாக வாழுகின்ற. யுத்த நிகழ்வுகளிலே மிக நேரடியாகப் பங்கெடுக்காத இந்த அப்பாவி முஸ்லிம் சமூகத்தினை அப்போது, எந்த வகையிலே புலிகள் குற்றவாளிகளாகக் கண்டார்கள்...?

புலிகளோடு நேரெதிர் நின்று போர் தொடுக்காத முஸ்லிம்களை விரட்டியடித்ததும், அவர்களது உடமைகளைக் கொள்ளையடித்ததும், பல நூறு உயிர்களைக் கொன்று குவித்ததும் எந்த வகையில் நியாயமானது?




முஸ்லிம்களுக்கென்று அப்போது போர்க்களங்களிலே நபி (ஸல்) அவர்கள் வகுத்துத் தந்த யுத்த தர்மத்திலே கோயில்கள், ஆலயங்கள், மதவழிபாட்டுத் தலங்கள் இவற்றில் தஞ்சமடைந்த எவரையும் (போராளிகளையும் கூட) கொல்லாதீர்கள். நிராயுதபாணிகளை அப்படியே விட்டுவிடுங்கள்.... வயோதிபர்களை, பெண்களை, குழந்தைகளைக் கொல்லாதீர்கள்... பசிய மரங்களை வெட்டாதீர்கள், மிருகங்களை வீணாகக் கொலை செய்யாதீர்கள், நீர் நிலைகளை அசுத்தப்படுத்தாதீர்கள் போன்ற வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தார்கள்.

இந்தப் போர் தர்மம் பெரும்பாலும் எல்லா மதங்களிலும் காணப்படும். ஆனால், புலிகள் எமது முஸ்லிம் உடன்பிறப்புகளை யுத்தத்தில் பங்கெடுக்காத போதும் எந்த வித காரணமும் இன்றி புனிதமான பள்ளிவாயல்களிலே இறைவனைத் துதி செய்து கொண்டிருந்த போது முதுகுக்குப் பின்னால் வந்து சுட்டுத் தள்ளினார்கள்... நாங்கள் மிகப் புனிதமாகக் கருதுகின்ற பள்ளிவாயல்களைக் குருதியால் அசிங்கப் படுத்தினார்கள்... எங்களது புனித வேதங்களைத் தூக்கிவீசி மிதித்துத் துவம்சம் புரிந்தார்கள்.. எங்கள் வணக்க வழிபாடுகளுக்கு முன்னே வுழூ (உறுப்புகளைக் கழுவுதல்) செய்யும் தடாகங்களைத் குண்டுவீசித் தகர்த்தார்கள்... இன்னும் ஆயிரக் கணக்கான குண்டுத்துளைகள் அப்படியே இருக்கின்றன... எங்கள் மண்ணுக்கு வருகின்ற எல்லோரும் பார்த்துச் செல்வார்கள்... அவர்களது கோரத் தாண்டவத்தின் வடுக்கள் எமது பள்ளிவாயல்களிலே அப்படியே இருக்கின்றன... அங்கெல்லாம் நாம் தொழுகின்ற போது எங்களது காயங்கள் இன்னும் வலிக்கின்றன... அந்த வடுக்கள் நிகழ்வுகளை மீட்டித் தருகின்றன... உலகில் வாழும் எந்தச் சமூகமும் ஏற்றுக்கொள்ள முடியாத மிகப்பயங்கரமான கொடுமையினைப் புலிகள் அன்று செய்து முடித்தார்கள்.

எல்லாத் துயரங்களையும், அனைத்து இழப்புக்களையும் எமது சமூகம் மௌனமாய் தாங்கிக் கொண்டது. எந்த சமூகத்துக்கும் இல்லாத சகிப்புத் தன்மையும், இறை விசுவாசமும் எமது சமூகத்துக்கு விஷேட தன்மைகளாகக் காணப்படுவதால் எல்லாத் துயர் தரும் சம்பவங்களின் பின்னரும் நாங்கள் அமைதி காத்தோம்.

இவ்வளவு கொடூரங்கள் நிகழ்ந்தும் புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகத்தை நாம் விரோதிகளாக நோக்கவில்லை... எங்களுக்கு இழைக்கப்பட்டது போல் தமிழர்களையும், கொன்றுவிட வேண்டும். அவர்களது உடமைகளைச் சூறையாடிவிட வேண்டும், கோயில்களைத் தகர்க்க வேண்டும் என்று அமைப்பு ரீதியாக நாம் சிந்திக்கவில்லை! அது எமது மார்க்கத்தின் வழியுமில்லை. அகிம்சையாக ஒற்றுமையாகப் பேசிக்கொள்ள... மீண்டும் உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ள... இப்படித்தான் எமது சமூகத்தின் வேணவா இருந்தது.

இனங்களுக்கிடையே உறவுகள் சிதைக்கப்படக் கூடாது, இனக்கலவரங்கள் வெடிக்கக் கூடாது என்பவற்றிலே நாங்கள் மிகக் கவனமாக பிரார்த்தனைகளோடு வாழ்ந்து வந்தோம்.



இவற்றின் போதெல்லாம் எமக்குள் கிடந்த கேள்வி "புலிகள் ஏன் எம்மைக் கொன்றார்கள்?"

ஆனாலும் பொறுக்க முடியாத கொடூரங்கள் நிகழ்ந்த மிக உடனடிப் பொழுதுகளில் எமது சமூகத்திற்கும், தமிழ்ச் சமூகத்திற்குமிடையே பயம், புரிந்துணர்வின்மை என்பன இச்சம்பவங்களின் பின்னணியில் வளரத் தொடங்கின. இருந்த போதிலும் இரு சமூகங்களுமே ஒன்றையொன்று பிரிந்து நின்று எதனையுமே சாதிக்க முடியாது என்ற நிதர்சனத்தை உணர்ந்த நிலையில் மீண்டும் நாம் இணைந்தோம்.. ஒன்றுக்குள் ஒன்றானோம்.

கணேசனுடைய கலியாணத்திற்கு காதர் வாழ்த்துச் சொல்வதும், கமர்தீனுக்குக் கண்ணன் வாழ்த்துச் சொல்வதும் இப்போது இம்மண்ணில் மீண்டும் நிஜமாகின்றன...!

இந்தச் சூழ்நிலைகளிலே தான் நாம் எல்லோருமே ஒரு விடயத்தை மிக நிதானமாய்ச் சிந்தித்தாக வேண்டும்.

ஒரு பெரும்பான்மை சமூகம் சிறுபான்மை சமூகமொன்றை அடக்கி, ஒடுக்க நினைத்ததால் தான் இன்றைய கோர யுத்தமே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் அடக்கப்பட்ட அந்தச் சிறுபான்மை சமூகம் இன்னுமொரு சிறுபான்மை சமூகத்தை அடக்கிவிட, அவர்களது வாழ்வியல் உரிமைகளைப் பறித்துவிட நினைப்பது எந்த வகையில் நியாயம்?

இவற்றைத் தான் அன்று புலிகள் செய்தார்கள்!

சொல்ல முடியாத கொடூரங்களும், கொலைகளும் இதற்காகவே எமது சமூகத்தின் மீது புரியப்பட்டன....!

அடக்கப்பட்ட ஒரு சமூகத்தின் உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் போராடுகின்ற விடுதலைப் புலிகள் இன்னுமொரு சிறுபான்மைச் சமூகத்தை (அந்தச் சமூகத்தின் அனைத்துத் தரப்பும் அவர்களது போராட்டத்திற் பங்கெடுத்திருந்த போதும் கூட) அழிக்க நினைப்பது, எந்த வகையில் சரியாகும்? என்பது தான் முஸ்லிம்களின் தரப்பில் இருந்து அழிவுகளைச் சந்திக்க நேரும் போது கேட்கப்படும் கேள்விகள்...

இந்தக் கேள்விகளுக்கு இன்னுமே மிகச் சரியான பதில்களோ... நியாயங்களோ அளிக்கப்படவில்லை என்பதுதான் இங்குள்ள சோகமாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



இந்த நிமிடங்களில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம் சமூகத்தின் யதார்த்தமான உணர்வலைகளைப் பகிர்ந்து கொள்ளலாமென நினைக்கின்றேன்.


கடந்த காலங்களில் நடந்தேறிய கசப்பான நிகழ்வுகள்... எந்தவித நியாயங்களுமின்றி நடந்து முடிந்ததும்.. அவற்றுக்கான மிகப் பொதுவான எந்தவித காரணங்களையும் புலிகள் கூறாதபோதும்...

உத்தியோகப்பற்றற்ற முறையிலே அவர்கள் இழைத்த தவறுகளுக்காகப் புலிகளின் தலைமைப் பீடம் அடங்கலாக அனைவரும் உள்ளார்ந்த ரீதியிலே கவலை கொண்டதனையும் அந்த உணர்வுகளைப் பின்னர் மிகச் சில இடங்களிலே இலேசாகப் பேசிக்கொண்டதையும் எமது சமூகம் அவதானித்தது.

நாம் மீண்டும் கூற வருவதெல்லாம் விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் அவர்கள் எதிர்பார்த்த எல்லா வகைகளிலும் எமது சமூகம் பங்கெடுத்திருந்த காலப்பகுதிகளிலும் கூட நாங்கள் அடக்கப்பட்டதும், அழிக்கப்பட்டதும் அவர்களது போராட்டத்தின் இலக்கையே கேள்விக்குள்ளாக்குகின்ற விடயம்.

எனவே விடுதலைக்காகப் போராடுகின்ற ஒரு அமைப்பு இன்னொரு சமூகத்தின் விடுதலையை நசுக்க முனைவதும், அவர்களது உரிமைகளைப் பறிக்க நினைப்பதும் எந்த வகையிலும் முறையாகாது.

இந்தக் கூற்றுகளின் பின்புலத்திலே இழைக்கப்பட்ட தவறுகளுக்காய் மிக நேர்மையான முறையிலே விடுதலைப் புலிகள் வருந்துகின்ற போது தான் முஸ்லிம் சமூகம் தனது வாழ்வியல்,



உரிமை, இருப்புத் தொடர்பான விடயங்களிலே புலிகளோடு சந்தேகமில்லாத ஒரு உறவு முறையினைப் பேணமுடியும்.

இந்த இடத்திலே நான் இன்னொன்றையும் கூற வேண்டும். முஸ்லிம் சமூகம் தனது யதார்த்தமான தற்கால உணர்வுகளைப் புலிகளோடு பகிர்ந்து கொள்கின்றது என்றால் புலிகள் மிகக் கவனமாக முஸ்லிம்களின் நிலைப்பாடு எது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஒரு போதும் ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் அஷ்ரஃப் சொல்வதுபோல் முஸ்லிம்களின் ஏகபோகப் பிரதிநிதி தானே என்றும் அதனால் அவர்கள் தான் முஸ்லிம்களின் குரலாக ஒலிப்பார்கள் என்ற மாயையினை முஸ்லிம் சமூகம் கொண்டிராது.

மாறாக, முஸ்லிம்கள் தரப்பில் அற்ப அரசியல் லாபங்களைக் கடந்து எல்லாச் சமூகங்களின் உரிமைகளையும் சமமாக நோக்குகின்ற மிக நேர்த்தன்மை வாய்ந்த முஸ்லிம் பிரதிநிதிகள், முஸ்லிம்கள் தொடர்பில் கூறுகின்ற கருத்துக்களையும், எடுக்கின்ற நிலைப்பாட்டினையும் விடுதலைப் புலிகள் மிக முக்கியமானதாய்க் கருத வேண்டும்.

விடுதலைப் புலிகள் ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் சொல்கிறார் அல்லது அதன் அதியுயர் பீடாதிபதிகள் அறிக்கை விடுகின்றார்கள் என்பதற்காக ஒரு போதுமே



அவையெல்லாம் முஸ்லிம்களின் நிலைப் பாடாக இருக்குமென்று தயவுசெய்து நம்பிவிட வேண்டாம்! அவை அனைத்தும் அவர்களது சொந்த அரசியல் நலன்களை அடிப்படையாக வைத்துப் பேசப்படுபவையே. என்னைப் பொறுத்தவரை இப்போது இது தொடர்பில் புலிகளுக்கு நிறையவே நல்ல புரிதல்கள் இருக்குமென்று நம்புகின்றேன்.

இதுபோலவே ஏனைய அரசியல் கட்சிகளில் இருக்கின்ற முஸ்லிம் பிரதிநிதிகளும் வெளியிடுகின்ற கருத்துக்களும், அறிக்கைகளும், முஸ்லிம்களின் குரலாகவே இருக்குமென்று ஒரு போதும் நம்பி அது தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை முஸ்லிம் சமூகத்தை நோக்கிப் புலிகள் எடுக்கக் கூடாது. நாம் இங்கே கூற வருவது சுயலாபங்களையும், அரசியல் இலக்குகளையும் மாத்திரம் மையமாகக் கொண்டு செயற்படுகின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளை அவர்கள் சில போது முஸ்லிம்கள் தொடர்பில் நல்ல கருத்துக்களையும் வெளியிடலாம்! அவற்றை மறுப்பதற்கில்லை.

மிக முக்கிய விடயமென்னவென்றால், விடுதலைப்புலிகள் தான் மிகக் கவனமாக முஸ்லிம்களின் நிலைப்பாட்டினைப் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் தரப்பில் அரசியல்வாதிகளோ அல்லது வேறு யாரோ சொல்ல விளைகின்ற தான்தோன்றித்தனமான கருத்துக்களை முஸ்லிம்களின் ஏகோபித்த குரலாக புலிகள் ஏற்று அது தொடர்பிலே தங்களது நகர்வுகளை முஸ்லிம் சமூகம் தொடர்பில் தீர்மானித்து விடக் கூடாது என்பதே எமது கருத்து.

சிலவேளை இந்தத் தவறுகள் தான் கடந்த காலங்களிலே புலிகளின் தவறான புரிதல்களுக்குக் காரணங்களாக இருந்திருக்கவும் கூடும்.

குறிப்பாக வட- கிழக்கிலே வாழுகின்ற மக்களுக்குக் கிடைக்கப் போகும் எந்தவொரு தீர்வும் புலிகளின் அங்கீகாரமின்றி நீண்டதொரு காலத்திற்குச் சாத்தியமில்லை என்ற உண்மையின் அடிப்படையில் அது தொடர்பிலும் இந்த இடத்திலே சில கருத்துக்களைப் பேச வேண்டும்.

ஏலவே விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் தடையாக இருந்தவர்கள், காட்டிக் கொடுத்தவர்கள் என்ற வகையில் பலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றிலே அவர்களது இனத்திலே நிறையப்பேரும், ஏன் நிறையவே ஆயுதக் குழுக்களும் அடங்கும். இந்நிலை இன்னும் தொடர்கிறது... (இங்கு முஸ்லிம்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் அவ்வகையானவை அல்ல, என்பதை மீண்டும் சுட்டிக் காட்டுகின்றோம். அவற்றுக்கு இன்னுமே புலிகள் சரியான பதில் சொல்லவுமில்லை!)

இப்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் முன்வைத்திருக்கும் தீர்வுப் பொதியிலே இணைந்த வடகிழக்கு மாகாணம் நான்கு துண்டுகளாகப் பிரிக்கப்படும் அபாயம் உணரப்படும் வேளையிலே, எப்போதுமே தமிழர்களுக்கான தீர்வொன்று அமைந்தால் இணைந்த வடகிழக்கிலேதான் அது அமைய வேண்டும் என்பதிலே விடாப்பிடியாக நின்று போராடும் அமைப்பென்ற வகையில், சிலவேளை இந்தத் துண்டாடலுக்கு முஸ்லிம் சமூகத்தை அரசாங்கமோ அல்லது முஸ்லிம்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்பவர்களோ, துரும்பாகப் பிரயோகிக்க எத்தனிக்கின்றபோது, அந்த வரலாற்றுத் தவறினை முஸ்லிம்களே செய்யத் துணிகின்றார்கள் என்று, ஒரு போதும் புலிகள் முடிவெடுக்க முடியாது, கூடாது.

ஒன்பது வருடங்களுக்கு முன்னே மிக நம்பிக்கையோடு புலிகள் எம்மீது எந்தத் தாக்குதலையும் நடாத்த மாட்டார்கள் என்று எப்படி வாழ்ந்திருந்தோமோ, அதே சூழ்நிலை தான் இப்போதும் நிலவுகின்றது... அவர்கள் எங்கள் மீது அழிவுகளைத் தொடுக்க, எப்போதும் எந்த நியாயமும் இல்லாதது போலவே இப்போதும் நிலவரம் இருக்கின்றது.

ஆனால், எங்கள் சமூகத்தை இறைவன் பாதுகாக்க வேண்டும். மீண்டுமொருமுறை புலிகள் எங்களைச் சந்தேகங் கொண்டு நோக்கும் நிலையும், எங்களைத் தாக்க முனைந்தால், கூற முடியுமான நியாயங்களும் இனிமேல் தான் சிலவேளை உருவாகலாம்! ஆனாலும் அந்த நியாயங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை! நான் ஏற்கெனவே சொன்னது போலப் புலிகளால் அவ்வாறானதொரு தவறை மீண்டும் செய்ய முடியாது.. செய்யமாட்டார்கள். காரணம் முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டையும் இந்தச் சமூகத்தைக் கேடயமாகவும், துரும்பாகவும் பாவிக்க நினைக்கின்ற அரசியல்வாதிகளையும் அவர்கள் நன்றாகவே வேறு பிரித்து அறிந்து கொண்டார்கள் என்று நம்புகின்றோம்.

அல்லது, எமது எடுகோளுக்கு மாற்றமாகப் புலிகளின் நிலைப்பாடு தற்போதும் தொடர்ந்திருந்தால்... தயவு செய்து அவர்களது விடுதலைப் போராட்டத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கும், இதற்காய் அவர்கள் இழக்கின்றவைகளுக்குச் சரியான விளைவுகளைக் கண்டுகொள்வதற்கும், முஸ்லிம் சமூகத்தின் மீது மிகச் சரியான புரிதல்களையும், நம்பிக்கைகளையும் தாங்களாகவே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்போது கூட, புலிகளுக்கும் முஸ்லிம் சமூகத்திற்குமிடையே சரியான பரஸ்பர நம்பிக்கையும், புரிந்துணர்வும் வந்து சேரவில்லை! அதற்கான காரணங்களின் அடிப்படைகளாக...

* புலிகள் கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு இழைத்த அநீதிகளுக்கு இதுவரை எந்த விதமான மிகச்சரியான நியாயங்களையும் கூறாமை!
* இந்த வரலாற்றுத் தவறுகளுக்கு, புலிகளின் தலைமை சரியான தருணங்களில் உத்தியோகபூர்வமான வருத்தத்தையோ, மன்னிப்பையோ தெரிவிக்கவில்லை! (இது தொடர்பில் ஒரு மாவீரர் தினத்தில் பிரபாகரன் பேசியிருக்கலாம்.)
* இனிமேலும் முஸ்லிம்களுடனான நடவடிக்கைகளும், உறவுகளும் எவ்வாறு அமையுமென்றும், மிகப் பிரபல்யமாக எதையும் வெளிவிடாத தன்மை!
* முஸ்லிம்களுடனான நல்லெண்ணத்துக்கு அடையாளமாக இந்நாட்டின் எல்லோருமே புரியும்படியாய், இதுவரை மிகப் பொதுவாக எந்தவொரு அடையாள நடவடிக்கையினையும் மேற்கொள்ள, புலிகள் அதிவிரைவாக முன்வராமை!

(உ-ம் வடபகுதி அகதிகளின் மீள்குடியேற்றம்)

மேற்குறித்த அடிப்படைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற போது தான் முஸ்லிம் சமூகம் மிகவும் ஆறுதலடைந்ததாகப் புலிகளுடனான பரஸ்பர புரிந்துணர்வோடு, சந்தேகங்கள் நீங்கி வட-கிழக்கிலே நிம்மதியாக வாழ முடியும். இதற்காகத்தான், இனிமேலும் நடந்து விடுமோ? என அஞ்சும் சில சிக்கலான இடங்களையும் புலிகளின் கவனத்தின் பால் கொண்டு வந்தோம்.

இந்தப் புரிந்துணர்வின் அடிப்படைகளுக்கு, அத்திவாரமாக மிக உடனடியாகப் புலிகளின் தலைவர் அலுவலக ரீதியாகவும், உத்தியோகபூர்வமாகவும், முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு வருத்தம் தெரிவிப்பதோடு, இனிவரும் காலங்களிலும் முஸ்லிம்களுடனான உறவுகள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றியும் அறிவித்தால் அது மிக ஆரோக்கியமானதாகவும், முஸ்லிம் சமூகத்தின் நீண்ட நாளைய அபிலாஷையினை நிறைவேற்றியதான நல்ல பணியாகவும் இருக்கும்.

1999.08.03ம் திகதியோடு எங்களது பள்ளிகளில் சுடப்பட்டு வருடங்கள் ஒன்பதாகின்றது. அடுத்த வருடம் இதே திகதியோடு வருடங்கள் பத்து!

இந்த தசாப்த முடிவுக்குள்ளாகவேனும் ப்ரஸ்பர புரிந்துணர்விற்கான அடிப்படைகளைப் புலிகள் நிறைவு செய்தால், அவர்களது போராட்டத்தின் நல்லதொரு இயங்கு திசையாக அந்தப்பணி அமையுமென்று நம்புகின்றோம்!

நாங்கள் நிறையவே இழந்து விட்டோம்! ஆனாலும் எமது புனிதத்தளங்களிலே காணிக்கையாக்கிய வீர புருஷர்களை, எங்கள் எதிர்கால வாழ்வுக்கான வித்துக்களாகவே என்றும், பிரார்த்தனைகளோடு நம்புகிறோம்.

அந்த மரணங்களை, எமது உத்தரவாத உரிமைகளுக்காகவும், இருப்புக்காகவும் தியாகம் செய்கின்றோம். அந்தக் கொடுமைகளை மன்னிக்கின்றோம்.

புலிகள் நாங்கள் சொல்கின்றவற்றை விரைவில் நிறைவேற்றுவார்களா?

எம்.ஐ.எம்.முஜீப்

---

ஆண்கள் வாசம்
இல்லத்துப் போன
முதலாம் குறிச்சித்தொரு....

சில்லறைகள் போலவும்
மைனாக்கள் போலவும்
கலகலத்துவிட்டு
கிடப்பதைப் பாருங்கள்
மூர்ச்சையாகி.....

மாலை ஆயிற்று
உங்களில் யாரால்
நடந்து செல்ல முடியும்...?

தார் ரோட்டு நெடுகிலும்
தலைவைத்துப்படுக்கிறது
இருட்டுப் பேய்!

குப்பி விளக்கின் இலேசான
மயங்கிய வெளிச்சத்தில்
பின்னும் பாயின் மடிப்புகளுள்ளும்,
சுற்றும் நூற்கட்டைகளுள்ளும்
சிக்கும் நினைவுகளோடு வாழும்
விழிமூடா விதவைகளின்
வசிப்பிடம் இங்கே தான்
கணவன் கடைசியாக
கையசைத்துச் சென்றதையும்
பின் இரத்தச் சகதிக்குள்
அவன் முகம்
பப்படம் போல
ஊதிக்கிடந்ததையும்....

அதோ...
நாய்களின் ஊளைகள்
ஆந்தைகளின் அலறல்கள்
முடியுமானால் நீங்கள்
பயணம் செய்து பார்க்கலாம்
இந்தத் தெருவில் ஒரே ஒரு முறை

ஞாபகம் இருக்கிறதா உனக்கு...
கிறவல் தெரு பள்ளியிலும்
ஹுசைனிய்யாவிலும்
ஒரு சட்டிக்கறியாக அகப்பட்டு
ஆண்கள் யாவரும்
இல்லத்துப் போனதான
சிகப்பு இரவுகள்!
சிகப்பு இரவு!
கொடுமையானது...
அவர்கள்
பூனைகளின் முதுகுப்
புறமாக வந்து நின்று
துப்பாக்கிகளால் ஒருடம்பில்
நூறுதுளைகள் போட்டுச்
சென்ற இரவு.

செவிகள் இருக்கிறதா உனக்கு
என் அருகினில் வா
இந்த விதவைகளும்
இன்னும் சில இரவுகளில்
இல்லத்துப் போகலாம்.
அவர்கள் குழந்தைகளும்
ரத்த ஆறுகளில்
வயிறூதி மிதக்கலாம்.

ஆனாலுமென்ன
நீயும் நானும்
இவை பற்றியே இப்பொழுதும்
இன்னும் யோசித்துக்
கொண்டிருக்கிறோம்

வீட்டை யாருக்காவது
விற்றுவிடுவது பற்றி...
அதன் தளபாடங்களை
லொறியில் வெளியூருக்கு
அப்புறப்படுத்துவது பற்றி...
ஊரைவிட்டு எப்பொழுது
ஓடுவது என்பது பற்றி
கொழும்பில் எடுக்க இருக்கும்
பங்களா எப்படியானது
என்பது பற்றி....

-காத்தான்குடி றஹீம்

நன்றி - நூலகத்திட்டம்




'கருமக்காரயோ", "விராகய", "மஹாகெதர" போன்ற திரைப்படங்களை இயக்கிய திஸ்ஸ அபேசேகர அவர்கள், கொழும்பு எல்பின்ஸ்டன் அரங்கில் இடம் பெற்ற ஓ.சி.ஐ.சி திரைப்பட விருது வழங்கும் விழாவில் "அடுத்த நூற்றாண்டில் சிங்களத் திரைப்படத் துறை" என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இது.

ஆ-ர்

# சிங்களத்திரைப்படத்துறையின் நெருக்கடி:

## சில அவதானங்கள்



இன்றைக்கு ஒரு வருடத்திற்கு முன் அரைநூற்றாண்டைப் பூர்த்தி செய்த சிங்களத் திரைப்படத்துறை, 21ம் நூற்றாண்டின் இறுதியில் பெரும் நெருக்கடிகளுடன் காணப்படுகின்றதெனலாம். இந்நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் அடிப்படையிலேயே இதன் எதிர்காலமும் தீர்மானிக்கப்படும். இதன்படி அடுத்த நூற்றாண்டில் சிங்களத் திரைப்படத்துறை எவ்வாறான தோற்றத்தை பெறும்? என்ற வினாவுக்கு விடை பகர, நாம் இந்த நெருக்கடிக்கு நிச்சயம் தீர்வினை கண்டுபிடிக்க வேண்டும். அத்துடன் தீர்வினை கண்டுபிடிக்க, இன்று திரைப்படத் துறையில் சூழ்ந்திருக்கும் நெருக்கடியின் யதார்த்தத்தையும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

கடந்த இரு தசாப்தங்களாக இந்த நெருக்கடி பற்றி கதைத்த, செயற்பட்ட பலர் செய்த , கூறிய விடயங்கள் 'யானையும் குருடர்களும்' என்ற உவமைக் கதைக்கு ஒப்பானது.

1985 ஜூன் மாதம் வெளியிடப்பட்ட சிங்களத் திரைப்படத்துறை தொடர்பான ஜனாதிபதி குழு அறிக்கையின்படி இது ஒரு நெருக்கடியே அல்ல. இது தொலைக்காட்சி வளர்ச்சியுடன் கட்டாயம் நிகழ வேண்டியது எனக் கூறப்படுகின்றது. அந்த யாப்பின் முதல் பாகத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"சிங்களத் திரைப்படத் துறையின் நெருக்கடியை தீர்ப்பது என நாம் குறிப்பிடுவது, அதனை மீண்டும் முன்னர் இருந்த பிரகாசமான இடத்திற்குக் கொண்டு வருவது எனின், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற ஒன்று இருக்க முடியாது என்றே கூறத் தோன்றுகின்றது. தொலைக்காட்சி இறக்கைகளை விரித்துப் பறக்கத் தொடங்கியது முதல், திரைப்படத்துறையின் கௌரவம் விலகிச் சென்றதாகவும், மீளப்பெற முடியாததாகவும் ஆகிவிட்டது. திரைப்படத்துறையில் ஈடுபட்டிருக்கும், அது பற்றிய அக்கறை கொண்டிருக்கும் மக்கள் இந்த உண்மையை எவ்வளவு கசப்பானதானாலும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். அதனை ஏற்றுக்கொண்டு, ஒரு நபரின், குழுவின் தவறினால் ஏற்படாத இந்த நிலைமை பற்றி நாலாபுறமும் குறை கூறும் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். திரைப்படத்துறையின் பொருளாதார எதிரி தொலைக்காட்சி ஊடகமாகும். அகராதியின்படி திரைப்படத்துறையின் "துஷ்டன்" தொலைக்காட்சியே. பேதுருதாலகாலை மலைச் சிகரத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கும் தொலைக்காட்சி கோபுரங்கள், இன்று நிலவக்கூடிய யதார்த்தத்தின் துல்லியமான அடையாளமாகும். திரைப்படத்துறை இந்த யதார்த்தத்திற்கு முகம் கொடுத்து, தமது விதியின் படி மாறி, செயற்படுவதை தவிர வேறு வழியில்லை"

திரைப்படத்துறைக்கும், தொலைக்காட்சிக்கும் இடையிலான தொடர்பை நல்மனதோடு ஏற்றுக் கொண்டு, அதனை பொதுக் கலை ஊடகமாகக் கொண்டு திரைப்படத்துறையின் எதிர்காலம் பற்றிய சாசனத்தை தயாரிக்கும் நோக்கில், 1993ல் ஹேக் நகரத்தில் நடைபெற்ற சம்மேளனம் சலனத் திரைப்பட வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் வருகை தந்த திரைப்பட நிபுணர்கள், தொடர்பூடகவியலாளர்கள், பேராசிரியர்கள், விமரிசகர்கள் மற்றும் படைப்பாளிகள் கலந்து கொண்ட இச்சம்மேளனத்தில் முன்வைக்கப்பட்ட அபிப்பிராயங்களின் தொகுப்பு " திரைப்படத்துறையின் எதிர்காலம்" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் திரைப்படத்துறையின் நெருக்கடியைத் தீர்க்கும் முகமாக அக்கறை செலுத்தும் திரைப்படவியலாளர்கள், விமர்சகர்கள், நிர்வாகிகள் ஆகிய அனைத்துப் பிரிவினரும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கட்டுரையாக, "திரைப்படத் துறையின் எதிர்காலம்" எனும் தலைப்பின் கீழான தோமஸ் எல்செயாசரினால் முன்வைக்கப்பட்ட ஆக்கத்தின் ஒரு பகுதியை குறிப்பிட விரும்புகின்றேன்.

"திரைப்படவியலாளர்கள் 1980ல் சின்னத்திரையை புறக்கணிக்கத் தொடங்கினர். இந்தவகையில் தொலைக் காட்சி நிலையங்களின் நிதி முதலீடுகளின்றி ஒரு வாராந்த திரைப்படம் கூட கடந்த இருபதாண்டு காலத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை"

" ஐக்கிய அமெரிக்காவின் திரைப்பட வருமானத்தில் 60 சதவீதமானவை தொலைக்காட்சி, கேபிள் வலைப்பின்னல்கள் திரைப்பட ஒளிப்பேழை பிரதிகள் விற்பனையின் மூலமே கிடைக்கப் பெறுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. மேலும் பல தொலைக்காட்சி நிலையங்கள் தமது காட்சி நேரங்களில் பெரும்பாலானவற்றை திரைப்படங்களிலிருந்து அல்லது ஹொலிவுட் நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்

பழைய திரைப்பட காட்சிகளிலிருந்து நிரப்பிக் கொள்கின்றன. திரை அரங்குகளில் தோல்வியுறும் திரைப்படங்கள் தமது தயாரிப்புச் செலவை ஈடு செய்ய, அத் திரைப்படங்களை தொலைக்காட்சி நிலையங்களுக்கு விற்கின்றன அல்லது ஒளிப்பேழை பிரதிகளை உருவாக்குகின்றன."

அம்ஸ்டர்டாம் பல்கலைக்கழகத்தின் திரைப்பட, தொலைக்-காட்சி கற்கைப்பிரிவின் பேராசிரியர் பதவியை வகிக்கும் பேராசிரியர் தோமஸ் எல்செயாசரின் இந்தக் கூற்றில் உச்சபட்சமாக நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய இன்னொரு விடயமும் உள்ளது. திரைப்படங்கள் திரைஅரங்குகளுக்கு மட்டும் உரித்தான அனுபவமல்ல என்பதே அந்த இன்னொரு விடயம். நாம் திரைப்படமொன்றை எமது அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை கிடப்பில் போட்டு விட்டு, வீட்டிற்கு வெளியே வரிசையிலிருந்து இருண்ட அரங்குக்குச் சென்று, இனந்தெரியாத பலருடன் இணைந்து ஒன்றாக ரசிப்பதை விட வேறு மாற்று இருக்கவில்லை. எனினும், தொலைக் காட்சியினதும், வீடியோ தொழினுட்பத்தினதும், அண்மைய டிஜிட்டல் தொழினுட்பத்தினதும் துரித அபிவிருத்தியுடன் அவ்வாறான கால கட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. இந்த வகையில் திரையரங்குகளுக்கு வருகை தரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் திரைப் படத்துறையின் நிலைமையை சீர்தூக்கிப் பார்ப்பது, செயற்கை கோளொன்றை விண்ணில் ஏவ ராகு காலத்தை கணிப்பது போன்று நகைச் சுவையான விடயம் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

திரைப்படத்துறைக்கும், தொலைக்காட்சிக்கும் இடையில் 50,60வது கால கட்டங்களில் ஏற்பட்ட மோதல் காரணமாக பிரித்தானியா திரைப்படத்துறை நெருக்கடிக்குள்ளான வேளை , அந்நெருக்கடியை தீர்க்கும் முகமாக யோசனைகளை முன் வைத்த அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"தொலைக்காட்சியின் அபிவிருத்தியுடன் 60 வீதமான பார்வையாளர்கள் திரைப்படத்துறையை விட்டு அகன்றுள்ளனர். இந்த நெருக்கடியை தீர்க்க இப்பொழுது செய்ய வேண்டியது, அப்பார்வையாளர்களை மீண்டும் அரங்குக்குள் ஈர்க்க சட்டம் உருவாக்குவதோ பணத்தைச் செலவழிப்பதோ அல்ல. மாறாக திரைப்படத்தை அவர்களது அறைகளுக்குள் தொலைக்காட்சியூடாக கொண்டு செல்வதையே செய்ய வேண்டியுள்ளது."

இந்த உண்மையை நம்மவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதையே கடந்த 20 வருட காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள், உரையாடற் தலைப்புக்கள் என்பன வெளிக் காட்டுகின்றன.

சிங்களத் திரைப்படத்துறையின் நெருக்கடியாக, திரைப்படம் பார்க்க அரங்குக்கு வரும் பார்வையாளர் களின் எண்ணிக்கை குறைவையே இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். முழு உலகத்தையும் போன்று இலங்கையிலும் முன்னெப்போதுமில்லாதவாறு திரைப்படங்கள் அதிகமாக பார்க்கப்படுகின்றன என்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லையா?

திரைப்படங்கள் என்பது இருண்ட அரங்கினுள் உள்வாங்கிக் கொள்ளப்படும் சலனப்படங்கள் மட்டுமல்ல தொலைக் காட்சியூடாக நாம் உள் வாங்கிக்கொள்ளும் படங்களும், இன்டர்நெட் ஊடாக உள்வாங்கும் சலனப்படங்களும் தான் என இவர்கள் அறிவார்களா? இவ்வாறான காலகட்டத்தில் கொழும்பு ரீகல் திரையரங்கின் வீழ்ச்சி பற்றி பேசுவது அறியாமை அல்லவா?

கடந்த இரு தசாப்தங்களில் எமது நாட்டில் கடன்வசதிகளுக்கான பிரச்சாரம் திருப்தியானதாக இல்லை என ஜனாதிபதி கடந்த வாரத்தில் ஒரு நாள் குறிப்பிட்டிருந்தார். அந்த வகையில் திரைப்படத்துறை சார்ந்த இந்த நடவடிக்கையும் அரசினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிய வருகின்றது.

இதற்கென அடிப்படையாக செய்ய வேண்டியதொன்று உண்டு. தேசிய திரைப்பட திட்டங்களை முழுமையாக மாற்றி, மேலே கூறிய நடவடிக்கைக்கு ஏற்ப அதனை முனைப்பாக்குவதாகும். இங்கு திரைப்படக் கூட்டுத்தாபனத்தையும், அரச தொலைக்காட்சி நிறுவனங்கள் இரண்டையும் பொது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர அரசு திட சங்கற்பம் கொள்ள வேண்டும் என்பதே எமது அவா.

சிங்கள திரைப்படத்துறை எப்பொழுதும் சலுகைகள், நலன்கள் மூலம் நடத்தப்படும் ஒரு தொழிற்சாலையாகும். முன்னைய கால கட்டத்தில் மூன்று திரைப்பட இறக்குமதி நிறுவனங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டன. இறக்குமதி, விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தல் ஆகிய மூன்று நடவடிக்கைகளினால் இலாபம் ஈட்டிய திரைப்பட சர்வாதிகாரம் அந்த இலாபத்தில் ஒரு பிடியளவையே திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்தியது.

1956 க்குப் பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட விழிப்புக்கு ஏற்ப அவர்கள் காட்சி கூட, இரசாயனகூட வசதிகள் அடங்கிய உள்நாட்டுத் திரைப்படத் தயாரிப்புக்கு தேவையான தொழினுட்பக் கட்டமைப்பையும் நடாத்திச் சென்றனர். திரைப்பட இறக்குமதி, விநியோகம், காட்சி போன்ற மூன்று நடவடிக்கைகளினால் பலத்த இலாபம் கிட்டியதனால் அதனை நட்டம் இன்றி நடாத்திச் செல்ல முடிந்தது.

1961 ல் நியமிக்கப்பட்ட முதல் திரைப்பட ஆணைக்குழு, "ரேக்காவ" திரைப்படத்தின் பின் உள்ளூர் இயல்புகளை பரவலாகக் கொண்ட திரைப்படத் துறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என இந் நாட்டு கற்றவர்கள், ஆர்வலர்கள் கூறியதனால் உருவாக்கப்பட்டது. இந்நாட்டு திரைப்படத் தொழில் மற்றும் சந்தை என்பனவற்றை இரும்புக்கரங்களில் வைத்திருந்த திரைப்பட சர்வாதிகாரம் சிங்கள திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு பெரும் பாதகமாக இருந்ததை நாம் அறிவோம்.

மேலே கூறப்பட்ட திரைப்பட ஆணைக் குழுவின் முக்கியமான விதந்துரைப்பாக, திரைப்பட இறக்குமதி, விநியோகம் என்பன மக்கள்மயப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. இவ் விதந்துரைப்புகளுக்கு பின்னணியாக இரண்டு தெளிவான காரணங்கள் இருந்தன. சிங்களப் பார்வையாளர்கள் பலர் தொலைக் காட்சியை நோக்கிச் செல்லத் தொடங்கினர். எண்ணிக்கை ரீதியில் தொலைக்காட்சிக்கே பார்வையாளர்கள் அதிகமாகின்ர். அது மட்டுமன்றி எமக்கு விளங்கிய வகையில் திரைப்பட ரசிப்பில் ஒளிப்பேழைகள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக அடிக்கடி பார்க்கக் கிடைக்காத திரைப்படங்களின் ஒளிப்பேழைகள் எனலாம்.

இந்தக் காரணங்களினால் இன்று திரைப்பட உபகரணங்கள் மற்றும் தயாரிப்பு போன்றவற்றுக்கு மேற்கொள்ளப்படும் நிதி முதலீடுகள் 80 வீதமானவை வீடியோ தயாரிப்புக்கும், தொலைக்காட்சி காண்பிப்பிற்கும் சென்றடைகின்றன. உலகம் முழுவதும் இது பொதுவானதாக உள்ளது. சிங்கள திரைப்படத்துறையின் நெருக்கடி இங்கு தான் மையம் கொண்டுள்ளது என நம்புகின்றோம். இதற்கு இருக்கும் நிவாரணம் தொலைக்காட்சி மற்றும் திரைப்படத்துறைக்கு இடையிலான தெளிவான உறுதியான பிணைப்பை ஏற்படுத்துவதாகும். தொலைக்காட்சியை திரைப்படம் பார்க்கும் இன்னுமொரு முறையியலாக உருவாக்குவதன் மூலம் இதனை ஏற்படுத்தலாம்.

ஒரே திரைப்படத்தை பெரிய திரையிலும், சின்னத்திரையிலும் பார்க்கும் போது அனுபவங்கள் இரண்டுபடுகின்றன என சிலர் வாதிடுகின்றனர். ஆனால் இந்த இரு அனுபவங்களில் ஒன்றை தெரிவு செய்யும் வாய்ப்பை நாம் பார்வையாளர்களுக்கு வழங்கிவிடுவோம்.

திரைப்படத்துறைக்கும் தொலைக்காட்சிக்கும் இடையில் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் புதிய தொழினுட்பத்துக்கு வாய்ப்-பளித்துள்ளதெனலாம். கடந்த இரு தசாப்த காலத்தில் திரைப்படத் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் தொழினுட்பத்தின் பரிணாமத்திற்கு, வளர்ச்சிக்கு பின்புலமாக இருப்பது திரைப்படத்துறையும், தொலைக்காட்சியும் ஒரே தயாரிப்பு, காட்சி பிணைப்பில் தங்கியிருப்பதே என்ற நம்பிக்கையே. இந்நடவடிக்கையில் எமது நாடு இருபது ஆண்டுகள் பின்தங்கியுள்ளது என்றே நாம் கூற வேண்டும். இந்த நட்டத்தை மீளமைப்பின் மூலமே சரி செய்யக் கூடும்.

இந்த மீளமைப்பு, சீர்திருத்தத்திற்கு பெருமளவான முதலீடும், உழைப்பும் தேவைப்படும். அதன் முதல் நடவடிக்கையினை எடுக்கும் பொறுப்புகளை தனியார்வசம் ஒப்படைத்துவிட்டு அரசினால் கைகட்டி இருந்துவிட முடியாது. ஏனெனில் இந்நடவடிக்கையின் அபாயத்தை கண்டு தனியார் பயப்படக்கூடும். அதற்கான முன்னறி விப்புகள் முன்னெச்சரிக்கைகள் இப்பொழுதே தோன்றிவிட்டன.

திரைப்படத்தொழிலுக்கு தேவையான உபகரணங்களை கொண்டு வந்து கடந்த காலத்தில் வீழ்ச்சியுற்றிருக்கும் தயாரிப்புகளை உள்ளகக் கட்டமைப்போடு எழுச்சி பெறச் செய்ய தைரியமூட்டும் வகையில் அரசால் தனியார் பிரிவுக்கு வழங்கப்பட்ட பாதையை கட்டுக்குள் வைத்திருந்த திரைப்படத்துறை சர்வாதிகாரத்தை உடைத் தெறிய கடமைப் பட்டுள்ளது. இரண்டாவது, திரைப்பட இறக்குமதி மூலம் தனியார் துறை வசம் சென்றடைந்த பெரும்பாலான பணம் அரச நிர்வாகத்தின் மூலம் சிங்கள திரைப் படங்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்துவதாகும். காலங்கடந்தாவது 1972ல் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது, இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவே என்பதை நாம் நினைவூட்டிக் கொள்ளல் வேண்டும்.

1972 தொடக்கம் 1977 வரையான காலகட்டத்தில் இந்நோக்கங்கள் நிறைவேறினவா என்பது வேறு விடயம்.

எனினும், 1977ன் பின் உருவான புதிய பொருளாதார கொள்கைக்குள் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் முழுமையான அதிகாரங்களுடன் வெற்றிக்கொடி நாட்ட முடியுமா என்பது கேள்வி-யாகியது. திறந்த பொருளாதார முறை ஆட்சி செலுத்தும் காலத்தில் அந்த அரச கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு திறந்த பொருளாதார முறைமையில் சரியான வழியில் செயற்பட முடியுமா?

நிகழ்கால பொருளாதார முறைமைக்கு ஏற்ப திரைப்படக் கூட்டுத்தாபனம் மீளமைப்புச் செய்யப்பட வேண்டும். ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய யோசனைகள் மூலம் திரைப்பட இறக்குமதி மற்றும் விநியோகம் மீண்டும் தனியாருக்கு வழங்கப்படவுள்ளது. அது அவ்வாறே நடைபெற வேண்டும் என நாமும் எண்ணுகின்றோம். சிங்கள திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி திரைப்படத் தயாரிப்புக்குத் தேவையான புதிய தொழினுட்பக் கட்டமைப்பும் கூட அரசின் பொறுப்பாகும். ஆனால் அதற்கான பணத்தை பெறுவது எங்ஙனம்?

நாம் எண்ணும் வகையில் நாட்டுக்கு சுமையாகாது இந்த நடவடிக்கையை தொலைக்காட்சியையும், திரைப்படத்துறையையும் ஒன்றிணைப்பதன் மூலமே செய்ய முடியும். பணம் ஈட்டுவதில்

- 19

நன்றி - நூலகத்திட்டம்



"மூன்றாவது மனிதன்" - 6 இதழ்கள் பற்றிய மதிப்பீடு:

# மூன்றாவது மனிதன் முன்வைக்கும் சிந்தனைகள்

எம். பௌசர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் சிற்றிதழ் "மூன்றாவது மனிதன்". ஜுன்-ஒகஸ்ட் 99 என்று திகதியிடப்பட்டு வெளிவந்திருப்பது இதன் ஆறாவது இதழாகும். 96ல் வெளிவந்த முதல் மூன்றிதழ்கள் கொழும்பு போதிராஜ மாவத்தையிலிருந்தும் 97, 98ல் வெளிவந்த இரண்டிதழ்கள் அக்கரைப்பற்றிலிருந்தும் ஆறாவது இதழ் கொழும்பு வக்ஸ்ஹோல் லேனிலிருந்தும் வெளிவந்துள்ளன.

இன்றைய உலகச் சூழலிலும் சரி, ஈழத்து தமிழ்ச் சூழலிலும் சரி 'மூன்றாவது மனிதன்' என்ற இச்சஞ்சிகையின் பெயர் மிக முக்கியமானது என்றே சொல்ல வேண்டும். மூன்றாவது பார்வையை முன்வைக்கும் மூன்றாவது மனிதன் என்று பார்க்கும் போது இச்சஞ்சிகையோடு ஒட்டி வரும் தத்துவார்த்தப் பின்புலம் பெரிதாக விரியலாம். கருத்து (THESIS) எதிர்கருத்து (ANTITHESIS) இவ்விரண்டின் பிழைகளைத் தள்ளி சரியானவற்றை இணைத்துப் பரிணமிக்கும் மூன்றாவது கருத்து (SYNTHESIS) என்று வரும் இயங்கியலை நினைவூட்டும் மூன்றாவது மனிதன் தன் பெயருக்கேற்ப வெளிவருகிறதா என்பதே முக்கிய கேள்வியாகும்.

இச்சஞ்சிகையை வெளியிடும் ஆசிரியனின் இலக்கிய சமூக, அரசியல் கொள்கை ஒன்றாக இருக்கலாம். இதில் எழுதுவோரின் கொள்கை இன்னொன்றாக இருக்கலாம். இவற்றை வாசிப்போரின் கொள்கை வேறொன்றாக இருக்கலாம். ஆனால் இவையனைத்தும் ஒன்றோடொன்று ஊடியங்கி இன்றைய சூழலுக்கு தேவையான ஒரு கருத்தைப் பரிணமிக்கும் போது அதன் இயக்கம் முற்போக்காகிறது.

மூன்றாவது மனிதன் இக்கைங்கரியத்தை மேற்கொள்வதற்குரிய ஊடகமாக இயங்குகிறதா என்பதைப் பார்ப்பதே இவ்விமர்சனத்தின் நோக்கமாகும்.

இச்சஞ்சிகையில் சேர்த்துக் கொள்ளப்படும் முக்கிய அம்சங்களாக கலை இலக்கியப் பிரமுகர் ஒருவரைப் பேட்டி காணுதல், தத்துவம், அரசியல் பற்றிய கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், புத்தக விமர்சனங்கள், சினிமா பற்றிய ஆய்வுகள், வாசகர் கருத்துக்கள் என்று பல உள்ளன.

இச்சஞ்சிகையில் இடம்பெறும் நேர்காணல் ஒரு முக்கிய அம்சமாகக் கொள்ளப்பட வேண்டும். இதன் முதல் இதழில் வ.ஐ.ச.ஜெயபாலனதும், இரண்டாம் இதழில் எம்.ஏ. நுஃமானதும், மூன்றாவது இதழில் பேராசிரியர் சிவத்தம்பியினதும், நான்காம் இதழில் டொமினிக் ஜீவாவினதும், ஐந்தாம் இதழில் மு. பொன்னம்பலத்தினதும், ஆறாம் இதழில் சேரனதும் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன. 50களில் எழுதத் தொடங்கிய இருவர் (கா. சிவத்தம்பி, டொமினிக் ஜீவா) 60களில் எழுதத் தொடங்கிய இருவர் (எம். ஏ. நுஃமான், மு.பொன்னம்பலம்) 70களில் எழுதத் தொடங்கிய இருவர் (ஜெயபாலன், சேரன்) என்று இடம் பெறும் இந்நேர்காணல்கள் ஈழத்துத்தமிழ் இலக்கிய உலகின் சகல காலகட்டங்களையும் உள்ளடக்கி இருப்பதோடு இங்கு நேர்காணப்பட்ட பிரமுகர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஒன்றையொன்று மோதியுடைப்பனவாகவும் உடைவனவாகவும் வெற்றிடமொன்றை விட்டுச் செல்வனவாகவும் அவ்வெற்றிடத்தை இன்னொன்றால் சுட்டுவனவாகவும் மூன்றாம் பார்வையின் வருகையின் தேவையைக் காட்டுவனவாகவும் இருப்பது மிகமுக்கியமானது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிதாமகர்களில் ஒருவரும் முற்போக்குச் சித்தாந்தவாதியுமான பேராசிரியர் சிவத்தம்பியிடம் "இன்று முற்போக்கு எழுத்தாளர் சங்க செயற்பாடுகள் குறித்துக் கூறமுடியுமா?" என்று கேட்ட போது அவர் பின்வருமாறு கூறுகிறார்:"... இன்றைய காலத்தின் தேவைகளுக்கும் இன்றைய காலம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கும் அப்பிரச்சினைகளுக்கு ஏற்ற வகையில் நாம் இயங்க வேண்டும். உதாரணத்திற்கு நாம் 60களில் 70களில் பேசியதை இன்று பேசக் கூடிய சூழல் இருப்பதாகக் கருதமுடியாது. இலங்கையில் தேசியம் சம்பந்தமான நடைமுறை மாறிவிட்டது. அது மாத்திரமல்ல உலக அடிப்படையில் சோவியத் ரஷ்யாவிலும் கூட அந்த மாற்றம் ஏற்பட்டதைக் காண்கிறோம். இப்படியான சூழலில் மார்க்சீயத்தை அடிநாதமாகக் கொண்ட ஒரு எழுத்தாளர் இயக்கம் நிச்சயமாக கால ஓட்டத்திற்கேற்ப, அதன் தேவைக்கேற்ப மாறிக் கொள்ள வேண்டும். அக்கொள்கைகளையே முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு சிவத்தம்பி அவர்கள் கூற, இதே காலத்து பெரும் முற்போக்கு எழுத்தாளரான டொமினிக் ஜீவா இது







பற்றி என்ன கூறுகிறார்? டொமினிக் ஜீவாவிடம் அவரது முதல் சிறுகதை பற்றிக் கேட்ட கேள்விக்கு அவர் பின்வருமாறு பதில் தருகிறார்:

"சுதந்திரன் என்ற வாரப் பத்திரிகை 'அந்தக் காலத்தில் கொழும்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அது தமிழரசுக் கட்சியின் அரசியல் பத்திரிகை. அதன் அரசியல் கோட்பாடுகளில் என்னைப் போன்றவர்களுக்கு அன்றும் நம்பிக்கை இருந்ததில்லை. இன்றும் இல்லை."

இங்கு ஜீவா எதையோ சொல்லப் போய் எதிலோ மாட்டிக் கொண்டிருக்கிறார். உண்மையில் தமிழரசுக் கட்சி என்ன தான் பிற்போக்குச் சாய்வுடையதாக இருந்த போதும் அது முன்வைத்த அரசியல் கோட்பாடு என்றைக்கும் முற்போக்கான சமஷ்டிக் கோட்பாடே. சுதந்திரன் மூலம் அது முன்வைத்த அரசியல் கோட்பாடு இந்த சமஷ்டி ஆட்சி முறையே தான். இந்த நியாயமான முற்போக்கு அரசியல் கோட்பாட்டை அன்று தான் ஜீவாவின் 'முற்போக்கு பார்வை' ஏற்க மறுத்ததை நாம் புரிந்து கொண்டாலும் இன்று எல்லா முற்போக்குச் சக்திகளும் ஏற்றுக் கொள்ளும் இக்கோட்பாட்டை ஜீவாவின் பார்வை இன்னும் நிராகரிக்கிறது என்றால் , இவர் இன்னும் இது பற்றிய தெளிவின்றியே இருக்கிறார் என்பதாகிறது. இந்தப் பின்னணியில் 'இன்றைய உங்கள் அரசியல் குரல் என்ன?' என்று விடுக்கப்பட்ட கேள்விக்கு இவர் கூறும் 'இந்த மண்ணுக்கு' சமாதானம் தேவை. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும்' என்பவை எல்லாம் வெறும் யந்திர உச்சாடனங்களாகவே வந்து விழுகின்றன.

இதேவேளை கைலாசபதி' சிவத்தம்பி ஆகியோரின் முற்போக்குப் பண்ணையில் வளர்ந்த எம்.ஏ.நுஃமான் ஆயுதப் போராட்டத்தையே நிராகரிக்கின்றார். "வன்முறை வன்முறையையே பிரசவிக்கின்றது. இது அடக்குவோரின் வன்முறையாய் இருந்தால் என்ன, அதற்கு எதிரான அடக்கப்படுவோரின் வன்முறையாய் இருந்தால் என்ன இது ஒரு நச்சு வட்டமாகவே சுழல்கிறது.... வன்முறையின் ஊடாக மனித விடுதலை சாத்தியமா என்பதில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டது."

இக்கூற்றின் மூலம் தான் இதுகாலவரை நம்பி வந்த மார்க்சீய சித்தாந்தத்தின் அடிப்படையையே நுஃமான் நிராகரிக்கிறார். இந்நிராகரிப்பு சாதாரண சந்தர்ப்பவசத்தாலோ, சந்தர்ப்ப விபத்தாலோ ஏற்பட்டதன்று. ஆழமான அனுபவ அறிவின் தூண்டுதல் வழிவந்ததென்றே நான் நினைக்கிறேன். இதைச் சொல்வதற்கு துணிச்சலும் வேண்டும். சிவத்தம்பி அவர்கள் இன்றைய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நடவடிக்கைகளை நிராகரிக்கும் போதும் இந்தத் துணிச்சலையும் வளர்ச்சியையுமே காண்கின்றேன். இதையே "தமிழர் பிரச்சினையில் நாம் தவறிழைத்து விட்டோம்" என்று கடைசிக் காலத்தில் சண்முகதாசன் கூறியதையும் நாம் பார்க்க வேண்டும்.

இந்நிலையில் புதிய அணுகுமுறைக்கான தேவையொன்று ஏற்படுகின்றது. அதற்கான வெற்றிடம் காணப்படுகின்றது என்பதை நாம் காண்கிறோம். இந்தப் புதிய அணுகுமுறையை எதிர்பார்த்துத் தான் போலும் மூன்றாவது மனிதனின் முதலாவது இதழ் ஆசிரியர் தலையங்கம் "இனவாதிகள் தாங்கள் சார்ந்த இனத்தை காப்பதாக நினைத்துக் கொண்டு ஏனைய இனத்தவர்களை நசுக்கி விடக் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த அபாயகரமான சூழலில், மனித நேயம்மிக்க படைப்பாளிகள், கலைஞர்களின் பங்கு யாது என்பது அக்கறைக்குரிய கேள்வியாகும். சிலி நாட்டுக் கவிஞன் பப்லோ நெருடா தொடக்கம் நமது பாரதி வரை சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் எழுப்பிய குரல்கள் நம்மை இன்னும் வந்தடையவில்லையா?" என்று எம்மைப் பார்த்துக் கேட்கிறது. இச்சந்தர்ப்பத்தில் மூன்றாவது மனிதன் ஆறாவது இதழில் மு.தளையசிங்கம் பற்றிய ஒரு கட்டுரை - இவ்விதழ் ஆசிரியராலேயே எழுதப்பட்டு வெளிவந்திருப்பதும் நம் கவனத்திற்குரியதாகும். மு.தளையசிங்கத்தின் இலக்கிய விமர்சனப் பிரவேசம் 'மூன்றாம் பக்கம்' என்னும் கட்டுரையோடு தான் ஆரம்பித்தது என்பது ஒரு சந்தர்ப்ப விபத்தல்ல. அது திட்டமிட்ட சிந்தனையின் வழிப்பட்டது. நமது அணுகுமுறை வெற்றிடத்திற்கு அவரது சிந்தனையின் பங்களிப்பையும், பரிசீலனைக்கெடுப்பதும் நமது கடமையாகும். இவ்வாறு இன்றைய காலகட்டத்தின் தேவைகளை நோக்கி எம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறதென்றால் மூன்றாவது மனிதன் தன் பெயருக்கேற்ப முற்போக்காகவே இயங்குகிறது எனலாம்.

அடுத்து மூன்றாவது மனிதனில் வெளிவந்துள்ள சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், சினிமா, புத்தக விமர்சனங்கள் பற்றி சிறிது பார்வையைச் செலுத்துவது அவசியமாகும். சிறுகதைகளைப் பொறுத்தவரை ஈவ்லின், தாய்ப்பால், வெருட்டு, காற்றில் தேய்ந்த காலடிகள், திரும்புதல், நாற்றம், திரை விலகும் துயர் , பனிமலை, மூதாட்டியின் எதிரணியின் சிரம் பணிதல் ஆகிய கதைகள் மூன்றாவது மனிதன் ஆறு இதழ்களில் வெளிவந்துள்ளன. இவற்றில் ஆழியாள் மொழிபெயர்த்துள்ள அம்ரீதா ப்ரீதம் எழுதிய சிறுகதையான 'நாற்றம்', ஞானம் சுபாஷினி மொழிபெயர்த்துள்ள பிரான்சிஸ் வீரப்பெரும எழுதிய சிங்களச் சிறுகதையான 'தாய்ப்பால்', சோமு மொழிபெயர்த்துள்ள மனோஜ்குமார் கோஸ்வாமியின் சிறுகதையான 'திரும்புதல்', ஆறாவது இதழில் எஸ்.கே.-விக்னேஸ்வரன் எழுதிய 'திரைவிலகும் துயர்' ஆகியவை சிறந்த சிறுகதைகள் எனலாம். மொழிபெயர்ப்புச் சிறுகதைகளை வெளியிடுவதற்கு முக்கியம் தந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. எஸ்.கே.விக்னேஸ்வரன் எழுதிய 'திரை விலகும் துயர்' ஆறு இதழ்களில் வெளிவந்த சுயமான சிறுகதைகளுள் சிறப்பானதாகக் கொள்ளலாம்.

கவிதைகளிலும் பல மொழி பெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன. ஜெயசங்கர், ஆழியாள் ஆகியோர் அம்மொழிபெயர்ப்புகளை நன்கே செய்துள்ளனர். றஷ்மி, ஷகீப், ஜெயபாலன், பௌசர், சேரன், ஆண்டி, ஆகர்ஷியா, தேவஅபிரா, சோலைக்கிளி, வாசுதேவன் ஆகியோர் நல்ல கவிதைகளையே தர முயன்றுள்ளனர். ரஜீசன், மஜீத் ஆகியோரின் கவிதைகள் சோலைக்கிளியின் வார்ப்புகளாகவே உள்ளன. இவற்றில் 'குட்டிக்கு' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள உமா வரதராஜனின் கவிதை தனித்து நிற்கிறது எனலாம். ஒரு சிறுகதையாசிரியனின் கவித்துவப் பாய்ச்சல் இது.

சினிமா பற்றிய விமர்சனங்கள் ஆக்க ரீதியானவையாக அமைந்துள்ளன. முதல் இதழில் வெளியான 'தமிழ்ச் சினிமாவின் போக்கு' என்ற கட்டுரை, தமிழ்ச் சினிமாக் குப்பைகளுக்குள் ஓரளவு நம்பிக்கை தரக்கூடிய தமிழின் அண்மைக்கால படங்கள் பற்றி பேசுவது மட்டுமல்லாது, சிங்கள திரையுலகின் சிறந்த ஆக்கமான 'சிஹின தேசயென்' என்ற திரைப்படம் பற்றியும் பேசுவதன் மூலம் ஒரு ஒப்பீட்டுப் பார்வையை முன்வைக்கிறது.

கட்டுரைகளைப் பொறுத்தவரை - அவை அரசியல், சினிமா கட்டுரைகளாக இருந்தாலும் சரி இலக்கிய, தத்துவச் சிந்தனைக் கட்டுரைகளாக இருந்தாலும் சரி - அவ்வப்போது தேவைப்படும் முக்கிய பிரச்சினைகளை அலசுவனவாகவே உள்ளன. இதற்கு உதாரணமாக சிவத்தம்பி அவர்களின் 'ரியலிசம், சோசலிஸ்ட் ரியலிசம், மார்க்சியம் ஒரு விமர்சனத்தலையீடு' என்ற கட்டுரையைக் காட்டலாம். சோஸலிசப் புரட்சி ஏற்படாமலேயே சோஸலிச யதார்த்தவாதம் பற்றி ஈழத்து முற்போக்கெழுத்தாளர் கொண்டிருந்த தவறான போக்கையும் இன்றைய நிலையில் அவர்கள் பேணவேண்டியது விமர்சன யதார்த்தவாதமே என்றும் அக்கட்டுரை கூறுவது மிகமுக்கியமானது. இவ்வாறே மறுமலர்ச்சிக் கதைகள் பற்றியும் மறுமலர்ச்சிக்காலம் பற்றியும் மதுசூதனன் எழுதியுள்ள கட்டுரை நம் விமர்சன உலகில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சில கண்மூடித்தனமான போக்குகளை தகர்க்கிறது. அரசியல் தொடர்பான கட்டுரைகளில் 'ஜே.வி.பியின் மீள் வருகை' என்னும் சிறு ஆக்கம் [illegible] அழகாகவ[illegible] தமிழ் [illegible] சிறுபான்மை இனத்திற்கெதிராக அவர்கள் கொண்டிருந்த வன்மத்தைக் காட்டுகிறது. நட்சத்திரன் செவ்விந்தியன் ஜபாரின் 'தரப்பட்டுள்ள அவகாசம்' பற்றி எழுதிய கட்டுரைக்கு எதிராக சு.வில்வரத்தினம் எழுதிய கட்டுரை மிகுந்த நடுநிலையைப் பேணுவதாகவும் ஈழத்து தமிழ்ப் புதுக் கவிதையின் ஆரம்பப் பின்னணியை சுருக்கமாக வரலாற்றுப் பிறழ்வின்றிக் காட்டிச் செல்கிறது. ஆனால் லெனின் மதிவாணம் எழுதிய 'மஹாகவி குறித்து கைலாசபதியின் மதிப்பீடு' என்னும் கட்டுரை எந்தவித நடுநிலையும் அற்று ஒரு பக்கச் சாய்வோடு எழுதப்பட்டதாக நிற்கிறது. காம்யூ பற்றிய கட்டுரை, முல்க்ராஜ் ஆனந்த் பற்றி மொழிபெயர்ப்புக் கட்டுரை, 'இந்தப் பூமியில் இவர்களுக்கிடையில் எதுவுமே வரமுடியாது' என்னும் டைட்டானிக் திரைப்படத்தோடு ஒட்டிய சிந்தனைகள், 'காமம் ஆற்றலாக அதிகாரமாக' என்னும் அட்ரே லோர்ட்டின் மொழிபெயர்ப்புக் கட்டுரை ஆகியவை மிகப் பயனுள்ளவையாகும்.

இறுதியாக மூன்றாவது மனிதன் வாசகர்கள் கருத்துக்களுக்கும் பெரியளவு இடந்தந்திருப்பது மிக முக்கியமான அம்சமாகும். பிரசுரிப்போர், எழுதுவோர், வாசிப்போர் ஆகிய முப்பகுதியினரின் கருத்துக்களின் ஊடியக்கமாக மூன்றாவது மனிதன் நிற்பதால் அதன் செல்நெறி தானாகவே ஆற்றுப்படுத்தப்படுகிறது எனலாம்.

முக்கியமாக வாசகர் கடிதங்களில் அனேகமானவை இன்றைய இலக்கிய விமர்சகர்களால் பெயர் குறிப்பிடப்படாது ஒதுக்கப்பட்டவர்களின் குரலாக ஒலிக்கின்றன. குறிப்பாக மு.பொன் னம்பலம் தனது பேட்டியின் போது, பல் இளம் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் படிக்காமல் தகவல்களின் அடிப்படையின் கருத்துக்களை முன்வைக்க முனைவதாக சி.விதுல்ஜன் என்பவர் குற்றம் சாட்டியுள்ளார். இது ஓரளவு நியாயமான குரலாக இருந்த போதும் இன்றைய சூழலில் மூடுண்ட பிரதேசமாக இருக்கும் வன்னி, யாழ். பிரதேசங்களில் நடைபெறும் இலக்கிய முயற்சிகள் இன்னும் பரவலாகத் தெரியப்படாமல் இருப்பதே இதன் காரணமாகும். 'வெளிச்சம்', 'காலம் எழுதிய வரிகள்' போன்றவை கூட இன்னும் பலருக்குத் தெரிய வராதவையாகவே உள்ளன. எங்கெங்கோ அக்கினிக் குஞ்சுகளாக மினுக்கங்காட்டுபவை எல்லாம் எமக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று எரிந்து விழுவதால் என்ன பயன்? அவை காடெரித்து வெளிச்சமூட்டி வெளிவரும் போதும் கணக்கெடுக்கப்படாவிட்டால் தான் நாம் இதற்குப் பொறுப்பாகலாம் என்பதே மூன்றாம் பக்கப் பார்வையாகும்.

ஆறு இதழ்களில் இத்தனை சிந்தனைப் பரிமாற்றங்களுக்கு இடம் கொடுத்துள்ள மூன்றாவது மனிதன் பாராட்டுக்குரியதாகும். ஆனால் இச்சஞ்சிகையைத் தொகுத்து வைக்க முடியாத விதத்தில் இதன் உருவம் குறுகியும் நெடுத்தும் வந்து கொண்டிருப்பது சிறு நெருடலைத் தருவதாக உள்ளது.

மு.பொ

நன்றி - நூலகத்திட்டம்






பறட்டக் காட்டுக்க, கறட்டி ஓணான் பிரட்டி!

சனியன் நிப்பாட்டு கதைய,

ஓணானின் பிடரிப்பக்கம்-வெட்டரிவாள் பற்கள். தொண்டை-கம்யூனிசத்தின் நிறம்.

சரிசரி, இப்பதானே விளங்குது. நீ ஆற்ர பக்கமெண்டு.

மீ உயர் ஜனநாயகத்தின் காவலர்களாக பறட்டைக் காட்டுக்குள்ள, நட்டநடுவில் ஒரு கொட்டிலைப் போட்டுக் கொண்டு குந்தியிருந்தது.

இதன் சீற்றமெல்லாம் வேலி வரைக்கும் தான். சனியன், கனதூரம் ஓடவும் மாட்டுது. தலையை மட்டும் மேலும் கீழும் ஆட்டிக்கொண்டு கிடக்கும்.

சூடேறி வெம்மித் தகிந்து கொண்டிருந்தது, சுடுபுழுதியில் புழுவொன்று கசக்கி வீசப்பட்டிருந்தது தாங்கொணா வேதனையில்.

போய்வரும் புழுக்களெல்லாம் நெளிந்தும், வளைந்தும் போயின. அவைக்கு அப்புழுவின் நிலை, தெரிந்தும் தெரியாத வலை.

தானும்.... தள்ளியும்!

தரித்திரியம் பிடிப்பானே, இதைவிட்டா உனக்கு வேற கதையே கிடைக்காதோ.

நிற்கவும் நேரமில்லை, படுக்கவும் நேரமில்லையென்று ஓடுப்பட்டுத் திரிந்தன தெருநாய்கள்.

நீ தொலையத்தான் போறா!

இதைக் கண்டதும் மட்டுமரியாதையாக ஒதுங்கிப் போவார்கள். ஒதுங்க மறுத்தவர்களையெல்லாம் ஒதுக்கியாகிற்று. இன்னும் கொஞ்சம் இருக்கு, சனியனுகள் 'பங்கஸ்" மாதிரி!

தெருநாயைக் கண்டதும், வேலியில் தொற்றிக்கொள்ளும் ஓணான் தலையை மேலும், கீழும் ஆட்டும். பல்லெல்லாம் நெறுநெறுவெனத் தெறிக்கும். பிடரிப்பக்க வெட்டரிவாள் விரியும். கழுத்துப்பக்கம் கடுகடுப்பாய்ப் போகும்.

பொறிக்குள் அகப்படும் வரைக்கும், பொறி இருக்கிறது என்ற பெரிய பெரிய தடையங்களெல்லாம் புலப்படாது போக, பொறியில் அகப்பட்ட பின்னர்தான் சிறுசிறு தடயங்களெல்லாம் மலைபோல வளர்ந்து நிற்கும். மாட்டுப்பட்ட பின்னால் யாரைத் திட்டி யாருக்கென்ன? தம்மையே திட்டித் தீர்ப்பதைத் தவிர!

தன்னைத் தானே நொந்துகொண்டு, பறட்டைக்காட்டை ஊடறுத்துச் செல்லும் காற்றுவழிப் பாதையில்.

அவன் மரக்கட்டைகளை உருட்டிக் கொண்டு போனான். தலையை ஆட்டிக் கொண்டிருந்தன. புரிகிறதோ இல்லையோ தலையை ஆட்டியே ஆகவேண்டிக் கிடக்கிறதே. (இந்தக் கதையிலும் பார்க்கவா?)

வெட்டரிவாள் பற்களை ஆட்டிக்கொண்டு அவளை நோக்கி வந்தது.

வாய்திறந்தது கத்த! காற்று மறுத்தது அதிர்வைக் கடத்த, கடத்தியுமென்னவென்று இறுகக் கண்களை மூடிக்கிடந்தது காற்று.

அவளின் விழிகளைக் நேர்கொண்டு காண மறுத்து துவண்டு போனது மண்துளிகள்.

பறட்டைக் காட்டுக்குள், கறட்டி ஓணான்!

உருட்டிக்கொண்டிருந்த கட்டையை விட்டுவிட்டு அவன் நாக்கு வெளியில் தள்ள அவளைத் தேடினான். தாகம் மண்டை உச்சியைப் பிளந்து உயரே மிக உயரே! அவளைக் காணாது கண்கள் மணிதுணிக்கைக்குள் இறங்கிப் பயணித்தது. மனச்சாட்சியுள்ள இதயம் பீரங்கி ஒலியுடன் ஒலித்துக் கொண்டிருந்தது.

பற்றைக்குள்ளிருந்து அவள் தவண்டு வந்தாள்!

'விசிரி! இப்படித்தானாக்கும் சிறுவயதில் யங்கியோடு தவண்டிருப்பாள்".

அக்கணமே, அவன் ஒரு யுகமாகவும், அவள் பாதாள யுகமாகவும் தோன்றின. மனத்தெப்பம் சமுத்திரத்தின் அடிஆழத்திற்குச் சென்றது. மூச்சு மண்டை ஓட்டின் முகட்டில் முட்டி, முட்டி மோதி மோதிச் சிதறி....

அவனும் அவளும் தவண்டு தவண்டு பறட்டைக் காட்டைக் கடந்த போது, பறட்டைக்காட்டு காவலரணில் 5 ஜீவராசிகள் இருந்தன.

பேயறைந்த வானம் மிகமிக நீண்டு கிடந்தது. துள்ளித்திரியும் முகில்கள் வானத்தின் மடியிலிருந்து இறங்கி பேந்தப் பேந்த முளித்துக்கொண்டு.

அவனுக்கும் வயித்தைப் பிரட்டிக் கொண்டு வந்தது. வீணீர் வாய்க்கு வந்து ஒழுகியது. கண்ணுக்குத் திசைதெரியாது பார்த்துக் கொண்டிருந்தது. மனச்சாட்சியின் உறுத்தலில் இதயம் கனம் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டு.

கொட்டிலில், வெறும் தரையில் சுருண்டு படுத்துக் கிடந்தாள். மனம் வேண்டிய அளவுக்கு, கண்களுக்கு முடியவில்லை. அங்கமெல்லாம் வலிகொண்டெழும்ப, விட்டேனாபாரென மனமும் வீரிட்டெழுந்தது. காற்று தேவையில்லாமல் அவளுடன் முட்டிக் கொண்டிருந்தது. வலியென்றால் பரவாயில்லை, அரியண்டமாவெல்லே!

பள்ளிவிட்டு சிட்டாய்ப் பறந்துவந்த பிள்ளைகள் கொட்டில் வாசலிலிருந்து ஓரடி கடந்த பின்னர் அடுத்த அடியை மறந்து போனார்கள். கொட்டிலின் கம்போடு தலையை மூடியபடி சாய்ந்திருந்தவனையும், மண்ணுக்குள் முகத்தைப் புதைத்துக்கிடந்தவளையும் கண்டு அவர்களுக்கு என்ன தோன்றும் சிறுசுகள்.

பிள்ளைகளின் வாசம் நாசியூடாக அவளுக்குள் இறங்கிய போது தன்னையுணர்ந்தாள். பிள்ளைகளின் பசியுணர்ந்தாள். அவர்கள் தன்குறையின்றி வாழவேண்டுமென்று இருந்தாள். தன்நினைவுகள் தொடரவேண்டுமென எழுந்தாள்.

எந்தப் பக்கம் திரும்பினாலும், காலுக்கிடையில் கிடந்து நெளியும் புழுவாக அவளைக் காண பொறுக்க முடியாமல் அந்திக் கருக்கலில் முகத்தை இரு கைகளாலும், கால்களாலும் பொத்திக்கொண்டு நிலவுக்கஞ்சி போனான்.

தானும், தள்ளியும்!

இப்படிச் சொல்ல உங்களுக்கு கூசலாம்! வேண்டுமென்றால் 'வைக்கல்பட்டடை நாய்" என்று சொல்லலாம். அது தெருவால் நடந்தோ ஓடிப்போகும் போதோ கால் 1/4, அரைப் 1/2 புழுக்கள் செத்திருக்கலாம். அதற்காக 'தானும், தள்ளியும்!" என்று சொல்லிவிடலாமா? என்னதான் இருந்தாலும் எங்களுடைய வால்! அது கொஞ்சம் வளைஞ்சிருக்கலாம். அதுக்காக அதனை நிராகரிக்க எப்படி முடியும்?

ஓணான் கும்பலைக் கண்டதும் கவட்டுக்குள் வாலை வைத்துக்கொண்டு ஓட்டம் பிடிக்கும். ஏற்கனவே முகம் நல்ல இலட்சணம். முன்பற்களும் வேட்டைப்பல்லும் தெரிய இதழ்கள் விரிய 'ஊ..........று" என உறுமும். பிடரிப்பக்க மயிர் விறைத்தெழும்பி நிற்கும். கண்டதெல்லாத்தையும் மணக்கும், பின்காலைத் தூக்கும். கல்லைக் கண்டால் பின்னங்காலை தூக்கியபடி ஓடும்.

ஓடிவிட்டதால் திரும்பி வந்துவிடாதென்றோ திரும்பி வந்துவிட்டதால் ஓடிவிடாதென்றோ எந்த மூலையிலும் எந்த நியாயமுமில்லை! அப்படித்தான் ஏதாவது இருக்கட்டுமே அதைக் கேட்டுவிட எந்தக் கொம்பனால் ஏலும்!

மீ உயர் ஜனநாயகத்தை காக்கும் போட்டியில் அடிபட்டுக் கொள்ளும்.

பாவப்பட்டவை. தாக்கப்படும் சிறு புழுவும் தரைதட்டி எம்பும். ஆனாலும் சாகும் சாகடிக்கப்படும்.

முழிபிதுங்க, காற்று வீசப்பயத்தில் ஊர்ந்து கொண்டிருந்தது. எங்கும் ஒரே நிஷப்தம். பூமி யாருக்கும் அறிவிக்காமல் திடீரென தன்னைச் சுற்றுவதையும், சூரியனைச் சுற்றுவதையும் நிறுத்திக் கொண்டுவிட்டதோ! பூமியோடு ஒட்டியிருந்த உயிருள்ள, உயிரற்ற அனைத்தும் விழுந்துவிடும் போலிருந்தது.

'என்னை யாராலும் அசைத்துவிட முடியாது" என்ற இறுமாப்பில், சூரியன் தகதகவென எரிந்து கொண்டிருந்தான்.

'சிக்குமுக்கிக்" கல்லு இரண்டுக்கிடையில் காற்று போக மறுத்தது.

இப்போதோ திறமென்ற மாதிரியெல்லோ உன்ர கதை!

முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டிய சிறு பயிர் இன்று, பெரு மரமாகி பூத்துக் குலுங்கி, காய்த்துக் கனிந்தது. மரம் காட்டை மிஞ்சி வளர்ந்து காட்டுக்கே நிழல் தரும் என்றே பலர். வாழ்வின் நீள்பரப்பில் மையம் கொள்ள மறுப்பவர்களோ இதன் கனிகளை அமிர்தம் எனப் பருகி மாண்டு போனார்கள்.

வேடிக்கையென்னவெனில், கிளையிலிருந்து அடிமரத்தை வெட்ட முனைந்தவர்களும், காற்றின் அசைவில் உதிரும் பூவின் மகரந்தம் பட்டு செத்துப்போனார்கள். காற்று மகரந்தங்களை காவிக் கொண்டு திரிந்தன.

விஷத்திற்கு விஷம் முறிவைக் கொடுக்கும் என்பதாலோ. என்னவோ மகரந்த நிறமாக, அல்லது அதுவாக நடித்துக் கொண்டவர்களது ஆயுள் ஆசீர்வதிக்கப்பட்டது. உயிர் மீது யாருக்குத்தான் பிரியமில்லை. பிரியாமா? அது கெடு!

அந்தக் கெடுவால் நாய்வேசம் போட்டாச்சு, இனி என்ன குலைக்க வேண்டியது தானே!

மரத்தின் நிழல் கூடிக் குறைந்து- கூடிப்

நன்றி - நூலகத்திட்டம்



பின்னர், மறைந்து போகும். இதற்கு சமூக விளக்கம், விஞ்ஞான விளக்கம், எடுகோள், கோட்பாடு, தத்துவங்கள் என நீண்டு நீண்டு போகும். நிறுவிவிடும் கடைசி தருணம் வரை, மகரந்த மயக்கம் இருக்கும் வரை சாவோம், சாகடிப்போம்.

வந்து சேரவேண்டிய பிள்ளை இன்னும் வரவில்லையென்ற பதைபதைப்பில் தாய்ப் பறவையின் சிறகடிப்பு. எது? எப்படி? என்ன? என்று யாருக்குத் தெரியும்.

வண்டில் விடுறான், பார் சும்மா சும்மா பொய் சொல்லாத!

தெருவெல்லாம் தெருநாய்! முன்னங்கால்களால் புழுதியைக் கிளறி பின்னங்கால்களுக்கிடையில் எத்தும், புழுதி தடவிக் கொண்டு எம்பும்! வேலி, கம்பம், கம்பு எல்லாத்தையும் மோந்து மோந்து கொஞ்சக் கொஞ்ச மூத்திரம் பெய்யும்.

ஓணானை கண்டால் மட்டும் தான் உறுமும் என்றில்லை. தன்னைப் போல் ஆகாதவர்களைக் கண்டும் உறுமும் என்ன? வாயையே வைக்கும்.

வந்து சேரவேண்டிய பிள்ளையின் இறக்கையின் ஒரு மயிர் காற்றோடு கலந்து வந்து தாயின் காலடியில் அநாதரவாய்க் கிடந்தது. வெம்மிப் புடைத்தெழுந்த கண்ணீரும் கண்களும் கலங்குவதற்காக பயந்துபோய்க் கிடந்தது. காற்றெல்லாம் மகரந்தம்- மகரந்தமெல்லாம் காற்று.

அடிச்சுப்போட்டால் முழுசா அடிச்சு முடிச்சுப் போடவேணும் என்பதெல்லாம் கிடக்க,

ஓணானும், தெருநாயும் பங்கிட்டுப் போட்ட "பங்குவெளி" க்கு தயங்கித் தயங்கி வந்தன.

செய்வதறியாது ஓணான்கள் தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டிருந்தன.

தெரு மூலையில் காலை நீட்டிக் கொண்டு, ஓசை கேட்குமென செவியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு நாய்களும் இருந்தன.

சும்மா பறந்த பறவையின் உடலுடன் மண்போகுதென்று நாய்கள் முன்னம், பின்னம் கால்களால் புழுதியைக் கிளறி முகிலை அடித்து வீழ்த்தியது அது கடலில் வீழ்ந்தது. நாற்பத்தெட்டை எட்டுக்கு வைத்துவிட்ட வீராப்பில் தெருநாய் மூலையில் செவியை உயர்த்தியபடி காலை நீட்டி கொட்டாவி விட்டது.

"சிறைப் பிடிச்சு வைச்சிருப்பாங்கள்"

"விசர் கதையெல்லே சொல்றா! தங்கட மண்ண தாங்களே விழுங்குவாங்களே?"

"என்ன ஆதாரமிருக்கு?"

மகரந்தம் பட்டு உயிர்விட்டுப் போகும் பயத்தில் காற்றும் சும்மா கிடந்தது.

புழுதியைக் கிளறியபோது, வதங்கிய புழுவின் உடல். அப்பொழுதும் அது 'தண்ணீ... தண்ணீ..." என்றது. மூச்சு நின்றது - பத்து நாட்களுக்கு முன்னர் என்று காற்று காதுக்குள் ரகசியம் பறைஞ்சது.


இதெல்லாம் எதிர்பாராத சம்பவம் என்று இல்லை. இதுதான் இயல்பு. இய்றகை. எதிர் எதிராக நின்றவைக்கிடையில் அவ் எதிரான இயல்புகளிலும் பன்மடங்கு ஒற்றுமை, ஒத்தவை இருந்தன. இருக்கின்றன. பார்வைக்கு வடக்கு தெற்காக இருந்தாலும், வடக்கில்லாமல் தெற்கோ, தெற்கில்லாமல் வடக்கோ நிச்சயமாக இல்லை. அவ்வளவு ஒற்றுமை!

மரத்தில் தாவிய ஓணான்களின் தலைகள் ஒன்றன்மேல் ஒன்றாக- மேலும் கீழும் ஆடும். அவைகளின் நிறம் மாறிக்கொண்டிருக்க, வேலி ஓரத்தில் இருதலைக்கொள்ளி எறும்பாக தெருநாய்கள். இங்கும்- அங்கும்.

புழுக்களின் மண்டை ஓடுகள், என்புகள், தசைகள் புழுதிக்குள் இருக்கலாம். அது ஓணானின் விடுவிப்பாய் இருக்கலாம், தெருநாய்களின் விடுதலைக்காய் இருக்கலாம்.

என்றாலும் யாருக்கும் தெரியாது! புரியாது! இந்த விசர்க் கதையைப்போல.


# "கவிஞனைத் தொடரும் காலம்...."






கிழக்கிலங்கையின் கவிஞர்களுள் தொண்ணூறுகளில் முனைப்போடு எழுதிய முஸ்லிம் கவிஞர்களுள் (பொத்துவில்) மஜீத் குறிப்பிடத்தக்கவர். இவரின் கவிதைகள் சரிநிகரிலும் பிரசுரமாகியுள்ளன. குறித்துச் சொல்லத்தக்கவான கவிதைகள் பலவற்றை எழுதியுள்ள இளம் கவிஞரான மஜீத் இன்று கடும் சுகவீனமுற்ற நிலையில், மருத்துவத் துறையின் உச்சபட்ச முயற்சிகளால் தன் காலத்தை மிகுந்த துயரத்துடன் கழித்துக் கொண்டிருக்கிறார். இதய 'வால்வு' ஒன்றில் நரம்புகள் சிக்கிப்பின்னியுள்ளதாகவும், சத்திரசிகிச்சை கூட உயிருக்கு ஆபத்தாக முடியுமென்றும் மருத்துவ பரிசோதனைகள் தெரிவித்துள்ளன. முற்றாக நம்பிக்கையிழந்த நிலையில் குளிசைகளை மாத்திரம் பாவித்து வரும் இவரின் நோய்க்கான தற்காலிகத் தீர்வொன்றை இதயப் பக்கத்தின் வெளிப்புறத்தில் பூட்ட முடியுமான கருவியொன்றின் மூலம் வழங்கலாம் என இந்திய வைத்திய அதிகாரியான உமாபதி தெரிவித்துள்ளதோடு அவரை சிகிச்சைக்குள்ளாக்காக இந்திய வருமாறும் அழைத்துள்ளார். இதற்கான செலவுகளில் சில பகுதிகளை இவரது நண்பர்கள் சிலர் மனமுவந்து ஏற்றுள்ளனர். மிகுதியாகத் தேவைப்படும் ஐம்பதாயிரம் ரூபா அளவிலான பணத்தை தன் இலக்கிய நண்பர்கள், ஆர்வலர்கள் மூலமாக பெறுவதற்கு மிகுந்த தயக்கத்தின் மத்தியில் ஒத்துக்கொண்டிருக்கிறார். சில காலம் வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் அச்சகத்திணைக்களத்தில் பணியாற்றிய இவரின் கவிதைகளை நூலாக வெளியிட்டு உதவி பெற்றுக்கொடுக்க அங்கு கடமையாற்றும் சு. வில்வரத்தினமும் முன்வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏலவே இவரின் "ஏறுவெயில்" என்ற கவிதைத் தொகுதி மூன்றாவது மனிதன் வெளியீடாக வந்துள்ளது. இன்னும் சில நாட்களில் இந்தியா செல்லவிருக்கும் இவருக்கு உதவ விரும்பும் சரிநிகர் நண்பர்கள், கீழ்வரும் வங்கிக் கணக்குக்கு தங்கள் உதவிகளினை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இவருடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் சரிநிகர் முகவரியைப் பயன்படுத்தலாம்.

கணக்கிலக்கம்: 101000-39959, Abdu Raheem: City Office Branch - Bank of Ceylon




1

அவள் சொன்னது
சரியாய் போயிற்று
இது சித்திரக் கனவல்ல
நெஞ்சுக்குள் புதைந்துபோன
வலி நிரம்பிய
வாழ்வின் மீதான நிறைபுள்ளி

நான் கடக்க விரும்பினேன்
நிறங்களற்ற
புள்ளிகளைத் துறந்து
நான் நேசிக்க விரும்பினேன்
என்னுள்ளிருந்து என்னை
நான் பறக்க விரும்பினேன்
திக்கற்ற ஒரு பறவையைப்போல

இத்தனைக்குள்ளும்
இறுக மூடினேன் மன வெளியை
மீண்டும் என்னுள்ளிருந்து
அசைந்து அசைந்து?
மேலெழுவதாயிற்று

நானும் புரிந்து கொண்டேன்
இனியென் அறைச் சுவரில் பல்லிகள்
புணரும்.

2

தனிமை பற்றிய அச்சம் என்னையும்
அறுப்பதாயிற்று
வெயிலுக்கும் காற்று வெளியிற்கும்
தொலைவில் பிறந்த கானல் போன்று
அழகாயும்
நெருங்க நெருங்க அதிபயங்கரமாயும்
எனக்குள் இறுகப் பற்றிற்று
தனிமை பற்றிய அச்சம்

அந்த குளத்தின் கரையையும் அலைகள்
மூழ்கின
மீண்டுமெனக்குள் போராளியானேன்

போர் மனப் போர்
போரை உன்னதமாய் ஆக்கிற்று
இருத்தலின் அச்சம்.

3

நதிகள் கல்லானதை
பறவைகள் அழுததை
அடர்ந்த காடுகள் சிறகசைத்துப் பறந்ததை
நீ உனது கண்களால் கண்டதுண்டா?
அல்லது
யாரும் சொல்லகி கேட்டதுண்டா?

முன்னைய கடவுள்கள் புதையுண்டதையும்
புதிய கடவுள்கள்
இருண்ட இரவில் ஆகாயத்திலிருந்து
உடல் நிர்வாணமாகவும்
உடல் கவசங்களோடும்
கடும் கோபமாகவும்
கடும் மகிழ்ச்சியாகவும்
இறங்கியதை
நீ உனது கண்களால் கண்டதுண்டா?
அல்லது
யாரும் சொல்லிக் கேட்டதுண்டா...?

சத்தியமாக
நான் சொல்வதை நீ கேள்
என் மனதில் பெரும் பதட்டம்
என் உடலில் நீண்ட நடுக்கம்
எல்லாவற்றிற்கும்
எனது கண்களே சாட்சி
எல்லாவற்றிக்கும்
எனது செவிகளே சாட்சி
இவைகள் நடந்தே ஆகின.

– மஜீத்

# வெள்ளையடிக்கப்பட்ட வரலாறு : துரைசாமியின் சுவரோவியங்கள்

**- சனாதனன்**

கணித ஆசிரியர்களை நாம் கணிதவியலாளராகக் கொள்வதில்லை. விஞ்ஞான விரிவுரையாளரைக் கூட விஞ்ஞானி என்றழைப்பதில்லை. மெய்யியலாளர் என்று மெய்யியலைக் கற்பிப்போரைக் கொள்வதில்லை. ஆனால், சித்திர ஆசிரியர்களை நாம் ஓவியர்களாகக் கொள்கிறோம். இது ஓவியம் என்ற வெளிப்பாட்டு வடிவத்தை எமது சமூகம் எவ்வாறு உள்வாங்கியுள்ளது அல்லது கருதுகிறது என்பதையும், ஓவியம் எவ்வாறு வகுப்பறை சார் நடவடிக்கையாக இன்னும் இருந்து வருகிறது என்பதனையும் சுட்டி நிற்கிறது.

வழமையான ஓவிய ஆசிரியர்களிடையே, அபூர்வமாக சில ஓவியர்கள் இருந்துள்ளார்கள் என்பதும், அருந்தலாக சில நல்ல படைப்புக்கள் வந்துள்ளன என்பதும், இங்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதும், குறிப்பிடப்பட வேண்டியதுமான ஓர் அம்சமேயாகும். ஆனால், இதுவரை இந்த ஆளுமைகளும், படைப்புகளும் வேறுபடுத்தி இனங்காணப்படவோ, அல்லது அவற்றுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படவோ இல்லை. வரைபவர்கள் அனைவரையும் அல்லது வரைய படிப்பிக்கின்ற அனைவரையும் எந்த வியாக்கியானமும் இல்லாமல் ஓவியர்களாகவும், அவர்கள் படைப்புக்கள் அனைத்தும் ஓவியங்களாகவும் இனங்காணப்படுகின்றன. இந்த அணுகு முறையையே ஈழத்தில் ஓவியம் பற்றி எழுதிய பலருங் கூடக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு சான்றாக அவர்களின் எழுத்துக்கள் விளங்குகின்றன. இதனால், இதுவரை எழுதப்பட்ட யாழ்ப்பாணத்து ஓவிய வரலாறு என்பது துரதிஷ்டவசமாக ஓவிய ஆசிரியர்களின் வரலாறாக காணப்படுகின்றது. இந்த எழுத்துக்களில் இவர்கள் ஓவியங்களையும், வரைபடங்களையும், கேலிச் சித்திரங்களையும், விளக்கப் படங்களையும், சுவரொட்டிகளையும், விளம்பரப் படங்களையும், கைவினையையும் வேறுபடுத்தி இனங்காணவோ, மதிப்பிடவோ இல்லை. மேலும் ஓவியங்கள் அவற்றின் தனிப்பண்பியலாலும் (Idiom) காண்பிய மொழியாலும் அளவிடப்படாமல், அவை கையாண்ட கருப்பொருட்களின் அடிப்படையில் அளவிடப்பட்டன. இதனால், பெரும்பாலான விளக்கப்படங்கள் ஓவியங்களாகக் கொள்ளப்பட்டதுடன், கைவினைத்திறனின் முக்கியத்துவம் உணரப்படாத படைப்பாளிகள் வரவும் ஏதுவானது. ஓவியத்தை உத்திமுறைகளாகவும், இசங்களாகவும் மட்டும் உள்வாங்கப்படவும், நவீனத்துவத்தையும், பின்நவீனத்துவத்தையும் கூட ஓர் பாணியாக (Style), மேற்பரப்பாக (Surface) மேலோட்டமாக உள்வாங்கவும் காரணமாயின. இவ்வாறு வெவ்வேறு தேவைகளின் பொருட்டும், நோக்கத்திற்காகவும் எழுந்த நிறம்பூசிய மேற்பரப்புக்கள் அனைத்தும் அவை சார்ந்த அர்த்தங்களினின்றும், அடிப்படைகளினின்றும் நோக்கப்படாமல் ஓவியம் என்ற ஒரு பொது சட்டகத்துள் வைத்து நோக்கப்படுகின்றன. இது முரண்பாடான அணுகுமுறையாகவே காணப்படுகிறது. இது ஓவியம் பற்றிய புரிதல்களுக்கும், தெளிவுகளுக்கும் இட்டுச் செல்லாமல் ஏற்கெனவேயுள்ள குழப்பங்களையும், தப்பெண்ணங்களையும் மேலும் விகாரப்படுத்தியுள்ளது.

2

இவ்வாறு குழம்பிய வியாக்கியானங்களிடையே சரியாக இனங்காணப்படாது தவறவிடப்பட்ட ஓர் படைப்பாளி தாவடி துரைசாமி என்றழைக்கப்பட்ட ஓவியர். கலாகேசரி தம்பித்துரையின் 'பிற்காலத்து யாழ்ப்பாணத்து சுவரோவியங்கள்' என்ற நூலில் மாத்திரமே இவர் குறிப்பிடப்படுகிறார். இவர் சித்திர ஆசிரியராக அறியப்படாததினாலோ அல்லது காத்திரமான படைப்புக்களைப் படைத்த 'ஓவியராக' இருந்ததினாலோ என்னவோ இவரைப் பற்றி பிற ஓவியம் பற்றிய எழுத்துக்களில் குறிப்பிடப்படவேயில்லை. ஆனால், துரைசாமி வரலாற்றின் முக்கியமான காலகட்டத்தை தனது ஓவியங்களினூடு பிரதிநிதித்துவம் செய்கிறார் என்பதுடன், மிகவும் காத்திரமான கலை வெளிப்பாடுள்ள படைப்புகளைப் பரவலாகச் செய்தவர் என்றவகையிலும் மிகவும் முக்கியமானவர்.

துரைசாமியின் ஓவியங்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நல்லூர் சட்டநாதர் ஆலயம், யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதி கிட்டங்கி போன்றவற்றிலும், இன்னும் பல தனியார் வீடுகளிலும் இருந்ததாக கலாகேசரி தம்பித்துரை குறிப்பிடுகிறார். இதற்குப் பல தெளிவற்ற புகைப்படங்களைச் சான்றாகவும், தனது நூலில் தருகின்றார். இவ்வோவியங்களனைத்தும் காட்சிப்படுத்தலில் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தென்னிந்திய கம்பனி ஓவியங்களை ஞாபகமூட்டுகின்றன. இவற்றைப் போலவே துரைசாமியின் ஓவியங்களிலும் கிழக்கு, மேற்கு சிந்தனை முறைமைகளினதும், கலாசார, பாணி முறைமைகளினதும் கலப்பை அவதானிக்க முடிகிறது. துரைசாமியின் ஓவியங்கள் அனைத்தும் சுண்ணாம்புக்கல் சுவர்களிலேயே வரையப்பட்டிருந்தன. எண்பதுகள் வரை எமது பார்வைக்குக் கிட்டிய இவை அதற்குப்பின் போரினாலும், கோயில் புனருத்தாரணங்களின் போதும் சிதைந்து போயின. அல்லது வெள்ளையடிக்கப்பட்டு விட்டன.

இவற்றில் பாங்ஷால் வீதி கிட்டங்கியில் இருந்த பெரிய ஓவியம் மிகவும் முக்கியமானது. இது அதன் உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டு முறையிலும் காலனித்துவ கால வாழ்பனுபவங்களுடன் சம்மந்தமானது- துரைமார்கள் பற்றியது. இவ்வோவியத்திலுள்ள துரைமார்கள், குதிரைகள், நாய்கள் வேலைக்காரப் பாத்திரங்களின் யதார்த்தப் பண்பும் உடல் அமைப்பும் - மேற்கத்தைய கலாசாரத்தின் பரீட்சியத்தை கருப்பொருளிலும், மேற்கத்தைய கட்புல கலாசாரப் பரீட்சியத்தைக் காட்சிப்படுத்தலிலும் காட்டி நிற்கின்றன. இவ்வோவியத்தின் வலிமையும், கம்பீரமும் வரைதிறன் நுட்பமும், உயிர்ப்பும் துரைசாமியை தேர்ச்சி பெற்ற ஓவியராக எமக்குக் காட்டுகின்றன. இத்தேர்ச்சி என்பது ஒன்றின் பிரதிபலிப்பாக மட்டுமல்லாமல், உள்வாங்கலின் தன்வயப்படுத்தலின் வெளிப்பாட்டின் தேர்ச்சியாகவும் இருக்கின்றது.




மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் இருந்த அரசன், அரசி, சேனாதிபதி ஓவியங்கள் தஞ்சாவூர் பிரகிதீர்ஸ்வரர் கோயில் பிற்கால ஓவியங்களில் உள்ள உருவகப்படுத்தலை ஞாபகமூட்டுகின்றன. இந்த தஞ்சாவூர் ஓவியங்களில் மராட்டிய, மேலைத்தேய செல்வாக்குகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதை விட துரைசாமி இந்தியத் தொடர்புடையவர் என்று அறிய முடிகிறது. எனவே அவர் தனது காலத்தில் அல்லது அதற்கு சற்று முன்வரை தமிழகத்தில் நிகழ்ந்த ஓவிய வெளிப்பாடுகள் பற்றி அறிந்திருந்தார் எனக்கொள்ளலாம்.

3

கலாகேசரியின் பார்வைக்கு அகப்படாத துரைசாமியின் பல ஓவியங்கள் தாவடி, அம்பலவாணர் முருக மூர்த்தி கோயில் சுவர்களில் காணப்பட்டன. இக்கோயில் கைவிடப்பட்டிருந்த போது, இதை தமிழின விடுதலைக்கு முன்னொரு போது போராடிய இயக்கமொன்று பயன்படுத்தியது. குறிவைத்து சுட்டுப்பழக அது இந்த ஓவியங்களையும், அப்போது பயன்படுத்தியதான செய்திகளையும் சான்றுகளையும் பெற முடிகின்றது. 1987ல் இக்கோயில் புனருத்தாரணப் பணியின் போது மிக மோசமான நிலையில் இருந்த சுவர்களுடன் ஓவியங்களும் அகற்றப்பட்டு விட்டன. ஆனால், இவ்வோவியங்களில் இருந்த கவித்துவமான கருப்பொருட்களும், அவை கலைத்துவமாக பகிரப்பட்ட முறையும் காட்சிப்படுத்தலில் இருந்த இயல்பான தன்மையும் ஓவிய வரலாற்றில் செழுமையும் இரசனையும் மிக்க காலத்தைச் சுட்டி நிற்கின்றன.

கோயிலின் மகா மண்டபத்தின் வடக்கு மற்றும் தெற்குப்புற வெளிச்சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டன. இதில் வடக்குப் புறத்தில் பரட்டைத் தலையுடன் கூடிய கோவணம் அணிந்த இரண்டு வேடர்களின் உருவங்கள் காணப்பட்டன. இவர்களில் ஒருவனது கரத்தில் வேட்டையாடிய பறவைகள் தொங்குகின்ற வில்லும், முதுகில் அம்பறாக் கூடும் காணப்படுகிறது. அடுத்ததாக ஒரு தொடர் ஓவியம் வரையப்பட்டிருந்தது. இதில் வள்ளியை முருகன் சன்னியாசியாக வந்து ஆட்கொண்டமையை சித்திரிக்கின்ற மூன்று ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை ஒரு பட்டிகைக்குள் அமைந்து கதையைக் கூறுகின்றன. முதலாவது ஓவியத்தில் சன்னியாசியின் கையைப்பிடித்து வள்ளி அழைத்துச் செல்கிறாள்; அடுத்த காட்சியில் பள்ளத்துள் விழுந்த சன்னியாசியை வள்ளி கைகொடுத்து தூக்குகிறாள்; கடைசியாக ஓடிவரும் யானைக்குப் பயந்து வள்ளி சன்னியாசியின் பின்னே அவரை இறுகத் தழுவியபடி அலறுகிறாள். முழுக்கதையின் நகர்வும் ஓவியத்திலுள்ள ஓட்டமும், வலதிலிருந்து இடப்பக்கமாக நிகழ்கிறது. இடத்திலிருந்து வலப்பக்கம் நோக்கி ஓடிவரும் பருத்த யானை மூலம் இந்த ஓட்டம் சமன் செய்யப்படுகிறது.



புராணப் பாத்திரங்களான வள்ளியும், கிழ சன்னியாசியும் சமகாலத்து மாந்தர்களின் உடல், ஆடை, அமைப்புகளுடன் வரையப்பட்டுள்ளார்கள். வேடர்குலப் பெண்ணாகக் கூறப்படும் வள்ளி சமகாலத்து யாழ்ப்பாண உயர் குலப் பெண்ணாக வரையப் பட்டுள்ளார். பெரிய முடிந்த கொண்டை, பின் கொய்யகத்துடனான சேலை, நகைகள், உடல்வாகு என்பன அவளைச் சாதாரணப் பெண்ணாக இயல்பாகச் சித்திரிக்கின்றன. தஞ்சாவூர்- மராட்டிய கால ஓவியங்களில் உள்ளது போல இவளும் சற்றுப் பருத்தும், கட்டையாகவும் காணப்படுகிறாள். அவளது பச்சைவர்ண உடலும், நீல வரியிட்ட ரவிக்கையும், சரிகை வேலைப்பாடுள்ள சேலையும் அவளுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன. யானையால் பீதியுற்றுள்ள வள்ளியின் கூந்தல் அவிழ்ந்து தொங்குகிறது. முந்தானை விலகியுள்ளது. பற்கள் தெரிய வள்ளி அலறுவதாக ஓவியம் உணர்த்துகின்றது. மேலும் யானையின் ஓட்டம், கிழவனின் நடை, கிழ சன்னியாசியின் முகத்தில் வெளிப்படும் குறும்புத்தனம் என எல்லாமே வெளிப்பாட்டுச் சிறப்பு மிக்கவை - இரசனைக்குரியவை.

தெற்குப்புறச் சுவரில் முறையே வசிட்டர், காமதேனு, தட்சணாமூர்த்தி லிங்கத்தின் மீது பால் சொரியும் பசு, பால் காவடிக்காரன், வள்ளியின் பிறப்பு, வேலனம்பி ஆகியன வரையப்பட்டுள்ளன. தலைப்பாகையுடன் இடது காலை மடித்து அதன்மீது வலது காலைப் போட்டபடி வசிட்டர் அமர்ந்திருக்கிறார். அவரது வலது கரம் காமதேனுவை நோக்கி சிம்ம முத்திரையை வெளியிடுகிறது. வசிட்டரை நோக்கிய வணங்கியபடி காமதேனு என்ற புராணப்பாத்திரம் வரையப்பட்டுள்ளது. காமதேனுவின் ஏரிக்கு பின்னாலுள்ள இறக்கை அதற்கு மேலும் வலுச்சேர்க்கிறது. அடுத்து தட்சணாமூர்த்தியும் சனகாதிமுனிவர்களும் வரையப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் சாதாரண மனிதர்களைப் போல உருவகப்பட்டுள்ளார்கள். கீழைத்தேய உருவச்சித்திரிப்புகளுக்குரியதல்லாத திரண்ட தசைகளும், உடல் வளைவுகளும் காட்டப்பட்டுள்ளது. முப்பரிமாண ஒளி நிழல்படுத்தல் முயன்று பார்க்கப்பட்டுள்ளது. இங்கு முப்பரிமாணம் என்பது ஒளிநிழல் தன்மை என்பதிலும் பார்க்க, வலுவான கோடுகளின் கையாள் கையில் தான் உணர்த்தப்படுகிறது. தட்சணாமூர்த்தியின் பரந்து விரிந்த சடை மிக அழகாகக் காட்டப்படுகின்றது. இதற்கு அடுத்ததாக இலிங்கத்தின் மீது பால் சொரியும் பசு என்ற கவித்துவமான கருப்பொருள் படமாக்கப்பட்டுள்ளது. இதிலும் கோடே பசுவிற்கு யதார்த்தப் பண்பளிக்கின்றது. இதனைத் தொடர்ந்து காவியணிந்த மொட்டையடித்த பால்காவடிக்காரனின் உருவம் காணப்படுகின்றது. இதற்கடுத்ததாக வள்ளியை மான் ஈன்ற காட்சி கவித்துவமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இது இங்குள்ள ஓவியங்களில் மிக முக்கியமானது. அப்பொழுது தான் ஈன்ற பெண் குழந்தையை இரண்டு பெண் மான்கள் (அவற்றில் ஒன்று வள்ளியை ஈன்றது) நக்குகின்றன. அவற்றினிடையே ஓர் ஆண் மான் கிலியுடன் திரும்பிப்பின்னால் பார்க்கிறது. அதன் பார்வை எம்மை அடுத்துள்ள வேலனம்பியின் ஓவியத்திற்கு எடுத்துச் செல்கின்றது. வேலனம்பி தலைப்பாகையும், மேலங்கியும் அணிந்தவராகக் காணப்படுகின்றார். கையில் வில்லும் முதுகில் அம்பறாக் கூட்டுடனும் அவர் வரையப்பட்டுள்ளார்.

இக்கோயிலிலுள்ள மான், பசு, யானை போன்ற விலங்குருவங்கள் பங்ஷால் வீதியில் இருந்த குதிரை, நாய் போன்றவற்றில் உள்ளது போல, அவற்றின் விலங்குத் திறனுடனும், குணவியல்புகளுடனும் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. தெய்வங்களினதும், புராணப் பாத்திரங்களினதும் அழகு என்பது இலட்சியப்படுத்தப்பட்ட ஒன்றாக அல்லாமல் யதார்த்தத்தின் சாதாரணங்களின் அழகாகக் காணப்படுகிறது. இதில் ஓவியனின் இயற்கையான இயல்பான வெளிப்பாட்டைக் காண்கின்றோம். பாத்திரங்கள் உருவங்களில் மட்டுமல்லாமல் அவற்றின் உள்ளார்ந்த தன்மையிலும் யதார்த்தப் பண்புடையனவாகக் காணப்படுகின்றன. இவ்வோவியங்களுக்கு பின்னணியாக சிவலிங்கங்களும், மரங்களும் வரையப்பட்டிருந்த போதிலும், அவை தட்டையான வெள்ளை நிறப் பின்னணியாகவே காணப்படுகிறது. இது ஓவியத்தில் கீழைத்தேய அணுகுமுறை சார்ந்த ஓர் விடயமாகும். இதுவே ஓவியத்தின் பல்வேறு காட்சிகளை ஒன்றாக இணைக்கிறது. ஓவியத்தின் கீழ்ப்பகுதியில் மரங்களின் வரிசை வரையப்பட்டுள்ளது.

இவ்வோவியங்கள் இயற்கையான வர்ணங்களைக் கொண்டு வரையப்பட்டிருந்தன. இவற்றில் மண்சார் நிறங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை உருவங்களுக்கு மேலும் யதார்த்தத்தனமும், யாழ்ப்பாணத்தனமும் சேர்க்கின்றன. இதை விடக் கறுப்பு, நீலம், பச்சை, மஞ்சள் போன்ற நிறங்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

4

இன்று எழுதப்பட்டுள்ள யாழ்ப்பாண ஓவிய வரலாறு எஸ். ஆர். கனகசபையுடன் (இவரும் சித்திர பாடத்திற்கான கல்வி அதிகாரி) ஆரம்பிக்கின்றது. ஆனால், துரைசாமியை இவருக்கு முற்பட்டவராகக் கருத இடமுண்டு. துரைசாமி பற்றிய தகவல்கள் அரிதாகவேயுள்ளன. அவருடைய ஓவியங்களே அவரைத் தெரிந்த வரலாற்றின் முதல் தொழில்சார்

கணித ஆசிரியர்களை நாம் கணிதவியலாளராகக் கொள்வதில்லை. விஞ்ஞான விரிவுரையாளரைக் கூட விஞ்ஞானி என்றழைப்பதில்லை. மெய்யியலாளர் என்று மெய்யியலைக் கற்பிப்போரைக் கொள்வதில்லை. ஆனால், சித்திர ஆசிரியர்களை நாம் ஓவியர்களாகக் கொள்கிறோம். இது ஓவியம் என்ற வெளிப்பாட்டு வடிவத்தை எமது சமூகம் எவ்வாறு உள்வாங்கியுள்ளது அல்லது கருதுகிறது என்பதையும், ஓவியம் எவ்வாறு வகுப்பறை சார் நடவடிக்கையாக இன்னும் இருந்து வருகிறது என்பதனையும் சுட்டி நிற்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



தனி ஓவியராக (induividual professional painter) எமக்கு இனங்காட்டுகின்றன. ஓவியங்களின் இயல்பினடிப்படையில் அவரைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வந்த காலனித்துவ ஓவியராகக் கருதலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு என்பது அதுவரை யாழ்ப்பாணம் ஆட்பட்டு வந்த காலனித்துவ செல்வாக்குகளின் சிகரம் என்று கூறப்படலாம். காலனித்துவவாதிகள் தமது கல்வி, போக்குவரத்து, தகவல்தொடர்பு, அச்சுப்பதிப்புத் தொழில்நுட்பம் முதலியவற்றினூடு மேற்கத்தைய மற்றும் இந்திய கலாசாரங்களை மேலும் யாழ்ப்பாணத்திற்கு கிட்டக் கொணர்ந்தார்கள். இதன் போது சாத்தியமான கலப்புகளும், பகிர்வுகளும், மாற்றங்களும், யாழ்ப்பாணக் கலாசார உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றின. காலனித்துவ சமுதாயங்களில் நிகழ்ந்த விழுமியங்களினதும், பெறுமானங்களினதும் மாற்றங்களால் பாரம்பரியத்திலும் அது வழிவந்த ஓவியத்தின் அர்த்தத்திலும் பயில் முறையிலும் கூட மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த மாற்ற காலத்தின் வெளிப்பாடாக துரைசாமியின் படைப்புகள் அமைந்துள்ளன. எவ்வாறு மாறுகின்ற சமூகம் ஒன்று சில விடயங்களைத் தக்க வைத்துக் கொண்டும், சிலவற்றை புத்துருவாக்கியும், சிலவற்றை நிராகரித்தும், இணைத்தும் கொள்கிறதோ - இந்தச் செயற்பாடு கால ஓட்டத்துள் எப்படி இயல்பாக நிகழ்கிறதோ, அதையொத்த செயற்பாட்டைத்தான் துரைசாமியின் ஓவியங்களிலும் நாம் காண்கிறோம். இவ்வோவியங்களில் மதசார்பான மற்றும் சார்பற்ற கருப்பொருட்கள் கையாளப்பட்டிருந்தாலும், இக்கருப்பொருட்களின் தெரிவிலும், காட்சிப்படுத்தல் முறையிலும் அக்கால சமூக அனுபவங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இவை அக்காலத்தின் மீதும் பாரம்பரியம் மீதும், நவீனத்துவம் மீதும் ஓர் விமர்சனத்தை முன்வைப்பதையும் அக்கால எண்ணத்தை வெளிப்படுத்துவதையும் காண்கின்றோம். பின்வரும் முக்கிய மாற்றங்களின் குறிப்பான்களாக இவ்வோவியம் அமைகின்றன.

1. கோயில் சார் கலையாக, பாரம்பரியமாக கோயில்களினுள் இருந்து வந்த சுவரோவியம் செல்வந்தர்களினதும், செல்வாக்குடையோரதும் புதிய வடிவிலமைந்த ஆதரவு, போஷிப்பு என்பவற்றால் மதம் சாராத தனியார் கட்டிடத்தினுள் பிரவேசித்தல்.
2. மெய்ப்பண்பியல்பு (Realism) பாத்திர உருவாக்கத்திலும் காட்சிப்படுத்தலிலும் முன்னரைவிட ஆட்சியடைதல். காட்சிகளில் முப்பரிமாணத் தன்மை ஆழமாதல். மரபு வழி ஓவியத்திலுள்ள குறியீட்டு தன்மை இதனால் குறைவடைதல் அல்லது இழக்கப்படல்.
3. மரபுவழியாக கலைப்பட்டறைகளை அடிப்படையாகக் கொண்ட கூட்டு செயற்பாடாக இருந்த அனாமதேயக்கலை வெளிப்பாட்டில் தனிமனித முக்கியத்துவம் அதிகரித்தலும், இதனால் தனிப்படைப்பாளியின் பெயர் தெரியவருதலும்.
4. காலனித்துவ செல்வாக்குகளுக்கு எதிர்வினையாக சுதேசிய அடையாளங்கள் பற்றிய பிரக்ஞை முனைப்படைதல்.

காலனித்துவ காலத்தில் நிகழ்ந்த கலை வெளிப்பாடுகளிலுள்ள மேற்கத்தைய செல்வாக்குகளை நிராகரிக்கும் ஆனந்த குமாரசாமி எமது கலை வெளிப்பாடுகளின் பொற்காலமான மத்திய காலத்திற்கு அவற்றை மீள எடுத்துச் செல்ல வேண்டும் என்கிறார். ஆனால், இக்கருத்தை ஏற்காத கே. ஜி. சுப்பிரமணியம் காலனித்துவத்தால் வலுவிழந்துள்ள மத்தியகால சமூக அமைப்பினுள் எவ்வாறு மத்திய கால கலையை மீண்டும் படைக்கலாம் என்று கேள்வி எழுப்புகிறார். சுப்பிரமணியத்தின் கருத்து இங்கு மிக முக்கியமானது.

மத்திய காலத்திலிருந்து இந்தியா காலனித்துவத்தினூடு நவீனத்துவத்தினுள் பிரவேசிக்கும் போது ஓவியத்தில் பாரம்பரிய பாணியில் இருந்து விக்ரோரிய மெய்ப்பண்பு வாதத்திற்கு மாற்றம் அடைகிறது. இது ஒரு சடுதியான மாற்றம் அல்ல. இவை இரண்டையும் இணைக்கும் இவ்விரு போக்குகளினதும் கலப்பான ஓர் பாணியை நாம் கம்பனி ஓவியங்களில் காண்கின்றோம். உதாரணமாக தஞ்சாவூர் ஓவியப்பாணியில் பயிற்சி பெற்றவரான ரவிவர்மா தனது வெளிப்பாட்டிற்கு விக்ரோரிய மெய்ப்பண்புவாதத்தை அடிப்படையாகக் கொள்கிறார். பின்னர் தனது படைப்புகளின் மெய்ப்பண்பியல்பிற்காகவே அறியவும் படுகிறார். இந்த தஞ்சாவூர் பாரம்பரிய பாணிக்கும், ரவிவர்மாவின் மெய்ப்பண்புவாதத்திற்குமிடையில் இவ்விரு அணுகுமுறையையும் கொண்ட பாலமாக இராமசாமி நாயக்கர் என்ற அரசவை ஓவியரின் படைப்புகள் காணப்படுகின்றன. இதையொத்த இடைமாற்ற காலப்படைப்பாளியாக துரைசாமியை அவரது படைப்புகள் காட்டி நிற்கின்றன.

இதைப் போன்ற ஓர் இடைமாற்ற காலத்து படைப்பாளியாக மேற்கத்தைய கலை வரலாற்றில் ஜியத்தோவை (Giotto) நாம் காணலாம். மத்திய கால கிறிஸ்தவத்திலிருந்து மறுமலர்ச்சிகாலத்திற்கான சிந்தனை மாற்றத்தை மிக தெளிவாக ஜியத்தோ தான் தனது ஓவியங்களில் கொண்டு வருகிறார். இதனால் மத்திய காலத்து ஓவியத்தையும் மறுமலர்ச்சிக் கால ஓவியத்தையும் இணைக்கும் ஓர் பாலமாக அவரின் ஓவியங்கள் காணப்படுகின்றன. துரைசாமியின் கலையும் முற்றாக பாரம்பரியம் சார்ந்தது என்றோ அல்லது முற்றாக மேற்கத்தேயம் சார்பானது என்றோ கூற முடியாது. அது இவை இரண்டும் அற்ற, அதேவேளை இவை இரண்டையும் இணைக்கின்ற ஒரு மூன்றாவது வகை ஒரு புதிய சமன்பாடு எனலாம். இதிலுள்ள காத்திரத்தன்மையும், சமூகத்தை உள்வாங்கிய வெளிப்பாடும் இதற்குப் பின் வந்தவர்களால் சரியாக உள்வாங்கப்படவில்லையென்றுபடுகிறது. இதனால் நிகழ்ந்திருக்க வேண்டிய மறுமலர்ச்சியும், அதற்குரிய வலுவுடன் நிகழாமல் போயுள்ளது எனத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணச் சமூகம் பற்றி, குறிப்பாக காலனித்துவ சமூகம் பற்றிய முறையான, விரிவான வரலாற்று ஆய்வுகளோ, சமூகவியல் ஆய்வுகளோ செய்யப்படாத நிலையில், துரைசாமியின் ஓவியங்கள் பற்றிய இந்தக் குறிப்பு ஓர் அறிமுகம் மாத்திரமே. இதைவிட துரைசாமியின் சொந்தத் தகவல்களும் மிக அரிதாகவே உள்ளன. ஆனால், இவை பற்றிய விரிவான ஆய்வு காலம் பிந்தியது எனினும், இன்று மிகவும் அவசியமானது.

துரைசாமி தனது காலத்தை உள்வாங்கிப் புரிந்து கொண்ட விதமும், அதை அனுபவமாக தமது ஓவியங்களின் மொழியில் பகிர்ந்த விதமும் அதை நேர்த்தியாக உணர்ந்த அவரிடம் இருந்த வினைத்திறனும், உருவங்களை ஒழுங்கமைக்கின்ற திறனும் (Compositional Sense) ஓவியம் பற்றி பேசும் எவருக்கும் முக்கியமாகத் தோன்றும்.

துரைசாமியின் ஓவியங்களை உரிய முறையில் இனங்காணல் என்பது இதுவரை பேசப்படாத யாழ்ப்பாணத்துக் காலனித்துவகால தனித்துவங்களை இனங்காண உதவும். இது இதற்கு பின்வந்த படைப்புகள், படைப்பாளிகள் எழுதப்பட்ட வரலாறு என்பவை மீதொரு மீளாய்வை அவசியமாக்கும். தெரிந்த வரலாற்றின் முதல் பெயர் தெரிந்த ஓவியராக துரைசாமியை இனங்காணவும் இதன் மூலம் வழி ஏற்படலாம். துரைசாமி இதுவரை காலமும் யாழ்ப்பாணத்து ஓவியச் சூழலில் ஏன் கருத்துக்கெடுக்கப்படவில்லை என்ற கேள்விக்கான பதிலின் மூலத்துள் தான் ஓவியம் ஏன் கலையாக பயிலப்படவில்லை. இன்னும் ஏன் தொழில்சார் முழு நேரப்படைப்பாளிகள் ஓவியத்தில் தோன்றவில்லை என்பன போன்ற கேள்விகளுக்கான பதிலும் அமிழ்ந்துள்ளது. நவீனத்துவம் வெளிப்பாடு என்ற வகையில் எவ்வாறு உள்வாங்கப்பட்டது. பின்னர் அது எவ்வாறு யாழ்ப்பாணத்து ஓவியத்தில் வெளிப்பாடு என்ற வகையில் தோல்வியடைந்தது என்பவற்றையும் இந்தப் பதில்கள் தான் உணர வைக்கும்.

## பாலசிங்கமோ......

5 ம் பக்கத் தொடர்ச்சி.....

அவருடைய ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களுக்குச் செய்யப்பட்ட அநியாயங்கள் இருக்கிறது. அதைப் போலப் பிரபாகரன் செய்த அநியாயங்களும் இருக்கிறது. ஆகவே முஸ்லிம்களுடைய அச்சம் பிழையானது என்று யாரும் சொல்ல முடியாது. நாம் கேட்பதெல்லாம் தமிழர்களுடன் சமாதானமாக வாழ்வதற்கு ஒரு அதிகாரச் சமநிலை. இந்த அதிகாரச் சமநிலையை உறுதிப்படுத்தத் தான் நாங்கள் கேட்கிறோமே ஒழிய அதற்கப்பால் நாம் வேறெதுவும் கேட்கவில்லை. தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படும் போது முஸ்லிம் மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

**தென்கிழக்கு மாகாண அலகு ஏனைய பிரதேச முஸ்லிம்களைப் புறக்கணிப்பதாக எழும் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் கூறுவீர்கள் ?**

மற்ற மாவட்டங்களில் இருக்கும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவார்கள் என்ற குற்றச்சாட்டு நியாயமானதல்ல. அக்குற்றச்சாட்டு நியாயம் என்று ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொள்ளுவோம். அதனுடைய அடுத்த கட்டம் என்ன? தென்கிழக்கு அலகைக் கைவிடுவதா? அவ்வாறானால் திரும்பவும் வடக்கையும் கிழக்கையும் நிபந்தனையற்ற விதத்தில் மீளவும் இணைத்தல். அதனுடைய அடுத்த படி வரதராஜப்பெருமாளுடைய ஆட்சி. அதனுடைய அடுத்த படி திரும்பவும் புலிகள்.

எங்களை விமர்சிப்பவர்கள் இந்த அடுத்த படிகளைப் பற்றி யோசிப்பதில்லை. சரி, இவர்கள் சொல்கிறார்கள் முஸ்லிம் கொங்கிரஸ் தென்கிழக்கு அலகை விட வேண்டும் என்று. சரி விட்டு விடுவோம். பிறகு என்ன? உண்மையில் எங்களை விமர்சிப்பவர்கள் முஸ்லிம் கொங்கிரஸ் ஆட்களல்ல. இதைத்தான் நீங்கள் பார்க்க வேண்டும். எங்களை விமர்சிப்பவர்கள் சிங்களப் பேரினவாதிகளின் கூஜா தூக்கிகள். இந்தக் கூஜா தூக்கிகள் இறுதியாக வடக்கிலிருந்து கிழக்கைப் பிரி என்று சொல்லப் போகிறார்கள். வடகிழக்கை இணை என்று ஒரு போதும் இவர்கள் சொல்லப் போவதில்லை.

நாங்கள் அவர்களிடம் கேட்பதெல்லாம் தென்கிழக்கு அலகு கூடாது என்று சொல்பவர்கள் மாற்று வழியைச் சொல்லி விட்டுக் கூடாதென்று சொல்ல வேண்டும் என்று தான். மாற்று வழியைச் சொல்லாமல் கூடாதென்பவர்கள் பேசக் கூடாது. அவர்கள் நயவஞ்சகர்கள்.

**முஸ்லிம் கொங்கிரஸ் குர்ஆனையும் ஹதீஸையும் அடிப்படையாகக் கொண்ட கட்சி என்று தன்னைச் சொல்லிக் கொண்டாலும் அது அவற்றைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்வதற்குக் காரணம் முஸ்லிம் வாக்கு வங்கியைத் தன்னகத்தே வைத்திருப்பதற்கே தவிர வேறொன்றுமில்லை என்று சொல்லப்படுகிற அபிப்பிராயம் பற்றி...**

அப்படிச் சொல்பவர்கள் உதாரணங்களைக் காட்டி இன்ன விடயத்தில் முஸ்லிம் கொங்கிரஸ் குர்ஆன் ஹதீஸைப் பின்பற்றவில்லை என்று சொல்ல வேண்டும். இன்ன விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களை ஏமாற்றி விட்டது என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதற்கு ஒன்றுமேயில்லை.- முதலாவது குர்ஆன் ஹதீஸைப் பற்றிக் கதைப்பவர்கள் எவருக்கும் குர்ஆன் ஹதீஸைப் பற்றி எதுவும் தெரியாது. இரண்டாவது எனக்குப் பெரிதாகக் குர்ஆன் ஹதீஸைப் பற்றித் தெரியும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் சராசரியாக இன்று இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் எந்தவொரு உலமாவுடனும் இருந்து பேசும் அளவுக்கு அதைப்பற்றி எனக்குத் தெரியும். நீதியைப் பற்றிப் பேசுவது குர்ஆன், சமாதானத்தைப் பற்றிப் பேசுவது குர்ஆன், தமிழர்களும் முஸ்லிம்களும் சந்தோசமாக வாழ வேண்டும் என்று கூறுவதும் குர்ஆன். நாங்கள் பேசுவதெல்லாம் குர்ஆன் ஹதீஸ் தான். இவர்கள் எதிர்பார்க்கிறார்களா நாங்கள் தமிழர்களைப் போய் வெட்டு குத்து என்று சொல்ல வேண்டும் என்று. அல்லது ஜிகாத் பிரகடனம் செய்ய வேண்டும் என்று. ஒன்றைத் தெளிவு படுத்த வேண்டும். முஸ்லிம் கொங்கிரஸுக்கு என்று ஒரு தனியான மார்க்கம் இல்லை. அதாவது முஸ்லிம்களுக்கு மத்தியில் குர்ஆனைப் புரிந்து கொண்டதில் வித்தியாசமானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் முஸ்லிம்கள். பெருமானார் ஸல்லல்லாஹு முஹம்மது நபி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள் முஸ்லிம்களில் 73 கூட்டம் இருக்கிறது என்று. முஸ்லிம் கொங்கிரஸ் என்பது இந்த எல்லாவிதமான கூட்டங்களையும் உள்ளடக்கிய பெரிய வட்டம். இதனுள் பலவிதமான இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். தப்லீக் ஜமாஅத், ஜமா அதே இஸ்லாம்,




தௌஹித் ஜமாஅத், சுன்னத்துல் ஜமாஅத், ஜமாஅத்துல் முஸ்லிமின் இப்படிப்பல அமைப்புகள். நான் இவர்கள் எல்லா வகையானவர்களின் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறேன். முஸ்லிம் கொங்கிரஸின் தலைவர் என்ற வகையில் என்னுடைய நோக்கம் மார்க்க ரீதியாகப் பிரிந்துள்ள முஸ்லிம்கள் அரசியல் ரீதியாவும் பிரிந்தால் முஸ்லிம்கள் என்ற அடையாளம் இல்லாதுபோய் விடும். ஆகவே மார்க்க ரீதியாகப் பிரிந்து நிற்கும் முஸ்லிம்களை அரசியல் ரீதியாக ஒன்றிணைக்கும் பணியே என்னுடைய பணியே ஒழிய மேலும் பிரிப்பது அல்ல.

எங்களை விமர்சிப்பவர்கள் விடும் இன்னொரு தவறு குர்ஆன் முஸ்லிம் மக்களுக்கு மட்டும் உரியது என்று நினைக்கிறார்கள். அல்லாஹ்வும் முஸ்லிம் மக்களுக்கு மட்டும் உரியவர் என்று நினைக்கிறார்கள். எங்களுடைய நிலைப்பாடு அதுவல்ல. குர்ஆன் உலகில் உள்ள அனைவருக்கும் பொதுவானது. பெருமானார் மனித வர்க்கம் அனைத்திற்கும் பொதுவானவர். நாங்கள் வெறொரு தளத்திலிருந்து பேசும் போது இருதயத்தையும் அறிவையும் திரையிட்டு மூடிக் கொண்டிருப்பவர்கள் பற்றி நாம் அலட்டிக் கொள்ள என்னவிருக்கிறது?

**நீங்கள் கட்டியெழுப்பிய தமிழ் முஸ்லிம் ஐக்கியம் தொடர்ந்து வரப்பெற வேண்டுமானால் அது எந்த அடிப்படையில் சாத்தியம் என்று நினைக்கிறீர்கள் ?**

இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் தமிழ்முஸ்லிம் ஐக்கியத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இனப்பிரச்சினை தீர்ந்தால் தான் தமிழர்களும் முஸ்லிம்களும் சந்தோசமாக வாழுவார்கள் என்று அன்று நினைத்தோமே அந்த நிலை இப்போது இல்லை. இனப்பிரச்சினை இன்னமும் நூறு வருடங்களுக்கு நீடித்தாலும் தமிழர்களும் முஸ்லிம்களும் சந்தோசமாக இருப்பார்கள் என்பதே எனது நிலைப்பாடு. தயவு செய்து இனப்பிரச்சினைத் தீர்வையும் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தையும் ஒன்றுடன் ஒன்று போட்டுக் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை. விடுதலைப் புலிகளுடைய ஒத்துழைப்பு மட்டும் இருக்குமானால் வடகிழக்கில் அமைதி நிலவுவது சாத்தியம். முஸ்லிம்களுக்கான ஆட்சி அலகும் உரிமைகளும் இப்போதுள்ள அமைதியை மேலும் பலப்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

**வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் பற்றி அவர்களுடைய மீள் குடியேற்றத்தின் சாத்தியம் பற்றி என்ன சொல்கிறீர்கள் ?**

உண்மையில் அவர்கள் வடக்கிலிருந்து மட்டும் முஸ்லிம்களை வெளியேற்ற நினைக்கவில்லை. கிழக்கிலிருந்தும் வெளியேற்ற நினைத்தார்கள். வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுடைய நிலைமை கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுடையதை விட வித்தியாசமானது. உதாரணமாக யாழ்ப்பாணம் சோனக தெருவிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள். 24 மணித்தியாலத்தில் வெளியேற்றப்பட்ட இவர்களுடைய ஒரு வீடாவது பாதிக்கப்படவில்லை. ஒரு முஸ்லிம் வீட்டுக்காவது நெருப்பு வைக்கப்படவில்லை. அத்தனை வீடுகளும் அப்படியே இருக்கிறது. கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுடைய வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன. என்னுடைய வீடு உட்பட. நான் தான் அங்கிருந்து முதன் முதலில் வெளியேற்றப்பட்டேன். நான் திரும்பி அங்கு போன போது என்னுடைய வீட்டுச் சுவர்கள் மாத்திரம் தான் அங்கிருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுடைய வீடுகள் இப்போது வெற்று வீடுகளாக இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் தமிழ் மக்களைக் குடியேற்றியுள்ளார்கள் விடுதலைப் புலிகள். ஆக, இந்த முஸ்லிம்கள் திரும்பிப் போனால் எங்கிருப்பது?

விடுதலைப் புலிகள் இரண்டு தவறுகளைச் செய்திருக்கிறார்கள்: ஒன்று காரணமில்லாமல் முஸ்லிம்களை வெளியேற்றியது. மற்றையது: அவர்களுடைய வீடுகளில் வேறு ஆட்களைக் குடியேற்றியது. முஸ்லிம் கொங்கிரஸின் நிலைப்பாடு இவர்கள் மீண்டும் தமது சொந்த மண்ணுக்குப் போக வேண்டும் என்பது தான். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் ஒரு அறிக்கை விட முடியுமானால் அதாவது உங்களுக்குப் போதிய பாதுகாப்பு உள்ளது நீங்கள் வரலாம் என்று - அவர்கள் போகலாம். ஏன் நான் இதை வலியுறுத்துகிறேன் என்றால் கிட்டு இருந்த காலத்தில் விடுதலைப்புலிகளுடன் முஸ்லிம் ஐக்கிய முன்னணி ஒரு ஒப்பந்தம் செய்திருந்தது. ஏ.சி.எஸ்.ஹமீது புலிகளுடன் பேசிய போது அந்த ஒப்பந்தத்தைப் பற்றிக் கதைக்க அந்த ஒப்பந்தத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் சொல்லி விட்டார்கள். அன்ரன் பாலசிங்கம் சொல்வதோ திலகர் சொல்வதோ விடுதலைப் புலிகளுடைய கருத்து அல்ல. ஆகவே பிரபாகரன் சொல்ல வேண்டும் முஸ்லிம் மக்களுக்குப் பிரச்சினை இல்லை. அவர்கள் வந்து குடியேறலாம் என்று. அவர்கள் போய்க் குடியேறுவார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# எண்பது தொண்ணூறுகளில் தமிழ் நாடக இலக்கியம்

– வெங்கட் சாமிநாதன்



*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

## 5

சம்பந்த முதலியாரின் 1891லிருந்து தொடர்ந்த நாடக ஈடுபாடும், அவர் மூலம் பார்ஸி நாடக முறைகளின் பாதிப்பும் சேர்ந்து நாடக நிகழ்வுகள் தொடரக் காரணமாயின. சங்கரதாஸ் ஸ்வாமிகள் என்றும், டி.கே.எஸ். என்றும், என்னென்னவோ சபாக்கள், பால கான சபாக்கள் என்றும் தொடர்ந்து வந்துள்ளன சினிமா தமிழ் நாட்டில் காலடி எடுத்து வைக்கும் வரை. ஆனாலும் இவை தந்த நாடக நிகழ்வுகள், நாடகாசிரியர்களிடமிருந்து நாடக இலக்கியம் என்று ஏதும் பிறக்கவில்லை. இந்நாடக இயக்கம், அன்று நடந்த சுதந்திரப் போராட்டத்தால் தாக்கம் பெற்றது. உற்சாகத்தோடு, பலத்த இழப்புகளோடு அப்போராட்டத்தில் பங்குபெற்றது. பின் திராவிட இயக்கத்தினாலும் பாதிப்புப் பெற்றது. திராவிட இயக்கமும், மிகப் பெரும் அளவில் பிரபல்யம் பெறவும் வலுப்பெறவும் இது உதவியது. இயக்கமும் நாடகத்துறையும் ஒன்றுக்கொன்று உதவின. அதெல்லாம் சரிதான். ஆனால், இவற்றிலிருந்தும் ஏதும் நாடக இலக்கியமோ, சீரிய நாடகாசிரியனோ பிறக்கவில்லை. மேடைப்பேச்சு, கோஷ அட்டை, ஊர்வல கோஷங்கள் போன்று தான் நாடகமேடை இரண்டு இயக்கங்களுக்கும் பயன்பட்டது. நாடக இலக்கியம் பிறக்கவில்லை.

பின்னர் அறுபதுகளில் தி. ஜானகிராமன், பி.எஸ்.ராமையா, கு. அழகிரிசாமி போன்ற திறன்வாய்ந்த எழுத்தாளர்களைக் கொண்டு நாடகம் எழுதுவித்து, நாடகத்தின் கலைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று சீரியஸாக சிந்திக்கத் தலைப்பட்ட சகஸ்ரநாமம் போன்றோர் முயற்சித்ததும் கூட எப் பலனையும் தரவில்லை. இவர்கள் பெரிய எழுத்தாளர்கள் தாம். நாடகங்கள் எழுதினார்கள் தாம். ஆனால், அவை நாடக இலக்கியமாகவில்லை. சினிமாவின் செல்வாக்கு அசுரத்தனமாகப் பரவுகிறது.

இப்போது சோ காட்சிக்கு வருகிறார். அவருக்கு தான் ஏதும் பெரிய நாடகாசிரியர் என்றோ, தன் மேடை இயங்கங்களைப்பற்றி உன்னத அபிப்பிராயங்கள் ஏதுமோ கிடையாது. ஆனால், அவர் தனது அரசியல், கேலிகளை, சமுதாய மாற்றங்களைப் பற்றிய கேலிகளை நாடகம் என மேடை ஏற்றிய போது தாம் சீரியஸ் நாடகம் போடுவதாக நினைத்துக் கொண்டிருந்தவர்கள் அவ்வளவு பேரும் தம் கடையைக் கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்காளானார்கள். அவருடைய கேலிகள் ஆட்சியில் அமர்ந்திருக்கும் கட்சிகளுக்கு எரிச்சலாகவும், எதிர்க்கட்சிக்கு ஆனந்தக் கூத்தாட்டமாகவும் இருக்கும்.ஆனால், சோ கட்சி சார்ந்தவர் இல்லை. அரசுக்கும், பெரும் சக்திகளுக்கும், அதிகாரத்திற்கும் கை கட்டி நிற்பவரல்ல. யார் தயவும் வேண்டி நிற்பவரும் இல்லை. முதலும் முடிவுமாக தனித்து நின்று, சுற்றி நிகழும் அரசியல், சமூக நிகழ்ச்சிகளைத் தன் கண்டனங்களைக் கேலியாக வெளியிடுபவர். கட்சி அதிகாரம் அரசு மாறும் போது, ஒரு முறை அவர் கேலியைக் கண்டு ஆனந்தம் கொண்டவர்களுக்கு அக்கேலி இப்போது தம் மீது திரும்பும்போது எரிச்சல்படுவது இயல்பு. நாடக மேடை என்று சோ கண்டது நாடக மேடையின் உதாரணத்திற்கல்ல. அது தம் கேலிகளை பரப்புவதற்கு ஒரு கருவி மாத்திரமே. எந்த ஊதிப் பெருத்த தலையையும், கிரீடம் வைத்த மண்ணாந்தையையும் அவர் மதித்ததில்லை. இம்மாதிரியான மனத்திடம், தைரியம் எஸ்.வி.சேகர் என்பவருக்கும் இருக்கிறது. ஆனால், அவர் சோவைப் போல அரசியல், சமூக கருத்தாளர் இல்லை. எந்த அரசியல், சமூகத் தலையையும் கிண்டல் செய்யும் தைரியம் மாத்திரமே உண்டு. மற்ற கலாசார, அரசியல், இலக்கியப் பெருந்தலைகள் வாய் திறக்கப் பயந்து செத்துக் கொண்டிருந்த 80கள், 90களில் சோவும், எஸ். வி. சேகரும் மாத்திரமே துணிந்து கேலி செய்தவர்கள். எஸ்.வி. சேகர் சாக்கியார் கூத்துவில் வரும் சாக்கியார் மரபில் வருபவர். தன்னைக் கேலிப் பொருளாக்கிக் கொண்டு, தன் எதிரில் வீற்றிருக்கும் ராஜ குடும்பத்தையே கேலி செய்யும் மரபு அது. ஆனால், சோவைப் போலவே எஸ்.வி. சேகரும் நாடக உலகைச் சேர்ந்தவர் இல்லை. அவர் செய்வதெல்லாம் நாட்கமும் இல்லை. இவற்றிலிருந்து நாடக இலக்கியம் தோன்றும் வழி ஏதும் இல்லை.

## 6

தமிழ் சினிமாவைப் போல், தமிழ் வணிகப் பத்திரிகைகளும், மொத்த தமிழ் ஜன சமூகத்தையும் பீடித்துள்ள வியாதி ப்ளேக், காலரா போல் இவை ஜனக்கூட்டத்தின் அதம பொதுவான ஒரு ரசனைக்கும், புத்திக்கும் தீனிபோடுவதையே தம் ஜீவனமாகக் கொண்டவை. புத்திபூர்வமானது, சுரணை வேண்டுவது எதையும் இவை தொடமாட்டா. அவை முளை விடுவதையும் அனுமதிக்கமாட்டா. இதற்கு எதிர்வினையாகத் தான் அறுபதுகளில் சிறு பத்திரிகைகள் தோன்றின. எழுத்தாளர்களுக்கு சுதந்திரமாக எழுத ஒரு மேடை, சிறிய மேடை தந்தன. இது ஒரு இலக்கியமாக பின் வருடங்களில் பரவி இப்போது தேய்ந்து மாய்ந்தும் விட்ட இயக்கம் அது. அது மாய்ந்த கதை வேண்டாம். ஆனால், இங்கு இது குறிப்பிடப்பட்ட காரணம் முதன் முறையாக நாடக இலக்கியம் தோன்ற சிறு பத்திரிகை வழிவகுத்தது. இதன் பின் விளைவாக நாடக எழுத்து தோன்றவும், சிறு பத்திரிகையின் விழிப்பில் ஏற்பட்ட நாடகத்துறை பற்றிய விழிப்பும் 70களில் நாடக இலக்கியம், ஏதோ ஒரு சிறிய அளவில் தோன்றவும் வழி பிறந்தது.

ஒரு நல்ல சிறு கதை எழுத்தாளராக இருந்த ந. முத்துசாமி சின்னச் சின்ன நாடகங்கள் எழுத ஆரம்பித்தார். அது படிக்கப்பட்டது. டெல்லியில் தக்ஷண் பாரத நாடக சபை என்ற நாடகக்குழு, சென்னையில் வெற்றிகரமாக நடக்கும் கேலிக்கூத்தான நாடகங்களை டில்லியிலும், நடத்தி வந்த குழு. டில்லியில் இப்ராஹீம் அலிகாஷ் என்ற நாடகக் கலைஞரின் செயல்பாட்டில் மாறிவரும் இந்திய நாடகச் சூழலைக் கவனித்து வந்த எஸ்.கே.எஸ். மணி என்பவர் அக்குழுவிற்காக நாடகம் எழுதித் தருமாறு டெல்லியில் அப்போது இருந்த இந்திரா பார்த்த சாரதியைக் கேட்டுக் கொண்டார். "நாடகம் பார்க்கிறதென்றால் இருட்டில் அல்லவா இரண்டு மூன்று மணி நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும்? அதனால் நான் நாடகமே பார்ப்பதில்லை" என்று தன் கொள்கை விளக்கம் தந்த இந்திரா பார்த்த சாரதி நாடகம் எழுதத் தொடங்கினார். ஆக, தக்ஷண் பாரத நாடகசபை தமிழுக்கு ஒரு நாடகாசிரியனைத் தந்தது. அது 1972 - 73ல். அவர் தந்தது ஒரு முழு நீள நாடகம். பின்னர் தொடர்ந்து முழு நீள நாடகங்கள் பல எழுதினார். மேடையேற்ற ஒருவர் காத்திருக்க நாடகங்களும் பிறந்தன.

முத்துசாமியின் சிறு நாடகங்கள் நடித்துப் பார்க்கக் காத்திருக்க வேண்டியிருந்தது. அது சற்று வேறுபட்ட நடிப்பு முறையை, இயக்க முறையை வேண்டி நின்றது. காந்தி கிராமத்தில் எழுபதுகளின் பின் பாதிகளில் ஒரு நாடகப் பட்டறை நடந்தது. அதை தேசிய நாடகப் பள்ளியில் நாடகம் பயின்ற செ. ராமானுஜம் நடத்தி வைத்தார். முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்' நாடகம் முதன் முறையாக காந்தி கிராமத்திலும் அதன் சுற்றுக் கிராமங்களிலும் மேடையேறியது. நன்றி ராமானுஜத்திற்கு. இந்நாடகங்கள் மேடையேறின தான். நடிக்கப்பட்டன தான். ஆனால், இவை எல்லாம் ஒரு நாள் கூத்துக்கள். ஒரு மாலை நேர விநோதங்கள். அதுவும் இலவசமாக அழைக்கப்பட்ட பார்வையாளர்க்கு. இன்னொரு காட்சி, இன்னொரு எப்போதாவது ஒரு நாள் வேறு ஊரில் திரும்பவும் அழைக்கப்பட்ட பார்வையாளருக்கு. பம்பாயில் ஞான ராஜசேகரன் சில நாடகங்கள் எழுதினார். எழுதிய பின், நாடக உற்சாகம் கொண்ட இளைஞர்களை ஒன்று சேர்த்து ஒரு குழுவாக்கி அவர் நாடகங்களை மேடையேற்ற முடியும் எனக் கண்டார். மகாராஷ்டிரத்தின் நாடகச் சூழலின் தீவிரமும் ஒத்திசைவாக எதிர்வினையைத் தந்திருக்கக் கூடும். அவர் நாடகங்களை அவரே அங்கு இயக்கவும் செய்தார். ஆக, நாடக ஆசிரியர் தோன்றுவதோ, நாடகம் எழுதப்படுவதோ, அதன் ஒரு சமீப கால மேடையேற்றமாவது சாத்தியமாக இருப்பதனைப் பொறுத்துள்ளது. சிறு நாடகமானால் அதைப் பிரசுரிக்கும் சிறு பத்திரிகை ஒன்றும் இருக்க வேண்டும். இம்மாதிரியான நாடகங்கள், நாடக எழுத்துக்கள், மேடையேற்றங்கள் சிறு பத்திரிகைச் சூழலிலே தான் கவனிக்கப்பட்டன. பெரும் பிரவாஜ்மான வணிக பிரபல பத்திரிகைகள் இவற்றை லட்சியம் செய்ததில்லை. இதை நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில், இதன் மற்றொரு முனை (கத்திக்கு இரு முனை உண்டல்லவா) வேறு விதமான பலனைத் தந்தது. அது பற்றி பின்னர்.

## 7

தமிழ் நாட்டிற்கே உரிய விளைச்சலான சபாக்கள் ஆதரவில் அதன் மற்ற (இசை, நாட்டியம் இத்யாதி) ஈடுபாடுகளுடன் ஒட்டி வைத்த வாலாக, அதன் நிரந்தர அங்கத்தினரின் வாரக் கடைசி குதூகலத்திற்கு என்று பராமரிக்கப்பட்ட நாடக ஈடுபாடு ஒன்று இருந்தது. சபாக்கள் அமெச்சூர் நாடக சபைகளுடன் உறவு கொண்டு அவற்றின் நாடகங்களைத் தம் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளும் கலைக்கு கலை ஆயிற்று. வருமானத்திற்கு வருமானம் ஆயிற்று. (சபாக்கள், அமெச்சூர் நாடகசபை நடிகர்கள் எல்லோருக்கும் தான்) வாரக் கடைசி கொண்டாட்டத்திற்கு கொண்டாட்டமும் ஆயிற்று. இப்படி எல்லோருக்கும் சுபிட்சம் அளிக்கும் ஒரு ஈடுபாடு வளர்வதற்குக் கேட்பானேன். ஆனால், இவை எல்லாம் நாடகம் என்பதற்கு வெகு தூரம். உறவு சற்றும் இல்லாதவை. இத்தகைய சூழலில் கோமல் சுவாமிநாதன் ஒரு வித்தியாசமான முயற்சியைக் கொண்டு வர முயற்சித்தார். வித்தியாசமான என்றால், அவரது இடதுசாரிக் கொள்கைச் சார்புகளுக்கு ஏற்ப என்று பொருள். அவரது தண்ணீர்! தண்ணீர்! நாடகம், நாடகப் பிரக்ஞை உள்ளவனுக்கு திருப்தி தரா விட்டாலும், அவர் நாடகம் என்ற சூழலில் பல திசைகளில் வேறுபட்டது. அதுவே மிகவும் அதிகம் பேசப்பட்டது. வருவாயைப் பொறுத்தவரையிலும் கூட பிரபல்யத்திலும் கூட வெற்றிகரமான முயற்சி. சபா ஒன்று அதை ஏற்றதே என்பதும் ஆச்சரிய நிகழ்வு தான். அதன் பிரச்சினை தமிழ் நாட்டின் உடனடித் தேவை என்றும், நிரந்தரமாயுள்ள பிரச்சினை. அதுபோக தமிழ் நாடகம் என்ற சூழலில் பார்த்தால் பல படிகள் முன்னேற்றம் காட்டும் மேடையேற்றமும் தான். ஆனால், தமிழ் நாடக உலகில் மிகச் சிறந்த ஒன்று. நாடகம் என்று கலைத்தரமாகப் பார்த்தால் போதுமானதாக இருப்பதில்லை. (The best is just not good enough) ஆனால், கோமல் சுவாமிநாதன். பகட்டு அற்றவர். தன்னைப் பற்றிய ஊதிய பிரமைகள் ஏதும் அவருக்குக் கிடையாது. தமிழ் நாட்டில் எத்துறையிலும் உள்ள தலைகள் எதற்கும் இல்லாத குணம் இது. எப்போதும் கற்க நிறைய உள்ளதை அறிந்தவர். அவர் தம் குறைகள் எடுத்துக் காட்டப்பட்டால் அதை வரவேற்று ஒப்புக்கொள்பவர். இதுவும் தமிழ் தலைகளிடம் காணப்படாத குணம். அவரது தோழமையை மதித்தே அவரை பத்திரிகாசிரியராக்கி பொருள் நஷ்டப்பட தயாராக இருந்த நிறுவனங்கள் உண்டு. அச்செல்வாக்கைப் பயன்படுத்தி, தமிழ் நாட்டில் ஆண்டுக்கு இரண்டு முறை வெவ்வேறு இடங்களில் நாடக, இலக்கிய விழாக்கள், கருத்தரங்குகள் நடத்தி, எல்லா நாடக முயற்சிகளும், நாட்டில் பல்வேறு பகுதிகளில் எடுத்துச் செல்லப்பட வகைகள் கண்டார். அவருக்குக் கிடைத்த செல்வாக்கை, பொது முயற்சிகளுக்காகப் பயன்படுத்தினார். நிறுவன பலமும், பணபலமும், கல்வித்துறை பலமும் வாய்க்கப் பெற்ற வேறு சிலர் அவற்றை தமக்காக மாத்திரமே பயன்படுத்திக் கொள்ளும் வளமுறை தான் தமிழ் நாடு அறிந்தது. இந்தப் பிரகிருதிகள் கோமல் சுவாமிநாதனை ஏளனமாகப் பேசுவதிலேயே தம் குற்ற மனதுக்கு சமாதானம் கண்டு கொண்டவர்கள். சில வருடங்கள் முன் இந்த நல்ல மனது, ஆடம்பரமற்ற மனது மறைந்து விட்டது. மனதில் கறையில்லாத ஓர் எளிய மனிதன் தன் செல்வாக்கால் எத்தனை பெரிய காரியங்களை ஆற்ற முடியும் என்பதற்கு கோமல் ஓர் உதாரணம். ஊதிப் பெருத்த தலைகள் கோமல் செய்ததில் ஓர் பின்ன அளவு கூட செய்ய முடிந்ததில்லை. தம்மைப் பெருக்கிக் கொண்டதைத் தவிர.

ஒரு எழுத்தாளர் மிகுந்த அறிவு நீட்சண்யமும், திறமையும், விவரஞானமும், கற்பனை வளமும், செழுமையான சொல்லாட்சியும் கொண்டவர். சுஜாதா என்பது அவர் பெயர். ஆனால், தமிழின் துரதிர்ஷ்டம், இவ்வளவு குணங்களையும், திறனையும் அவர் பிரபல்ய மோகத்திற்கும், வியாபார வெற்றிக்கும், வெகுஜன ரசனையின் புகழுக்கும் விரயம் செய்பவர். தமிழனை குதூகலப் படுத்துவதென்றால் என்ன அர்த்தம்? அது அவருக்குத் தெரியும். அதன் லாபங்களும் தெரியும். இதன் காரணமாக அவர் சிறுபத்திரிகைச் சூழலில் மதிக்கப் படாதவர். சென்னையின் ஒரு அமெச்சூர் நாடகக்குழு - அதற்கு பிரபல்ய சுஜாதாவைத் தெரியும். அப்புகழ் தன் நாடகக் குழுவுக்கு என்ன தரக் கூடும் எனத் தெரியும். - அக்குழுவும் சுஜாதா ரசனை கொண்டது. சுஜாதாவை நாடகம் எழுதக் கோரியது. இந்த உறவு இருவருக்கும் லாபகரமாக இருந்தது. அதன் அளவுக்கு அது வியாபார வெற்றியும் தான் என்று சொல்ல வேண்டும். ஆனால், இங்கு சுஜாதா, மக்கள் ரசனைக்கு தமாஷ் பண்ணும், மயிர் சிலிர்க்க வைக்கும் தந்திரோபாயங்களில் ஈடுபடாது தனது கற்பனைக்கும், எழுத்துத் திறனுக்கும் வடிகாலாக அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அவர் நிறைய நாடகங்கள் அக்குழுவிற்காக எழுதினார். அவை கட்டமைப்பில் நன்கு உருவான நாடகங்கள். பார்வையாளனின் கவனத்தை ஈர்த்து அவர் தம் இருக்கையில் அமர்ந்திருக்கச் செய்பவை. திறமையாக கட்டமைக்கப்பட்டவை, கருத்தளவில் விஷேசமானவை. சமூகத்துடன் உறவு கொண்டவை. பின்னர் இது பற்றி மேலும் பேசலாம். ஆனால், இங்கு ஒரு சோகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். சுஜாதா ஒரு வியாபார வெற்றி பெற்ற எழுத்தாளர். அவர் உறவாடிய நாடகக்குழு, சபா பிரதிமை பெற்ற வியாபாரக் குழு. அதன் மேடையேற்றம், நடைமுறை வியாபாரம் சேர்ந்தது. எல்லாம் தான். ஆனால், சுஜாதாவின் சிறப்பான சிறுகதைகள் எப்படி அவரது வெகுஜன பிரபல்யத்தின் அம்பாரத்தில் அழுந்திப் போயினவோ, சிறு பத்திரிகைச் சூழலில் நிழல்தேடும் எந்த வக்கிரப்புத்தியையும் அரவணைக்கும் சிறு பத்திரிகைக்காரர், வணிகச் சூழலில் உலவும் ஓர் சிறந்த திறனை அடையாளம் கண்டு கௌரவிக்கத் தெரியாதவர்கள். அவர்களுக்கு லேபிலும் கூடாரமும் தான் தெரியும். கட்சிக்காரர்களுக்கு கட்சிச்சீட்டும் சீருடையும் கோஷமும் தான் தெரியும் என்பது போல, அவர்கள் சுஜாதாவை நிராகரித்தது போல, அவர் நாடகங்க்ளையும் நிராகரித்தனர்.

*(இன்னும் வரும்)*

நன்றி - நூலகத்திட்டம்






## இரண்டு மறுப்புக்கள்

1. துட்டகைமுனு, திருமலை, ஜூலை 8ல் வெளியான சரிநிகரில், வடக்கு - கிழக்கு மாகாணம் நாவிழந்தோரின் கதை எனும் தலைப்பில் வெளியான விபுலானந்தர் தமிழ் மகா வித்தியாலய ஊழல் எனும் விடயம் சம்பந்தமாக எமது மறுப்பினை தெரிவிக்கிறோம்.

அண்மைக் காலத்தில் இப்பாடசாலை பாரிய அபிவிருத்தி அடைந்து வருகின்றது. கல்வித்துறையில் பொதுப் பரீட்சைகளிலும் பௌதிகவள விருத்திகளிலும், பண்புத்தர விருத்திகளிலும் அபிவிருத்தி அடைந்து வருவதைக் கண்டு பொறுக்க முடியாத துட்டகைமுனு என்பவர் பல்வேறு பெயர்களில் மொட்டைக் கடிதங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகளிலும் எழுதி அதிகாரிகளை அசிங்கப்படுத்துவதைத் தொழிலாகக் கொண்டு இப்பாடசாலைக்கும அதிபருக்கும் இடையூறு செய்ய முனைகின்றார்.

அண்மைக் காலத்தில், வலய, மாகாண மட்ட குழுப் பரிசோதனையில் ஈடுபட்ட அதிகாரிகள் பாடசாலையின் பலவகைப் பண்புத்தர விருத்தியையும் பாராட்டியுள்ளனர். எனவே இவ்வாறான அசிங்கமான பேர்வழிகளால் சிறந்த நிர்வாகத்தைக் குழப்ப முடியாது என்பதைப் பகிரங்கமாகத் தெரியப்படுத்துகிறோம்.

***பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,***

***தி/விபுலானந்தர் த.ம.வி.,***
***திருமலை.***

2. விபுலாநந்தர் தமிழ் மகா வித்தியால்யம் சீர்கேடுகளில் கொடிகட்டிப்பறக்கின்றது என்று தொடங்கி எழுதப்பட்ட விடயங்களை எமது பாடசாலை பூரணமாக எதிர்க்கின்றது. அவ்வாறு சீர்கேடுகள் இல்லை. மாறாக, பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து செல்கின்றது.

ஆகவே மேற்படி பத்திரிகையில் வெளியான எமது பாடசாலை பற்றிய தகவல்கள் அனைத்தும் முற்றிலும் பொய்யானவை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

***அதிபர்,***
***தி/விபுலாநந்தர் த.ம.வி.,***
***திருமலை.***

## ஒடுக்கப்படும் தேசிய...

போது அவை பேரினவாத அரசாங்கங்களை அரசாங்கத்திற்கு வெளியில் நின்றாவது பாதுகாக்க முனையலாம். முரண்பாடுகள் இருந்தால் கூட பேரினவாதத்திற்கு அவை தலைசாய்க்க வேண்டிவரும். இந்நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் கட்சிகளது ஆதரவு அரசுக்கு தேவையில்லாது போகலாம்.

ஆனால் தற்போதுள்ள ஜனாதிபதி அரசாங்க முறைக்குள் ஜனாதிபதி, பாராளுமன்றம் என்ற இரு வழிகளினூடாக ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் பேரங்களைப் பிரயோகிக்க முடியும். பாராளுமன்ற முறையாயின் நிச்சயமில்லாத ஒருவழிப் பாதை மட்டுமே உள்ளது.

இதைவிட ஜனாதிபதி முறை நீக்கத்திற்குப் பிறகு விகிதாசார பிரதிநிதித்துவ முறையையும் நீக்குவதே பேரினவாதிகளின் திட்டமாக உள்ளது. அதுவும் நடக்குமானால் பேரம் பேசும் வழிகள் அறவே இல்லாமல் போகலாம்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் புதிய யாப்பு யோசனைகளுக்குள் பேரத்திற்கான வேறு வழிகள் இல்லையா? இல்லவே இல்லை. அங்கு அரசியல் யாப்புச் சபை போன்ற ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு குஞ்சம் கட்டும் சபைகளே உள்ளன. இவற்றினால் எந்தவிதப் பயன்களும் விளைந்துவிடப் போவதில்லை.

இறுதியாக ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு தமது அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான மாற்று வழிகளை உருவாக்காத வரை இருக்கின்ற சிறிய வழிகளை அடைக்காமல் இருப்பதே நல்லது. அது இத்தேசிய இனங்களை இருக்கின்ற நிலையில் இருந்து கீழே போகாதவாறாவது தடுத்து வைக்க உதவும்.

ஜனாதிபதி முறை தனிநபர்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிரானதாக இருக்கலாம் ஆனால் அதைவிட குழுக்களின் ஜனநாயகம் குறிப்பாக ஒடுக்கப்படும் இனங்களின் ஜனநாயகம் அச்சுறுத்தப்படும் சூழலில் அதற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுவதே நியாயமானது.

# முஸ்லிம் - தமிழ்...

ஆறாம் பக்கத்தொடர்ச்சி

தின் ஜனனத்துக்குக் காரணம் என்று கூறப்படுவதில் எனக்கு நிறையவே ஆட்சேபனை உண்டு.

தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக் காலத்தை, பிட்டும் தேங்காய்ப்பூவுமாக இருந்த காலத்தைப் பற்றி அடிக்கடி பிரலாபிப்போர் ஒரு விடயத்தை மறந்து விடுகின்றார்கள். தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை என்பது அவர்களை ஒரே அரசியல் ஆளுகைக்கு உட்பட்டவர்களாக மட்டும் இருக்கும் வரையில் நன்றாகத்தானிருந்தது. அதாவது தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசிய இனம் என்று வலியுறுத்தும் அவசியம் எழாத மட்டில் ஒற்றுமை பாதிக்கப்படவில்லை. தமிழ் மக்களின் அபிலாஷைகள் ஒன்று திரண்டு (crystallized) அவை தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக மாறிய போது முஸ்லிம்கள் அந்த அடையாளத்துக்குள் தங்களைக் கொண்டுவர மறந்துவிட்டார்கள். மொழியால் ஒன்றுபட்டவர்கள். நாங்கள் சகோதரர்கள் என்று இதுகாறும் வலியுறுத்தி வந்தவர்கள் திடீரென்று - மொழியால் ஒன்று இனத்தால் வேறு என்று குரல் எழுப்பினார்கள்.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட அடையாளப் பிரச்சினையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் - முஸ்லிம்கள் தங்களை ஓர் இனமென்று அடையாளப்படுத்தி - அதனையே அரசியல் சக்தியாகவும் மாற்ற வேண்டிய அவசரமும் ஏற்பட்டு விட்டது.

முஸ்லிம் காங்கிரசின் தோற்றம் அவசியமற்றது என்று தென்னிலங்கை முஸ்லிம்கள் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். முஸ்லிம்கள் பிரதேச ரீதியில் பரந்து வாழ்வதால் இவர்களுடைய அடையாளமானது இலங்கையைப் பொறுத்தளவில் சற்று வித்தியாசமான அணுகுமுறையைத் தேவைப் படுத்தி நிற்கின்றது. தமிழ்த் தேசியவாதத்தின் உச்சக் கட்டம் ஆயுதப்போராட்டம் என்றவாறாக விரிவடைந்த போது முஸ்லிம்கள் தங்கள் அடையாளத்துக்கான அச்சுறுத்தல் நிஜமானதென்ற முடிவுக்கே வந்துவிட்டார்கள். இதன் விளைவாக - தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு எதிரான சக்திகளுடன் தங்களை அடையாளப்படுத்தி எதிர்க்காப்புத் தேட வேண்டிய அவசியங் கூட ஏற்பட்டு விட்டது.

இதுவே மிகவும் சிக்கலான காலகட்டமாக இருந்தது. தமிழ்த் தேசியவாதம் தன்னுள் ஓர் அங்கமாக முஸ்லிம்களையும் இணைத்துச் செல்லலாம் என்ற நினைப்புத் தவறென நிரூபிக்கப்பட்டது. ஆயுதப் போராட்டத்திலீடுபட்டிருந்த தமிழ் குழுக்களுடன் சங்கமித்திருந்த முஸ்லிம் இளைஞர்கள் காலப்போக்கில் தம்மை அப்புறப்படுத்திக் கொண்டனர்.

மதத்தால் வேறுபட்டதால் மட்டுமன்றி இனரீதியிலும் தாங்கள் வேறானவர்கள் என்ற நிலைப்பாட்டை இலங்கை முஸ்லிம்கள் எடுத்தனர். 'தமிழ்ப் பேசும் முஸ்லிம்கள்' என்ற அடையாளத்தை வரித்துக் கொண்டனர். இந்த விடயத்தில் தாங்கள் தென்னிந்திய முஸ்லிம்களை விட வேறானவர்கள் என்ற வாதத்தையும் சிலர் முன்வைத்தனர்.

இலங்கையைப் பொறுத்தளவில் முஸ்லிம்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ள வேண்டியது இன்றைய நிலையில் யதார்த்தமான அணுகுமுறை என்றுதான் கூறவேண்டும். ஆனால், தப்பபிப்பிராயங்கள் எங்கே உருவாகின என்றால் - இதுவரை மொழி ரீதியில், மத ரீதியில் ஏன் பிரதேச ரீதியில் தங்கள் இருப்பை வற்புறுத்தாது இருந்தவர்கள் தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியின் பின்னர் மட்டும் ஏன் அதிகாரம் கோரி நிற்க வேண்டும்? தனிக்கட்சி வேண்டும் என்ற வினாக்களுக்கு விடை தேடும் போதுதான்.

மொழியைப் பொறுத்தளவில் அதனைத் தங்களது அடையாளத்தின் ஓர் அம்சமாக அவர்கள் கருதியிருந்தால் மொழிப் போராட்டத்தின்போது முஸ்லிம்களின் பங்களிப்பு எப்படி இருந்தது என ஆராய வேண்டியதவசியம். இனிப் பிரதேசமும் தங்கள் அடையாளத்தின் ஓர் அம்சமெனக் கருதினார்களாயின் அதற்கான போராட்டமும் அவசியம். இதையுந் தவிர்ந்து மத ரீதியில் மட்டும் தங்களை முதலில் அடையாளப்படுத்தியவர்கள் பின்பு இனரீதியில் அடையாளப்படுத்த எடுத்த முயற்சி தான் அதிக எதிர்ப்புக்களைக் கொண்டு வந்தது. இதுவே பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களுக்குக் காரணமாகலாம்.

ஆனால், ஓர் இனக்குழு அல்லது மதக்குழு தன்னை எங்ஙனம் அடையாளப்படுத்த விரும்புகின்றது என்பது அதனது சொந்த விடயம். ஆனால், இங்கே அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசப்படுவதால் குறிப்பிட்ட குழுவானது எந்த அடையாளத்தை முன்னிலைப்படுத்தித் தனது உரிமையை வலியுறுத்தப் போகின்றது என்பதும் கவனத்துக்குரியதே.

### ஏன் வேண்டும் அதிகாரம்

'தனக்கு தானே எஜமானாக இருக்க வேண்டும்' என்பதுதான் எல்லோரதும் விருப்பாகும். இந்த விருப்பின் வெளிப்பாட்டு நிலை ஒன்றுதான் "எங்களை நாங்களே ஆள வேண்டும்' என்ற விருப்பு ஏற்படுகின்றதென்றால் அதன் மூலம் அடைய நினைக்கின்ற பலாபலன்கள் என்ன என்பதையும் எடைபோட்டுப் பார்க்க வேண்டும். எம்மை நாமே ஆள்வதற்கும் எங்களை மற்றவர்கள் ஆள்வதற்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாக நாம் உணருகின்றோமா? அப்படி உணர்வதற்கான காரணங்கள் நியாயமானவையா? அந்த வித்தியாசம் ஏற்கெனவே . சர்வதேச ரீதியில் சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ள உரிமைகளை மறுப்பதால் ஏற்படுவதாக இருந்தால் மட்டுமே கோரிக்கை நியாயமாகின்றது.

அதாவது 'மக்கள் குழு' என்றளவில் அது தன்னைத்தானே ஆளவேண்டும் அல்லது ஆள்வதற்குத் தகுதியுடையது என்பது சட்டப்படி நிலைநாட்டப்படுவதற்காக அது போராட வேண்டியிருக்கும். எந்த அரசுமே தனது அதிகாரத்தைத் தானாகவே முன்வந்து பரவலாக்கி ஏனைய குழுக்களை அரவணைத்துச் செல்ல முன்வருவதில்லை. எனவே அவை போராட்டம் நடாத்த வேண்டியுள்ளது.

இந்தக் கோரிக்கை மறுக்கப்படுமிடத்து ஆயுதப்போராட்டம் நடாத்தப்படுதல் நியாயமானதென ஐ.நா. மன்றம் கூடத் தீர்மானித்துள்ளது. இதன் பின்னர்தான் ஆபிரிக்க நாடுகள் பலவும் சுதந்திரப் போராட்டத்தை நடாத்தி வெற்றியீட்டின. ஆக, சிறுபான்மை தேசியமாகி சட்டப்படி மக்கள் என்ற வரைவிலக்கணத்துக்குள் வந்து பின்னர் ஐ.நா. கூறியபடி சுயநிர்ணயப் பிரயோகத்துக்கு கோரிக்கை விடுகின்றன.

### தீர்வுக்கு வழியென்ன?

ஆக, எந்த ஒரு மக்கள் குழுவும் தான் மற்றவர்களால் ஆளப்படுவதாக நினைக்காமல் இருப்பது தான் குழுக்களும் குழுக்களுக்குள் குழுக்களும் உருவாகாமல் போகும். ஆனால், துரதிருஷ்டவசமாக இலங்கையில் 1948க்குப் பின்னர் அத்தகைய ஒரு நிலை தோன்றாமல் போய்விட்டது. தனிச்சிங்களச் சட்டம், அத்துமீறிய அரச குடியேற்றங்கள், கல்வியில் தரப்படுத்தல், வேலையில் புறக்கணிப்பு என்பதால் தமிழ் மக்கள், தங்களைத் தாங்களே ஆள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குப் பெரும்பான்மையினரான சிங்கள மக்களது ஆட்சியாளரினால் தள்ளப்பட்டனர். இந்த வகையில் தமிழ்த் தேசியவாதத்தின் பிறப்பும் இருப்பதும் மிக மிக நியாயமானதே.

1980களில் தமிழ்த் தேசியவாதம் முனைப்புப் பெற்றபோது அதனுடன் ஆரம்பத்தில் சேர்ந்து அடையாளங்காண விரும்பிய முஸ்லிம்கள் (த.வி.கூட்டணி வேட்பாளராக [illegible] முன்வந்த எம்.எச்.எம். [illegible] அவர்கள்) பின்னர் தங்களை வேறாக அடையாளங் காட்டத் தலைப்பட்டனர். ஆனால், இங்கே ஒரு வித்தியாசத்தை அவதானிக்க வேண்டும். தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றம் - ஆட்சியதிகாரம் பகிரப்படாமையினால் ஏற்பட்ட அந்நிய உணர்வினால் வந்தது. ஆனால், முஸ்லிம் தேசியவாதம் - கிழக்கு மாகாணத்தில் - ஒரு பிரதேசத்துக்குட்பட்ட அதிகாரத்தைத் தக்க வைப்பதில் தமிழ்த் தேசியவாதத்தை தனக்குப் போட்டியாக நினைத்து உருவாகியது. விவாதத்துக்குரியது யாதெனில், தமிழ்த் தேசியவாதத்தின் கைகளில் ஆட்சியதிகாரம் ஒரு போதுமே எட்டியதில்லை. அப்படியிருக்கத்தக்கதாக, முஸ்லிம்கள் தங்களுக்குத் தமிழ்த் தேசியம் பாரபட்சம் இழைக்கும் என்ற முடிவுக்கு வந்தமைக்கான அடிப்படைகள் என்ன என்பது தான்.

"போராளிகளின் குழுக்களின் கரங்களில் ஆயுதம் வந்து சேர்ந்ததும் அவர்கள் ஆயுதம் ஏற்காதவர்கள் மீது அதிகாரம் செலுத்தத் தொடங்கி விட்டார்கள். எனவே இவர்களிடம் ஆட்சியதிகாரம் வந்துவிட்டால் - எங்களை எப்படி நடாத்துவார்கள்" என்ற வினாவை முஸ்லிம்கள் எழுப்பியிருக்கிறார்கள். ஆனால், ஜனநாயகம், மனித உரிமைகள், குடியியற் சமூகம் என்பவற்றில் நம்பிக்கை உள்ளவர்கள் - ஆயுதப்போராட்டக் காலத்தில் நிலவும் நிலைமைகளை அப்படியே அமைதிச் சூழலில் ஒரு சமூகத்துக்கு ஏற்புடையதாக்கலாம் என்று நம்பமாட்டார்கள்.

'தமிழ் மக்களுக்கு என்று தனி அதிகார அலகு இருந்தால் முஸ்லிம்களுக்கும் தனியாக ஒன்று கேட்பேன்' என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறியுள்ளார். இது சம்பவம் நடக்க முன்னரே சந்தேகங் கொள்வது போலாகின்றது. 1948க்குப் பின்னர் தமிழ் மக்களை சிங்கள அரசாங்கம் நடத்திய அதே விதத்தில் தமிழ் மக்கள் கையில் அதிகாரம் வந்தால் அவர்கள் முஸ்லிம்களை நடாத்துவார்கள் என்பது வெறும் அரசியற் கணிப்பீடேயாகும். ஏனெனில், சிங்கள அரசாங்கத்துக்கு இருந்த அரசியலைப்பு வழி வசதிகளோடு (Constitutional means) தமிழ் மக்கள் கையில் அதிகாரம் வருமா? இதற்குச் சாத்திய மேயில்லை. ஒழுங்கமைக்கப்பட்ட அரசியலைப்புவழித் தீர்வு ஒன்றுக்குள் முஸ்லிம்கள் தாங்கள் அந்நியப்படுத்தப்படுவர் என்று நினைப்பது சற்று அதீதமானதுதான்.

ஆயுதப் போராட்டத்தின்போது எழுகின்ற தவிர்க்க முடியாத பரிமாணங்களை வைத்து - அது அதிகார ரீதியில் இன்னொரு பிரிவை ஒதுக்குகின்ற முயற்சியின் அத்திவாரமே என்று கூறப்படுவதை ஏற்பது சிரமமாகின்றது. எனவே வரலாற்று ரீதியில் மொழி, சமூக, பிரதேசப் பண்பாட்டு ரீதியில் தமிழ் - முஸ்லிம் உறவு நன்கு வேரூன்றியிருந்தாலும் அரசியல் உறவு என்று வருகின்றபோது பிரிந்துவிடத்தக்க பலவீனமான உறவாக அது இருக்குமாயின் - அடிப்படையில் எங்கோ ஒரு தவறு இருக்கத்தான் செய்கிறது. அரசியல்வழி நல்லுறவைக் கட்டி வளர்ப்பதற்கான காலம் இன்னமுங் கடந்திடவில்லை என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka

சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

- பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

# அரசின் ஏமாற்று வித்தையும் ஏமாறும் தமிழ் மக்களும்

அரசாங்கம் தீர்வுப் பொதியை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்போவதாக அறிவித்தாலும் அறிவித்தது.

உடனே கிளம்பிவிட்டன எதிர்ப்புக்கள்.

முதலில் இனவாத சக்திகளிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பின. நாட்டைப் பிளவு படுத்துவதற்கான அடிப்படைகளை இந்தத் தீர்வுப் பொதி கொண்டிருக்கிறது என்ற அவை கூறுகின்றன.

ஐ.தே.க. ஆதரவு இல்லாமல் பாராளுமன்றத்தில் இந்த தீர்வுப் பொதி மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கை பெறமுடியாது என்பதால் தொடர்ச்சியாக அதன் ஆதரவைப் பெறும் முயற்சிகள் நடந்தன.

ஜனாதிபதி அம்மையாரும் அவரது அரசாங்கமும் தொடர்ச்சியாக ஐ.தே.கவை தீவிரமாக விமர்சித்தபடியே அதன் ஆதரவைச் கோரி வந்ததை அமைச்சர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

ஐ.தே.க ஆதரவு தரக்கூடாது என்ற எதிர்பார்ப்புடனேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப் பட்டதோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு தீவிரமான விமர்சனங்கள் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டன. அவருக்கு எதிரான பட்டலந்தை விசாரணைகள் கூட பலத்த பிரச்சாரங்களுடன் மேற்கொள்ளப்பட்டன.

புலிகளுடன் பேசுவதற்கான உடன்பாடொன்றிற்கு சியாம் பொக்ஸ் உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பேரில் ஐ.தே.க.வும் பொ.ஐ.மு. வும் வந்திருந்தன.

ஆனாலும் விரைவிலேயே அரசாங்கம் அந்த உடன்பாட்டைக் கைவிட்டுவிட்டு தான் புலிகளுடன் பேசப் போவதில்லை என அறிவித்தது.

அதன் பிறகும், ஐ.தே.க.ஆதரவு தர மறுக்கிறது. நீங்கள் பேசிப் பாருங்கள் என்று த.வி.கூ.வை தூது விட்டது. ஐ.தே.க அரசாங்கத்துடன் உடன்படாமல் இருப்பதற்கான எல்லாச் செயல்களையும் செய்தபடியே அதனை ஆதரவு தரும்படி கோரியது.

இப்போது அதுவும் அரசாங்கம் எதிர்த்தே பாராளுமன்றத்தில் வாக்களிப்போம் என அறிவித்து விட்டது அண்மையில் இந்த அறிவிப்பை எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அறிவித்து விட்டார்.

இதைத்தவிர அரசாங்கத்தின் அமைச்சரவையைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட அமைச்சர்களும் இந்தத் தீர்வை எதிர்க்கப் போவதாக தெரிவிப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

எப்படியோ அரசாங்கம் எதிர்பார்த்தபடி யாரும் ஆதரிக்காத ஒரு தீர்வுப் பொதியாக அதை ஆக்குவதில் அரசாங்கம் வெற்றி பெற்றுவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

தோல்வி நிச்சயம் என்பதை தெரிந்து கொண்டு அதை முன்வைக்கப் போவதாக இப்போது அறிவித்திருக்கும் பாராளுமன்றத்தில் சமர்பிப்போம் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு, அம்முயற்சியைக் கைவிடுவதற்கான ஒரு நியாயப்படுத்தக் கூடிய அறிவிப்பு என்பதில் ஐயமில்லை.

ஒருவகையில் மிக வெற்றிகரமான ஒரு முயற்சி இது என்றும் கூறலாம்.

ஆம், புலிகள் கொஞ்சமும் அங்கீகரிக்க முடியாத பாதை திறப்பு ஆலோசனைகளை வெளியிடுவதும், பிறகு பொதுமக்களது நலன்களைப் பாதிக்கும் விதத்தில் புலிகள் நடக்கிறார்கள் என்று காட்டுவதும் தான் அரசின் முயற்சிகளாக உள்ளன.

இந்த இரட்டைத் தன்மை நாடகத்தில் உள்ளார்ந்து ஓடும் ஒரு அம்சம் தான் எதையும் செய்ய மாட்டோம் என்று மறைமுகமாக தெரிவிப்பதாகும்.

அரசாங்கம் அதைத் தொடர்ச்சியாக அறிவித்துத் தான் வந்திருக்கிறது, ஏமாந்த் சோணகிரிகள் எல்லாம் வேறு யாரும் அல்ல, சாட்சாத் தமிழ் மக்களே தான்!

# ஆற்றில் போட்டுக் குளத்தில் தேடும் படையினர்

'நியுகோ எண்டியூரன்ஸ்" கப்பல் குண்டு வைத்துத் தகர்த்து மூழ்கடிக்கபட்டதன் மூலம் திருகோணமலையின் கேந்திரத் துறைமுகப் பகுதியின் பாதுகாப்பு மீண்டும் ஒரு தடவை உலக அரங்கில் கேள்விக் குறியாகியுள்ளது.

350பேர் பயணம் செய்யக்கூடிய இக்கப்பல் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தது. ஆறு கோடி ரூபா பெருமதியான இது பாலமூர்த்தி என்பவரது பொறுப்பில் இருந்தது. வடபகுதிக்கான பிரயாணத்தில் சில காலம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. பின்னர் அவ்வொப்பந்தம் முடிவடைந்ததும், திருகோணமலை - மூதூர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தம் முடிவடைந்து சுமார் ஒரு மாதகால இடைவெளிக்குப் பின் மீண்டும் அதே சேவைக்கு உட்படுத்தப்பட்டு ஒரு வார காலத்தில் இது தகர்க்கப்பட்டிருக்கிறது.

ஜூலை 25 காலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதுகாப்புத் தரப்பு அதிர்ந்து போயுள்ளது என்று தான் கூற வேண்டும். ஆடிமாதம் பிறந்து விட்டால் பொதுமக்கள் ஆடிப்போகுமளவுக்கு பாதுகாப்புத் தரப்பினர் சோதனைகளை முடுக்கி விடுவார்கள். இளைஞர்கள் துருவித் துருவி சோதனையிடப்பட்டு விசாரிக்கப்படுவார்கள் முதியோர்கள் கூட அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டு உடல் தடவப்படுவார்கள். இந்தச் சோதனைகளின் மத்தியில் தான் இக்கப்பல் தகர்ப்பு நடந்திருக்கிறது.

இக்கப்பல் பாதுகாப்பாக (?) இறங்குதுறையில் கட்டப்பட்டிருக்கிறது. இறங்குதுறையில் துறைமுகம் பொலிஸ் நிலையம் உள்ளது. அதன் எதிர்ப்புறத்தில் சுங்கத் திணைக்களம் உள்ளது. தகர்ப்புக்குள்ளான கப்பலுக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் இடையிலான தூரம் இருப்பதைந்து யார் கூட இருக்காது. சுங்கத்திணைக்களம் சுமார் 35 யார் தூரத்தில் இருக்கிறது.

வழக்கமாக இப்பகுதிக்கு சாதாரண மக்கள் வரமுடியாது. மூதூர் செல்ல வரும் பயணிகள் கூட தெருவில் நிறுத்தப்பட்டு பயணத்துக்கு பதினைந்து நிமிடங்கள் இருக்கும் முன்னமே உள்ளே பலத்த சோதனைகளின் பின்னர் தான் அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறான இறுக்கமான ஏற்பாடுகள் உள்ள பகுதியில் தான் அதிகாலையில் குண்டு வைக்கப்பட்டிருக்கிறது.

சம்பவதினம் காலையிலோ இலங்கை வானொலி வெகு சமர்த்தாக "தற்கொலைக் குண்டுதாரியின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது" என்று அறிவித்து விட்டது.

இலங்கை வானொலி அறிவித்த இந்தத் தற்கொலைக் குண்டுதாரியின் வயது 54. பெயர் சவரிமுத்து அருள்நாயகம். நான்கு பிள்ளைகளின் தந்தை. துறைமுகப் பொலிசார் உட்பட பலராலும் "டடா" என்று அழைக்கப்படுவதன் மூலம் "டடா" என்ற பெயரிலேயே பிரபலமானவர். அதே கப்பலில் முக்கிய பொறுப்பில் இருக்கிறார். சம்பவம் நடந்த இரவு மேற்தளத்தில் படுத்து இருந்தவர் குளிர் காற்றுக் காரணமாக சாமத்தில் கப்பலின் உள்ளே சென்று படுத்திருக்கிறார். வெளியே படுத்திருந்தால் அவர் உயிரோடு தூக்கிவீசப்பட்டிருக்கவும் கூடும். இந்த அதிபயங்கர தற்கொலைக் குண்டுதாரியின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பதில் நீதிவான் மு.கோ. செல்வராசா உத்தரவிட்டிருகிறார்.

சண்முகம் என்ற கப்பற் பொறியியலாளரும் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் ஜரிஸ்மோனா விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட போது சுமார் இரண்டு வருடங்கள் தடுப்பு நிலையிலிருந்து விடுதலையானவர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சம்பிரதாயப்படி வடகாரை வீதி, மத்திய வீதி, பிரதான வீதி ஆகியவை சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் மீட்பது என்பது எல்லோராலும் முடிந்த காரியமா?

- விவேகி

# திருமலை...

2ம் பக்கத் தொடர்ச்சி

இச்சம்பவம் பிற்பகல் 12.45க்கு இடம்பெற்றிருக்கிறது. காயமடைந்தவர் சிங்களவர் என்பதால் கசிப்பு விற்கும் சிங்களவர் கும்பலினால் ஒரு சில தமிழர்கள் தாக்கப்பட்டராயினும், ஊரவர்கள் தலையீட்டால் விடயம் அமுங்கிப் போய் விட்டது.

இவர்கள் கசிப்பு வடித்து விற்பதெற்கென்றே மூதூர் நகர மையத்தில் அடாத்தாகக் குடியேறிவர்கள். சிறு சிறு கொட்டில்களைப் போட்டுக்கொண்டு கசிப்பு விற்பது ஆபாசப் படம் காண்பிப்பது என்று பிழைத்துக் கொள்கிறார்கள்.

திருகோணமலையிலும் மட்டிக்களிக்கடலுக்கு எதிரே உள்ள தரிசு நிலத்தில் திடீரெனச் சிங்களவர்கள் கொட்டில்கள் போட ஆரம்பித்துள்ளனர். சுமார் 42 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது இந்த இடம். 1995ல் தமிழர்கள் இக்காணியில் குடியேற முற்பட்ட போது தமிழர்களுக்கெனச் சொந்தமான காட்டிக் கொடுக்கும் குணத்தாலும், "தாம் தீம்" என்று குதித்து வீராவேசமாக எதிர் நடவடிக்கை எடுத்த தமிழர்களான காணிச் சொந்தக் காரர்களாலும் இம்முயற்சி வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தப்பட்டது.

' ஆனால், இப்போது சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்படும் போது காணிச் சொந்தக்காரர்களான தனியாரும் ஆலயங்களின் நம்பிக்கை நிறுவனங்களும் வாய்பொத்தி நிற்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. திருகோணமலை நகர வாக்காளர் இன விகிதாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவல்ல இக்குடியேற்றத்தை அரசியல்வாதிகளாலும் தலையிட்டு நிறுத்த முடியாது போனால்... திருகோணமலையைக் "கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்"'

## நீலன் திருச்செல்வம் அவர்களின் படுகொலையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

- மோர்ஜ் அறிக்கை

தமிழ் சமூகத்திலிருந்து உதித்த அறிவுஜீவியான கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களை படுகொலை செய்ததை எமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது. இன சமாதானத்தை உறுதிப்படுத்தி நாட்டின் ஐக்கியத்தை பாதுகாக்க தியாகத்துடன் செயற்பட்ட இவ்வாறான சிரேஷ்ட நபரை படுகொலை புரிந்ததன் மூலம் மீண்டும் ஒருமுறை எமது சமூகத்தில் உறுதியடைந்து வரும் மாற்று கருத்துக்களுக்கு வாய்ப்பு அற்ற தன்மையும் வெளிப்படுகின்றது. அத்துடன் தமிழ் சமூகத்தை கிரமமாக பலியெடுத்து வரும் மிலேச்ச . தீவிரவாத, பாசிச தன்மைகளின் வெளிப்பாடும் தெரியவருகின்றது.

இலங்கையில் இன சமாதானத்தை மீண்டும் உறுதிப்படுத்த செயற்பட்ட கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் தமிழ் சமூகத்திற்கு மட்டுமன்றி இலங்கை மக்களுக்கு தந்த செய்தி, அனைத்து வித அடிப்படைவாதத்திற்குள் அகப்படாமல் இலங்கையில் இன சமாதானத்தை ஏற்படுத்தும் நம்பிக்கையை ஏற்படுத்தலாகும்.

தமிழ் சமூகம் இந்த அரசு மீது வைத்த நம்பிக்கையை வீண்போகச் செய்யாது புதிய யாப்பு திட்ட வரைவுப் பிரதியை பாராளுமன்றத்தில் சமாப்பித்து எதிர்கட்சிகளின் ஆதரவினைப் பெற்று மாற்றங்களுக்கும் வாய்ப்பு வழங்கி இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த துரிதமாக செயற்பட பின்னணியை ஏற்படுத்த முனைந்து செயற்பட்ட கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் அந்த தியாகத்தின் காரணமாக தமது வாழ்வை தியாகம் செய்ய நேர்ந்தது.

இலங்கையில் இனச் சமாதானத்தை ஏற்படுத்த கலாநிதி நீலன் போன்றவர்களுடன் செயற்பட்ட மோர்ஜ அமைப்பிற்கு கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களை படுகொலை செய்ததன் மூலம் ஏற்படும் இடைவெளியை நிரப்ப காலம் தேவைப்படும். இருப்பினும் சமாதானத்திற்காக முன்னர் உயிர்நீத்தவர்களைப் போன்று இன்று எம்மை விட்டுப் பிரிந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் அவரின் பெயரால் எதிர்கால சமாதானத்திற்காக மீண்டும் மீண்டும் தியாகபூர்வமாக செயற்பட திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

ஒரு முறை சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டது போல் போர் களத்தில் எதிரொலிக்கும் துப்பாக்கி ரவைகளுக்கு பதில் தர்க்க அறிவை பயன்படுத்துபவர் யாரோ அவர் இறை தூதர் என்றதன்படி இலங்கையில் சமாதானத்தை கொண்டு வர செயற்பட்ட கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் எமக்கு சமாதானத்தின் இறைதூதராவார்.

அவருக்கு எமது அஞ்சலிகள்

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன் , இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03, அச்சப்பதிவு : பிறின்ற் இன், இல. 07, செக்கட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 27.04. 1999